ரிஜிஸ்டர் நெ. M. 2992.

தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

| மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஹூ தை-மீ 1-உ (14—1—1934) |
|---|---|

காந்தியத்தைக் ஒழிப்பது வர்ணாச்சிரமத்[...] ஒழிப்பதாகும்.

காந்தியார் பணக்காரர்க[...]

காந்தியார் பார்ப்பனரின் ஐ[...]

## ஏன் சுயமரியாதை இயக்கத்தில் சேரவேண்டும்?

1. அது ஒன்றேதான் மக்கள் சமூகவாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக்கூடாது என்ற சமதர்மத்துக்கு போராடுகின்றது.

2. அது ஒன்றேதான் மனித[...] பொருளாதாரத்தன்மையில் [...] வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

3. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சரிசமத்துவம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

4. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஜாதி, மதம், வருணம், தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக தோழமை வேண்டும் என்ற சமதர்மத்திற்குப் போராடுகின்றது.

5. அது ஒன்றேதான் உலகில் உழைப்பாளி, முதலாளி என்பது போன்ற பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும் சரிசமமாகப் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அனுபவிக்க வேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

6. அது ஒன்றேதான் ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும் எவ்விதத்திலும் அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத் துக்குப்போராடுகின்றது.

[...] வர்ணாச்சிரமத்தின் வேறு வேஷம்.

கதர் [...] புரட்சிக்கு முட்டுக்கட்டை.

தேசீ[...]படுத்து முதலாளிகளின் ஆட்சி.

# கத்தோலிக்கர்களின் வீண்கூச்சல்.

இந்நாலில் கத்தோலிக்க மதப்பிரசாரத்தின் மடமையையும், மேனுட்டில் கத்தோலிக் மதத்தின் ஆபத்தான நிலையையும் அமெரிக்க நாஸ்திக அபிவிருத்தி சங்கத்தார போப்பிற்கு எழுதியுள்ள ஓர் கடிதமும் போப்விடுத்த அறிக்கையும் ஆராய்ந்து எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை 0—0—6.

நூறு புத்தகங்களுக்குக் குறையாது ஆர்டர் செய்தால் தபாற் செலவுடன் ரூ. 1—8—0. 500க்கு தபால் செலவுடன் ரூ. 5—0—0.

விலாசம்:—

குடி அரசுப்பதிப்பகம், ஈரோடு.



## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மைமை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியே[illegible]ம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் [illegible]ம். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்[illegible] ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம[illegible] கோ.,
சித்த-ஆயுர்வேத [illegible]சாலை,
தேப்ப[illegible] திருச்சி.





உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டவை. பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவரென்றும், சமஸ்தான வைத்தி[illegible]ரென்றும் பிரக்யாதி வாய்ந்திரு[illegible] நீங்கள் அறியீர்களா? எமது மருந்துகளில் ஒப்புயர்வற்றது.

## மகா வீரிய

# தங்கபஸ்பம்.

வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், குன்மம், சூலை முதலிய சகல கொடிய வியாதிகளும் நீங்கும்.

அழிந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வசக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒருமுறை உபயோகித்துப்பாருங்கள்.

24-நாள் பஸ்பம் விலை ரூ. 10.

## சர்வபடை நிவாரணி.

சகல [illegible]படை, ஊரல், படர்தாமரை இவைகள் ஒரே நாளில் உதிர்[illegible]ம். புட்டி 1க்கு 0—8—0.

அன்னிய நா[illegible]ன்பணம் அனுப்பவேண்டும்.

மலையப்ப[illegible] வைத்தியசாலை, பழனி.



## விவாக விடுதலை.

(இந்து மனைவியருக்கு இன்றியமையாதது)

ஆசிரியர்:

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.

ஆராய்ச்சி நிரம்பிய இந்த அரிய நூல் ஒவ்வொரு மாதர் கையிலும், சீர்திருத்தக்காரர் சமதர்மி கையிலும் இன்றியமையாமல் இருக்க வேண்டியது. "'விவாக விடுதலை' என்னும் வேரின்றி மாதர் சுதந்தரம் என்னும் மரம் இல்லை" என்பது எவ்வாறென அறிய விரும்பின் இந்நூலை இன்றே படித்தல் வேண்டும்.

விலை அணா 4.

கிடைக்கும் இடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

எஸ். தங்கவேலு,
கீழ ஆண்டார் வீதி, தெப்பக்குளம், திருச்சி.



## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்ட்,
கோலார் தங்கவயல்.


ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# சுயமரியாதைக்காரர்கள் காந்தியுடன் சம்பாஷணை.

## பார்ப்பனீயக்கொடுமைக்கு காந்தியாரும் உட்பட்டவராம்.

## 1316 பேர் கையெழுத்திட்ட மகஜர்.

## காந்தியாரின் துக்கக்குறி.

21-12-33 காலை 8-30 மணிக்குத் தோழர் எஸ். ராமனாதன் அவர்களும், மற்ற சுயமரியாதைத் தோழர்களும் தோழர் காந்தியார் அவர்களை தோழர் நாகேசுவரராவ் பந்தலு அவர்கள் வீட்டில் பேட்டிகண்டு பேசினார்கள். பேட்டிக்கு காந்தியவர்கள் 15-நிமிஷமே ஒதுக்கிவைத்திருந்தும் 35-நிமிஷம் வரையில் அவராகவே ருசியோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

தோழர் ராமனாதன் அவர்களுடன் சென்றிருந்த தோழர்கள்:—

கே. எம். பாலசுப்ரமண்யம், எஸ். குருசாமி, குஞ்சிதம், பொன்னம்பலனார், ப- ஜீவானந்தம், சாந்தம், சகுந்தலா, ரங்கனாதன், சம்மந்தம், முத்து, தங்கராஜ் முதலியவர்கள்.

சம்பாஷணை சமயத்தில் காந்தியாரோடு இருந்தவர்கள் தோழர் மீராபாயும், இரண்டு காரியதரிசிகளும் அவர்கள் சம்பாஷணையின் இடையில் சென்னை தோழர் கே. பாஷ்யமய்யங்கார், அவர்களும் மற்றும் மூன்று பெண்களும் வந்து கலந்துகொண்டார்கள்.

ஆரம்பத்தில் தோழர் காந்தியார் தோழர் ராமனாதன் அவர்களை நோக்கி "நீங்கள் பகுத்தறிவுஇயக்கத்தைச் சேர்ந்தவர் என்று (Rationalist) நேற்றுத்தான் எனக்குத் தெரியவந்தது" என்று சிரித்துக்கொண்டே கூறினார். தோழர் ராமனாதன் அவர்கள் தன்னுடன் வந்தவர்களைக் காட்டி "இவர்கள் சுயமரியாதைக்காரர்கள்; தங்களைக் கண்டு பேச வந்திருக்கிறார்கள்" என்று கூறி அறிமுகப்படுத்தினார்.

காந்தியார்:- (தலையை அசைத்துக்கொண்டே) "சந்தோஷம்" என்று கூறி, "அகவே நீங்களெல்லோரும் அறிவுவாதிகளா?" என்று கேட்டார். அதற்கு தோழர் ரரமனாதன் அவர்கள் "அறிவுவாதி, சுயமரியாதைக்காரன்" அகிய இரண்டு வார்த்தையும் ஒரே பொருளைக் குறிப்பதுதான் என்று கூறினார்.

காந்தியார்:- "சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி நான் நன்கு அறிவேன்-

காந்தியார் தோழர் ராமனாதனை நோக்கி: "தாங்கள் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?"

ராமனாதன்:- 'Rationalist) என்ற பத்திரிகையை நடத்திக்கொண்டிருக்கிறேன். தங்களுக்குக்கூட அதைத் தொடர்ச்சயாக அனுப்பிக்கொண்டு வருகிறேன்! தாங்கள் பார்த்திருக்கலாமே-

கா:- [வியப்புடன்] இல்லையே! நான் பார்க்கவே இல்லை!

ரா:- தங்களுடைய [Wardha] வார்தா விலாசத்திற்குத் தானே அனுப்புகிறேன்?

கா:- இல்லையே! ஒன்றுகூடக் கிடைக்கவில்லையே!

ரா;- ஒன்றுவிடாமல் அனுப்பியிருக்கிறேன்!

கா;- காரியதரிசியைப் பார்த்து குஜராத்தியில் ஏதோ கேட்டார்.

ஒரு காரியதரிசி குஜராத்தியிலும், மற்றொருவர் ஆங்கிலத்திலும் "நேற்றுத்தான் ஒரு பிரதி கிடைத்தது" என்று கூறினார்கள்.

"நாங்கள் ஹரிஜனங்கள் என்ற பெயரை வெறுக்கிறோம். எங்களுக்கு இந்துமதமோ வேறு எந்த மதமோ தேவையில்லை......... என்று அச்சிட்டு அதில் 1316 தாழ்த்தப்பட்ட மக்கள் கையெழுத்திட்டிருந்ததை தோழர் தங்கராஜ் அவர்கள் தோழர் காந்தியாரிடம் கொடுத்தார், காந்தியார் அவர்கள் அதை வாங்கி ஒவ்வொரு வரியையும் படிக்கும்போதே [Yes, Yes] ஆமாம், ஆமாம் என்று உச்சரித்துக்கொண்டே அதைப் படித்து முடித்தார்.

கா;- உடனே, 'நீங்கள் கூறுவது சரிதான். நான் செய்யும் ஹரிஜனப் பிரசாரமானது ஹிந்து மதத்தில் இருக்கப் பிரியப்படுகிறவர்களுக்கே யொழிய மற்றவர்களுக்கு இல்லை. நீங்கள் செய்யும் வேலையும் நான்செய்யும் வேலையும் ஒன்றுதான்' என்றுகூறி, மகஜரில் [Resent] வெறுக்கிறோம்" என்னும் வார்த்தையைக் கண்டு சற்று மனம் புழுங்கினவர்போல் இந்த வார்த்தையை உபயோகப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை" யென்றும் அப் பெயர் [ஹரிஜனம்] விரும்பியவர்களுக்கே வழங்கப்பட்டதென்றும் வேண்டாதவர்களுக்குக் கட்டாயமாக அளிக்கப்படவில்லை யென்றும் கூறினார்

ரா:- அது மத சம்பந்தமான பெயராய் இருத்தலால் சுயமரியாதை உணர்ச்சியுடையவர்கள் அதை வெறுக்கிறார்கள்.

கா:- அதற்குப் பதில் கூறுவதற்குள் தொழர் கே. எம். பாலசுப்ரமண்யம் காந்தியாரை நோக்கி "இதுவரை இந்துசமூகத்திற்குப் புறம்பாக இருந்தவர்களை ஆலயப் பிரவேசத்தின் மூலம் இந்துக்களாக்கி மதத்திற்கடிமையாக்குதல் தவறல்லவா?

கா:- "அவர்கள் எக்காலத்திலும் இந்துக்களாகவேதான் இருந்துவந்திருக்கிறார்கள்."

கே. எம். பாலன்:- "பொருளாதாரத்தில் நல்ல நிலைமை அடையாமல் இருக்கும்வரை ஆதிதிராவிடர்கள இத்தகைய கோவில் நுழைவால் ஒருக்காலும் முன்னேற்றமடைய மாட்டார்கள்."

கா:. "அதை நானும் ஒப்புக்கொள்கின்றேன். இருந்தாலும் மதவுணர்ச்சி அவர்களுக்கு அவசியம் என்பதும் என் அபிப்பிராயமாகும்.

கே. எம். பாலன்:- "இந்து மதத்தில் இருந்து கஷ்டப்பட்டுக் கோவிலில் ஒன்றுமில்லை என்று ஜாதி இந்துக்கள் அதைவிட்டு வெளியே வந்துகொண்டிருக்கும் போது நீங்கள் ஏழுகோடி மக்களை இத்தகைய கஷ்டத்திற்காளாக்குவதேன்?"

கா:- "நான் அப்படிக் கருதவில்லை. உண்மை இந்துமதத்தால் நன்மையேதவிர தீமை எதுவும் இல்லை.

கே. எம். பாலன்;- உண்மை இந்துமதத்தை உணர்ந்துகொண்டிருப்பவர் நூற்றுக்கொருவர்கூட கிடையாது. ஏனைய மக்கள் எல்லாம் மூட நம்பிக்கையிலேயே ஆழ்ந்துகிடக்கின்றனர்."

கா:- "அது சரியே, எனினும் மூடநம்பிக்கை என்பது எல்லாரிடத்திலும் உண்டு. [Rationalist] ரேஷனலிஸ்ட் என்னும் பகுத்தறிவாளிகளிடமும் விஞ்ஞானிகளிடமும் மூடநம்பிக்கை(Superstition) என்பது உண்டு."

ராமநாதன்;நம்பிக்கை என்பது விஞ்ஞானிகளிடம்பரிசீலனை[Experimental Stage) காலத்தில் இருத்தல் இயல்பே. ஆனால் மதவாதிகளிடம் அது எக்காலத்தும் நீங்காமல் இருந்துவருகிறது அல்லவா?"

கா,- "நீங்கள் என்ன கூறினாலும் நீங்களும் என்னைப்போல் மதவாதிகள்தான். நானும் உங்களைப்போல் பகுத்தறிவு வாதியே. என்னுடைய மதம் தெளிவான பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டது."

கே. எம். பாலன்:- அப்படியானால் தாங்கள் 'மதம்' [Religion] என்னும் வார்த்தைக்கு வேறானதும், விபரீதமானதும் ஆன பொருள்கொடுத்து வருகிறீர்கள்."

'மதம்' என்னும் வார்த்தைக்குப் பொருள் என்னவென்று காந்தியார் கே. எம். பாலன் அவர்களைக் கேட்க அவர் பதில் கூறுமுன் தானே கூறினார்,

சற்றுப் பொறுத்து, தனது மதமானது விஞ்ஞான முறைக்கு ஒட்டியது என்றும், தான் ஒரு பெரிய விஞ்ஞானி என்றும் காந்தியார் கூறவே,

ராமநாதன் 'நான் அதைஒப்புக் கொள்ளமாட்டேன். தாங்கள் வஸ்துக்களைப்பரிசீலனையும், ஆராய்ச்சியும் செய்து இருக்கிறீர்களா? அல்லது பிராணிகளை அறுத்துப் பார்த்திருக்கின்றீர்களா?

கா:- "இல்லை. நான் அவ்வாறு சர்வசாதாரணமான அழியக்கூடிய பொருள்களை ஆராய்ச்சி செய்வில்லை என்றாலும், நித்தியமானதும், அழிவில்லாததுமான உடம்புக்கப்பாலான பண்டங்களை நான் அறுத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்துள்ளேன. ஆதலால்தான் புரொபசர் ஈன்ஸ்டின் [Professor Eeinstein] என்பவர்கூட என்னை ஓர் பெரிய விஞ்ஞானி என்று கூறியுள்ளார்.'!

(அனைவரும் சிரித்தனர்)

காந்தியார் பின்னும் "மக்களது ஆன்ம விஷயங்களை எல்லாம் நான் ஆராய்ச்சி செய்துள்ளேன். வருணாச்சிரமம் என்னும் தர்மம் மக்களுக்கு அவசியமேயாகும்.

என்பது என் முடிவு" எனக் கூறினார்.

ரா:- "வருணாச்சிரமத்தை வைத்துக் கொண்டிருக்கிறவரையில் கோவில் நுழைவால் தீண்டாமை போய்விடுமா?

கா:- "போய்விடும். எனது வருணாச்சிரமதர்மத்தின்படி சமூகமானது தொழில் வேறுபாட்டால் [Horizontal] சமத்துவமான பிரிவுகளையுடையது. கீழ் மேலான [Vertical] பிரிவினையுடையது அல்ல.

ரா:- "அப்படியானால் தாங்கள் முன்பு காரைக்குடியில் என்னிடம் கூறிய வருணாச்சிரமத்தைவிட இது மாறுபட்டதாகக் காணுகின்றதே! அந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டுவிட்டீர்களோ?"

கா:- [பரபரப்புடன்] "இல்லை. இல்லை. ஒரே அபிப்பிராயத்தைத்தான் கொண்டுள்ளேன். எனது வருணாச்சிரமப்படி ஒன்றாக எல்லாரும் பிராமணர்கள்; அல்லது எல்லோரும் சூத்திரர்கள், இருந்தாலும் மக்களுக்குள் வித்தியாசம் பரம்பரைத் தொடர்பினால் [Heridity] இருக்கத்தான் செய்யும். காணாததால்மட்டும் ஒரு பொருளை இல்லை என்று சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. எலக்ட்ரிசிட்டியின் கரண்ட் [Electrical Current] என்பது நமது கண்களுக்குப் புலப்படாத ஒரு பொருள்தான். இருந்தாலும் அதன் சர்வ சக்தியையும், அது சாதிக்கும் பல காரியங்களையும் யாரால் மறுக்கமுடியும்?"

கே. எம். பாலன்:- "தாங்கள் இவ்வாறு சிந்தனைசக்தியை உபயோகித்துக் கஷ்டப்பட்டுக் கண்ட உண்மைகளை மூட நம்பிக் கையில் மூழ்கியிருக்கும் கோடிக் கணக்கான மக்கள் எவ்வாறு தெரிந்துகொள்ள முடியும்!"

என்று கூறி முடிப்பதற்குள் தோழர் காந்தி கலகலவென்று சிரித்துக்கொண்டே கையை நீட்டிக்கொண்டு தோழர் பாலசுப்ரமணியத்தை நோக்கி,

[God save you from perdition] கடவுள் நரகத்திலிருந்து உம்மைக் காப்பாற்றட்டும். அப்படியானால் கோடிக்கணக்கான மக்கள் உமது பகுத்தறிவியக்கத்தை எவ்வாறு கைப்பற்றமுடியும்?" என்று உரத்துக் கூவினார்.

மற்றவர்கள் அனைவரும் கூடச் சேர்ந்து சிரித்தனர்.

குருசாமி:- "கோவிலில் தாழ்த்தப்பட்டவர்களைத் தற்காலம் சூத்திரர்கள் என்பவர்கள் போகும் இடம்வரையில்தானே அனுமதிக்க வேண்டுமென்று ஓரிடத்தில் கூறியிருக்கிறீர்கள்?"

கா:- "இல்லை. இல்லை ஒருநாளும் சொல்லவே இல்லை."

கு:- "ஆம். தாங்கள் கூறியிருப்பதாகச் சென்னைப் பத்திரிகைகளில் எல்லாம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது"

கா:- "அப்படி இருந்தால் காட்டுங்கள் பார்ப்போம்."

ராமநாதன்:- "அப்படியானால் நாங்கள் கூறுவது தவறு?"

கா:- "ஆம் தவறுதான். ஆனால், பத்திரிக்கைகள் நான் கூறுவதை சந்தர்ப்பத்தைவிட்டு பிரித்துப் பிரசுரிப்பதால் இத்தகைய குற்றம் நேரிடுகிறது. ஜாதி இந்துக்கள் எவ்வளவுதூரம் செல்லுகிறார்களோ அதுவரை ஹரிஜனங்களை அனுமதிக்கலாம் என்பதுதான் என் அபிப்பிராயம்."

குருசாமி:- "தங்களை ஹரிஜனப் பிரசாரத்திற்காக வரவழைத்துத் தங்களைச் சூழ்ந்திருக்கும் அத்தனை பார்ப்பனர்களும் ஆஷாடபூதிகள் என்பதையும், புரட்டர்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்களா?"

கா:- "எல்லோரும் அப்படி இல்லை"

கு:- "ஆமாம். 100-க்கு $99\frac{3}{4}$ பார்ப்பனர்கள் அப்படித்தான். எங்களுடன் தயவுசெய்து திருவல்லிக்கேணித் தெருக்களுக்கும் மைலாப்பூர் தெருக்களுக்கும் வருவீர்களானால் அத்தனை பார்ப்பனர்கள் வீட்டிலும் "பார்ப்பனர்களுக்குமட்டிலும் வாடகைக்கு விடப்படும்." To let for Brahmins only என்னும் போர்டு தொங்கவிட்டிருப்பதைக் காணலாம். இதே ஆசாமிதான் இன்று தங்களோடு ஹரிஜனப் பிரசாரம் செய்கிறார்கள். இது எவ்வளவு அயோக்கியத்தனம் என்று பாருங்கள்."

கா:- [சிரித்துக்கொண்டே] பதட்டம் வேண்டாம், நானும் பார்ப்பனக் கொடுமைக்கு ஆளாகியதுண்டு, இன்னும் ஆளாகிவருகிறேன். அறிவும், கல்வியும் இருக்கும் ஒரு கூட்டம் மற்ற கூட்டங்களின்மேல் ஆதிக்கம் செலுத்துதல் இயல்பே. உதாரணமாக கணவனையும், மனைவியையும் எடுத்துக்கொண்டால் கணவன் மனைவியின்மேல் ஆதிக்கம் செலுத்துவது இயல்பு. என் மனைவி எனக்கு அடிமையாக இருந்தால். இன்னும் இருக்கிறாள். இதிலிருந்து கனவனுக்கும் மனைவிக்கும்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க,

# தமிழன்பர் மகாநாடு.

## என்ன வியர்த்தம்?

(தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)

சென்றவாரம் சென்னையில் கூடிய தமிழன்பர் மகாநாட்டின் நடவடிக்கையைக் குறித்து வருத்தமடையாத தமிழ் நாட்டின் அன்பர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று கருதலாம். இத்தப் பேரை முதலில் கேட்டபோது தமிழ்நாட்டு அன்பர்கள் கூடும் மகாநாடென மதித்துவந்தோம். ஆனால் கூடிய கூட்டத்தாரின் நடவடிக்கையைக் கேட்க மனம் வருந்துகிறது. தமிழ் பாஷையைக் குறித்துப் பேசி சிற்சில சொல் அழகைப்பற்றிய தீர்மானங்களைச் செய்தனரே யொழிய மக்களின் அழுகையைப்பற்றி ஒரு சொல்லேனும் பேசினார் இல்லை. அந்தக் கூட்டத்தில் சேர்ந்துள்ளோர்களில் அனேகர் விவேகசாலிகள். சிலர் தமிழ்பாஷையில் பாண்டித்யம் பெற்றவர்கள். இத்தியாதி அறிவுடையோர்கள் சதத்தைக் குறித்து அதாவது வெறுஞ் சொல்லைக் குறித்து இரண்டு நாள் கூடி வாதித்து வந்ததுதான் நமக்கு ஆச்சரியமாய் இருந்துவருகின்றது.

நமது நாட்டின் நிலைமை என்ன? நமது மக்களின் வாழ்வு எந்த நிலை? மக்கள் பசியால் வருந்துகின்றனரா? அல்லது திருப்திகாமாக வாழ்கின்றனரா? நாட்டின் சுகாதாரம் எந்தமட்டில் குறைவுபட்டிருக்கிறது? ஆயுள் நீண்டு வருகின்றதா? அல்லது குறைவடைந்து வருகின்றதா? பெண்மக்கள் கவலைபற்று வாழ்கின்றனரா? குழந்தைகள் சுகித்து வாழ்கின்றனவா? உடல், பொருள் காக்கப்பட்டு வருகின்றனவா? இத்தியாதி உயிர்களுக்கு அத்தியாவசியமாகிய விஷயங்களில் தங்கள் கருத்தைச் செலுத்தாமல் சொல் கோர்வைகளைப் பற்றி அறிஞர்கள் தங்கள் காலத்தைப் போக்குவதென்றால் நமது நாட்டுக்கு இனி என்னதான் இருக்கிறது. நமது தேசமக்கள் வறுமையாலும், நோயாலும், மூட மதங்களாலும் விஷயஞானமின்மையாலும் வாடி வதைந்து வருவதைக் கண்ணாரக் கண்டும், செவியாறக் கேட்டும் இரண்டு நாளாக வெறுஞ் சொற்களின்மேல் தங்கள் கவனம் முழுமையும் செலுத்திவந்ததைக் கேட்க மனிதருக்குள்ள சொல்பசக்தி என்ன வியர்த்தமாய் போகின்றதைப் பாருங்கள்!

தமிழன்பர் மகாநாட்டில் கூடியவர்களில் பெரும்பான்மையோர் கடவுள் பக்தர்கள். கடவுளை அனுதினமும் சிந்தித்துவருகின்றார்களோ, இல்லையோ அது அவர்களுக்கேதெரியும். ஆனால் கடவுள் அன்பர்கள் மக்கள் மேல் அன்புவைக்காது வெறும் சொல்லின்மேல் அன்பு வைத்ததென்னை? மக்களின் சீர்திருத்தத்திற்கு மேலா சொல்லின் சீர்திருத்தம்? தாங்கள் அனுபவிக்கும் உலக சுகபோகங்களுக்கு உழைத்துவருவது மக்களா? அல்லது சொல்லா? கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் பரிகாரங்களைத் தேடி உதவுபுரிகின்றவர்கள் மாந்தரா? அல்லது வெறுஞ் சொற்களா? என் இதை நமது கற்றோர்கள் நன்கு கவனிக்கவில்லை.

மக்களுக்குள்ள சக்தி மிகச் சொற்பம். இந்த சக்தியை அளவு எடுக்கலாம். எவ்வளவு உண்கின்றான்? அந்த உணவின் சக்தி என்ன? இவ்விரு கணக்கால் மனிதன் உட்கொள்ளும் சக்தியை நிர்ணயிக்கலாம். இந்த உட்கொள்ளும் சக்தியில் எவ்வளவு செலவு செய்யப்படுகின்றது. இதையும் கணக்கெடுக்கலாம். வரவிலிருந்து செலவைக்கழித்தால் எவ்வளவு மிகுதி நிற்கின்றதென்பதையும் அளவு எடுத்துக்கொள்ளலாம். இவ்விதமாக கணக்கு எடுத்துப்பார்ப்பதில் மிகுதி ஒன்றுமே இல்லை என்று தெரிகிறது. பெரும்பான்மையோருக்கு போதுமான உணவு இல்லாமையால் அவர்களுக்குச் செலவுக்குத் தகுந்த வரவு இல்லாமலே இருந்து வருகிறது. இதனால் உலகிலுள்ள பெரும்பான்மை மக்களுக்கு சாதாரண தேக உழைப்புக்கும் போதுமான உணவு அகப்படாமையால், சக்தி குறைந்து அகால மரணமும், எளிதில் நோய்களுக்குப் பலியாகின்றனர். ஆனால் சம்பத்தைப்படைத்தோருக்கும், அதிகமாக சக்தி கிடையாது. இருக்கும் சக்தியைக் கொண்டுதான் அத்தியா விஷயங்களில் செலவிடவேண்டும். ஆதலின் மக்கள் வாழ்வை உயர்த்துவதற்கு இருக்கும் சொற்ப சக்தியை உபயோகப் படுத்துவது புத்திசாலித்தனமா? அல்லது வெறுஞ் சொற்களை அடுக்குவதில் தங்கள் சக்தியை உபயோகிப்பது புத்திசாலித்தனமா என்று கேட்கின்றோம்?

தமிழன்பர் மகாநாட்டில் கூடியவர்கள் கல்லாத சாமான்ய மக்களல்ல. அதில் வந்தவர்களில் அனேகர் கல்வி, கேள்விகளில் உயர்தரப் பதவி அடைந்தவர்கள். எது முக்கியம், எது முக்கியமல்ல என்பதை யோசியாததே இவர்களுடைய தோஷமே ஒழிய இவர்களுக்கு அறிவு

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க,

# மதவெறியால் சீரழியும் மனித சமூகம்.

சர்வ மதங்களும், சர்வ முதலாளித்துவமும் ஒழிந்து பகுத்தறிவு பரவி சமதர்மம் நிலவினாலன்றி மக்களுக்கு விமோசனம் இல்லை.

(கொழும்பு தோழர் I. M. இப்ராஹிம்)

உலகத்திள்ள ஒவ்வொரு மதத்தையும் ஸ்தாபித்த பெரியார்கள் அவர்களுடைய அறிவிற்கும், ஆராய்ச்சிக்கும் எட்டியதையும் இன்னும் வன்மைமிக்க இயர்க்கையின் பால் அவர்களால் அனுமானிக்கப்பட்ட சில அனுமானங்களையும் அக்கால மக்களுக்கு எடுத்துப்போதித்து அக்கால மக்களின் கேவல நிலைமையைச் சீர்திருத்துவதற்காக வேண்டி இரவு பகலாக உழைத்திருக்கிறார்கள். இம்மதஸ்தாபகர்களின் அனுமானம், பிரத்தியட்சம் என்பவைகள். எப்படி இருந்துவிட்டாலும இவர்களின் (மதஸ்தாபகர்களின்) அடிப்படையான நோக்கமெல்லாம் "கேவல நிலைமையிலிருக்கும் மக்கள் வாழ்க்கையை ஒழுங்குப்படுத்தவேண்டுமே அதற்கு என்ன செய்வது" என்னும் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டதாகவே அவர்களுடைய மதங்களிலிருந்தும், சரித்திரங்களிலிருந்தும் யூகிக்கவெண்டியதா இருக்கின்றனவேயன்றி, பகுத்தறிவிற்கும், ஆராய்ச்சிக்கும் எட்டாத விசேஷமான "ஆக்கவல்லவன், அழிக்கவல்லவன் அவனன்றி ஓரணுவும் அசையாது" என்னும் ஏதாவது இருப்பதாக யூகிக்க முடியவில்லை. மதஸ்தாபகர்கள் காலத்தில் சாதிக்கப்பட்டவைகள் எல்லாம் அவர்களுடைய (மதஸ்தாபகர்களுடைய) முயற்ச்சியால் சாதிக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி, "நிகரற்ற அருளாளன் அளவற்றை அன்புடையோன்" என்னும் சக்தியின் உதவியாலல்ல! என்பதைப் பகுத்தறிவின் உதவிக்கொண்டு மதங்களையும், சரித்திரங்களையும் ஆராய்ந்துபார்த்தால் இலேசாக உணர்ந்துகொள்ளலாம். எனவே தற்கால அறிவாளிகள் மதஸ்தாபகர்களின்மேல் வீண்பழியைச்சுமத்தி அவர்களைக் கேவலப்படுத்தாமல், அக்காலத்திய நிலைமைக்குத் தக்கவாறு அவர்களுடைய அறிவிற்குத் தட்டுபட்டமாதிரி மதஸ்தாபகர்கள் மக்களுக்கு செய்திருக்கும் நன்மைக்காகவேண்டி நன்றி பாராட்டி மதஸ்தாபகர்களை கௌரவபடுத்த வேண்டியது ஒவ்வொரு பகுத்தறிவு வாதியினுடைய கடமையாகும். ஆனால் கிறிஸ்தவப் பாதிரிகளோ கிறிஸ்துமதாபிமானத்தால் "இஸ்லாம்" மதஸ்தாபகரை பகுத்தறிவிற்கு முரணாகத் தாகுவதைப்பார்த்தால் ஒவ்வொரு பகுத்தறிவுவாதியும் வருந்தத்தான் செய்வார்கள். எனினும் பகுத்தறிவிற்கு ஒத்தமுறையில் யாரையும், எதையும் யாரும் எடுத்துச்சொல்லலாம். இத்தகைய பகுத்தறிவு வாதத்தை, பகுத்தறிவிற்கு முரணாகக்குற்றஞ் சொல்வதும் தடை படுத்துவதும் தவறாகுமன்றோ? இத்தகைய தவறை இன்றைய மதபக்தர்கள்தான் தாராளமாய் கையாளுகிறார்கள்.

இப்பெரியார்களால் (மதஸ்தாபகர்களால்) தோற்றுவிக்கப்பட்ட மதங்கள் எல்லாம் மதஸ்தாபகர்கள் இருக்கும்வரைக்கும் அக்காலத்திற்குத் தக்கபடி ஓரளவு ஒழுங்கான முறையில் அவர்களுடைய உத்தேசப்பிரகாரம் மக்களின் குறைபாட்டை நிவர்த்தி பண்ணக்கூடிய வழியில் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அம்மதஸ்தாபகர்கள் மறைந்தவுடன் அவர்களுடைய அடிப்படையான நோக்கங்களும் அவர்களுடன் மறைந்துவிட்டன. எனினும் மதப்பக்தர்கள் "மதஸ்தாபகர்கள் மறைந்துவிட்டால் என்ன? மதஸ்தாபர்களால் போதிக்கப்பட்ட மதங்களும், வாக்கியங்களும் அப்படியே இருக்கின்றனவே" என்று கூறலாம். ஆம், வாஸ்தவமே மதங்களும், வாக்கியங்களும் அப்படியே இருப்பதில் என்ன பயன்? அவர்களுடைய (மதஸ்தாபகர்களுடைய) முக்கியமான பகுத்தறிவு அவர்கள் மரணமடைந்தவுடன் அவர்களுடன் மறைந்துவிட்டது. எனவே அக்காலம் பகுத்தறிவால் இயற்றப்பட்ட "மதங்களையும், வாக்கியங்களையும் இன்றைய மக்களும், வருங்கால மக்களும் அப்படியே பின்பற்றவேண்டும்" என்று சொல்வதானால் மதஸ்தாபகர்களுடைய காலத்துடன் உலகமக்களின் பகுத்தறிவு முற்றுப்பெற்றிருக்கவேண்டும். அதல்லாமல் அதற்கப்பால் (மதத்திற்கப்பால்) யோசிக்கவோ, மதங்களையும், விசேஷத்தன்மையையும் மறுக்கவோ, பகுத்தறிவு மதத்திற்கப்பால் போகவோ முடியாமல் பகுத்தறிவு மழுங்கிப்போயிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் கடவுளையும், மதங்களையும் மறுக்காமல் கற்சிலையைப்போல் இருக்கமுடியும். அஃதன்றி இருப்பதனால்தான் பகுத்தறிவு வாதிகள் மதத்திற்காப்பாலும் வாதித்துக்கொண்டு போகிறார்கள். எனவே பகுத்தறிவாதிகளைத் திட்டுவதும், குற்றம்சொல்வதும் ஞயமில்லையல்லவா?

மதஸ்தாபகர்கள் மறைந்ததிலிருந்து உலகத்தில் மதத்தின் பெயரால் நடப்பது என்ன? மக்களின் நன்மையையுத் தேசித்து யேற்படுத்திய மதத்தின் போர்வையை மதப் பாதுகாப்பாளர்களும், முதலாளிகளும், அரசாங்கங்களும் போர்த்திக்கொணடு மதத்தின் பேரால் மக்களை அடிமைப் படுத்துவது, மதத்தின்பேரால் மக்களை ஏமாற்றுவது, மதத்தின்பேரால் மக்களின் உழைப்பின் பயனை வறுமையில் தவிக்கும் மக்களுக்காவது கொடுக்காமல் உணக்கஸ்தலங்கள் உற்சவங்கள் முதலியவைகளுக்கு வீணேசிலவு, மதத்தின் பேரால்தொழிலாளிகளை-முதலாளிகளுடன் பொருளாதார அரசியல் சமத்துவத்திற்காக எதிர்த்துப் போராட விடாமல் (அதாவது உலகபோக போக்கியங்களை யெல்லாம், உலகமக்கள் எல்லோரும் சமமாக அனுபவிக்க விடாமல்) தடைப்படுத்தி வைத்திருப்பது மதத்தின் பேரால் மனிதனுக்கு எதிராக மனிதனை வீண்கலகம் செய்யத்தூண்டுவது, மதத்தின் பேரால் பல பிரிவுகளை யுண்டுபண்ணிக்கொண்டு மனிதனை மனிதன் வெறுப்பது முதலிய பல் வேறு அக்கிரமங்களே மதஸ்தாபகர்கள் மறைந்ததிலிருந்து மதத்தின் பேரால் இன்றைபவரைக்கும் உலகமெல்லாம் நடக்கின்றன எனவே இவைஇத்தனைக்கும் ஜவாப்தாரி யார்? மதகுருக்களும், முதலாளிகளும், அரசாங்கங்களுமே! இவர்கள் படுத்தும் "அநியாயங்களையும், அக்கிரமங்களையும், கொடுமைகளையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு கிளர்ச்சி செய்யாமல் இரு, எல்லாம் கடவுள் வைத்தபடியே நடக்கின்றன எனவே இந்த உலகில் படும் துன்பத்திற்கும் கஷ்டத்திற்கும் மறு உலகில் சுகம் அனுபவிக்க முடியும்" என்று பெரும்பான்மையான ஏழைகளையும், தொழிலாளிகளையும் சமாதானப்படுத்துவது (ஏமாற்றுவது) மதங்களே!

எனவே மதங்கள் மக்களை கொடுமைபடுத்துவதற்கு ஓர் சாதனமாய் இருப்பதனால் "இன்றைக்கு ஸர்வமதங்களையும் ஒழிக்கவேண்டும்" என்று பகுத்தறிவு வாதிகள் சொல்வதற்கு பக்தர்கள் "அதுகூடவே கூடாது! அதற்குப் பதிலாக (ஒழிப்பதற்கு பதிலாக) இன்றைக்கு மதங்களை சீர்திருத்தி யமைக்கலாம்" என்று வாதிக்கிறார்கள். ஆனால் இத்தகைய வாதம் கிஞ்சிற்றும் உபயோகமற்ற வாதமேயன்றி வேறல்ல! எனென்றால் இதற்கு முன்னும், இன்றைக்கும் எத்தனையோ மதசீர்திருத்தக்காரர்கள் மதங்களைச் சீர்திருத்த முயற்சித்தும் சிறிதும் முடியவில்லை! "என் முடியவில்லை"? யென்றால் "மதங்கள் எல்லாம் கடவுளாலேயே மக்களுக்கு வெளியாக்கப்பட்டவை, எனவே அவைகளைக் கூட்டவோ, குறைக்கவோ எனறும் அத்துடன் எதையும் சேர்த்துக்கொள்ளவோ கூடாது. கடவுள் தண்டிப்பார்" என்றும் மூடநம்பிக்கையே! மூடபக்தியே!! காரணம்.

## கடவுளால்தான் எல்லாம் ஆகிறதா?

கடவுளாலேயே மதங்களும் தீர்க்கதரிசிகளும் உண்டாக்கப்பட்டு-அனுப்பப்பட்டிருந்தால், ஏன் கடவுளையும் மதங்களையும், தீர்க்கதரிசிகளையும் மறுக்க முடியாமல் ஏற்றுக்கொள்ளக் கூடியமுறையில் மனிதனைக் கடவுள் சிருஷ்டிக்கவில்லை? கடவுளாலேயே மனிதனுக்கு மாத்திரம் எல்லாவற்றையும் விட சிரேஷ்டமான பகுத்தறிவென்பதை கொடுக்கப்பட்டிருந்தால் ஏன் அவன் (கடவுள்) கொடுத்த பகுத்தறிவே அவனை (கடவுளை) ஏற்றுக்கொள்வதில்லை? "அவனுதவியின்றி ஓரணுவும் அசையாது" என்றால் நாஸ்திகர்களுக்குக்கடவுள் இல்லையென்று சொல்வதற்தும், மதங்களை மறுப்பதற்தும் அவன்தான் (கடவுள்தான்) உதவி செய்கிறன் என்பதாதுமன்றே? எனவே கடவுள் நாஸ்திகவாதத்தை விரும்புகிறார் போலும!

ஆகையால் ஆஸ்திகர்கள் "நாஸ்திகம் கடவுள் சட்டத்திற்கு விரோதமானது" என்று பத்திரிகைகளிலும், புஸ்தகங்களிலும் எழுதுவதும், பிரசாரம் பண்ணுவதும் கடவுளுக்கு விரோதமாக பிரசாரம் பண்ணியதற்கு ஒப்பாகுமல்லவா? எப்படியென்றால் எல்லாவற்றிற்கும் அவனுதவி (கடவுளுதவி) செய்கிறான் அதேமாதிரி நாஸ்திகத்திற்கும் அவனுதவி செய்கிறான். எனவே கடவுள் உதவியால் நடைபெறும் நாஸ்திகத்திற்கு விரோதம் பண்ணுவது ஆஸ்திகச் சட்டப்படி கூடவே கூடாதல்லவா? எனினும் மதபக்தியினாலும், சுயசிந்தனையில்லாமையினாலும் பக்தர்கள் சொல்லக்கூடும் "கடவுளால் பகுத்தறிவென்று ஒன்று மக்களுக்கு கொடுத்திருப்பது கடவுளையும், மதத்தையும் மறுப்பதற்கல்ல. கடவுளையும் மதத்தையும் ஏற்றுக் கொள்வதற்குதான்" என்று "கடவுள் கொடுத்த" அந்த பகுத்தறிவுதானே கடவுளும் மதமும் இன்றைய மனித முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையா இருக்கிறதென்று கடவுளையும், மதங்களையும் மறுப்பதற்கு உதவி செய்கிறது எனவே கடவுளையும், மதங்களையும் மறுக்க கூடிய முறையில் "கடவுள் மனிதனை சிருஷ்டித்திருப்பதனால்" கடவுள் சிருஷ்டிக்க தெரியாமல் சிருஷ்டித்தமைக்காக வேண்டி பக்தர்கள் கடவுள் பேரில் வருத்தப்பட வேண்டுமேயன்றி பகுத்தறிவு வாதிகள்பேரில் வருத்தப்படவோ, பகுத்தறிவு வாதிகளை திட்டவோ கூடாது!

## சர்வமதங்களையும் ஒழித்து பகுத்தறிவுத்திட்டங்களை ஸ்தாபிக்க வேண்டும்.

சில மதசீர்திருத்தக்காரர்களின் நோக்கப்படி மதங்களைச் சீர்திருத்தியமைத்தாலும் முக்கியமான விஷயங்களில் சீர்திருத்தக்காரர்களும் விட்டு

க்கொடுக்க சம்மதிக்க மாட்டார்கள் சம்மதிக்கிறார்கள் இல்லை. எனவே இன்றைய மக்களின் குறைபாட்டை வறுமையை நிவர்த்தி பண்ணக்கூடிய அளவு மதசீர்திருத்தம் பயனளிக்காது எனவே இன்றைக்கு ஸர்வமதங்களையும் ஒழித்துவிட்டு பகுத்தறிவின் உதவிகொண்டு இன்றைய மதங்களைவிட சிறந்த மக்களின் குறைபாட்டை, வறுமையை நிவிர்த்திபண்ணக்கூடிய இயக்கங்களை பகுத்தறிவு வாதிகளால் சிருஷ்டிக்கமுடியும் சிருஷ்டித்துமிருக்கிறார்கள். எனவே மீண்டும் சொல்கிறேன் உலகிலுள்ள ஸர்வ மதங்களையும் ஒழித்து பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக்கொண்ட இயக்கங்களை ஸ்தாபிக்கவேண்டும். இதுதான் அறிவாளிகளின் கடமை! இதைத்தான் தற்கால அறிவாளிகளும் விரும்புகிறார்கள்! தற்கால அறிவாளிகள் விரும்பும் பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்ட இயக்கங்களை மதஸ்தாபகர்கள் இன்றைக்கு இருப்பார்களேயாகில் அப்படியே ஒப்புக்கொள்வார்கள் என்பதை அவர்களுடைய (மதஸ்தாபகர்களுடைய) மதங்களிலிருந்தும், சரித்திரங்களிலிருந்தும் யூகிக்கமுடியும்! யார் எப்படி இருந்துவிட்டாலும் இஸ்லா மதஸ்தாபகர் மாத்திரம் இன்றைக்கு இருப்பார்களேயாகில் தற்காலத்திட்டங்களை அப்படியே ஏற்றுக்கொள்வார்கள் என்பதுமாத்திரம் திண்ணம்!

எனவே நாம் (மக்கள்) மதங்களையொழித்துவிட்டால் "கடவுள்" மதஸ்தாபகர்கள் கோபித்துக் கொள்வார்கள், மறுவுலகில் நரலோகத்தில் சித்திரவதை பண்ணுவார்கள்" என்னும் பயம் நமக்கு (மக்களுக்கு) வேண்டியதில்லை! நாம் (பகுத்தறிவு வாதிகள்) மதங்களையொழிக்க முயல்வது எல்லாம் மக்களின் நன்மையை, முன்னேற்றத்தை யுத்தேசித்தேயன்றி தீமையையும், பின்னேற்றத்தையும் உத்தேசித்தல்ல! நமது (பகுத்தறிவு வாதிகளின்) நோக்கமெல்லாம தற்போது மதத்தால், கடவுள் பக்தியால் சீரழிந்து நாசமுற்று கேவல நிலைமையில் இருக்கும் மனித சமூகத்தை ஒழுங்குபடுத்தி மக்கள் வாழ்க்கையில் சாந்தியையும், சமாதானத்தையும் நிலைநாட்டவேண்டும் என்பதே!

மதங்களை ஒழித்து அகற்றுப்பதிலாக பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்ட மனித முன்னேற்ற இயக்கங்களை, திட்டங்களை ஏற்படுத்துவதை விரும்பாத மதபக்தர்கள் கடவுள் பக்தர்கள் இன்றைக்கு மதங்களால் விளையும் கலகத்தையும், வீண் செலவையும், பெண்களின் அடிமைத்தனத்தையும், முதலாளிகளின் சுயநல வாழ்க்கையையும், மூடப்பழக்க வழக்கங்களையும் கீழே விளக்குவதை பக்தர்கள் சிறிது பக்தியைக்கொண்டு கவனியாமல் பகுத்தறிவின் உதவியைக்கொண்டு கவனிக்கவும். ஏன்பக்தியைக் கொண்டு கவனிக்கவேண்டாம் என்கிறேன் என்றால் பக்தி பகுத்தறிவை மழுங்கச்செய்கின்றன! எவ்வளவு பெரிய அறிவுக்கொத்த விஷயங்களையும், திட்டங்களையும் பக்தி ஏற்றுக்கொள்கிறதில்லை யென்பதை இன்றைக்கு நாம் பிரத்தியட்சமாய் காணும் காட்சி

## மதவெறியால் விளையும் கேடு.

உலகத்திலுள்ள ஸர்வமதங்களும் மக்களுக்கு சாந்தியையும் சமாதானத்தையும் அளிக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் மதஸ்தாபகர்களால் ஏற்படுத்தப்பட்டது. இன்றைய உலகில் அம்மதங்கள் மக்களிடத்தில் மதுபானமாகவும், பைத்தியமாகவும், மூடப்பழக்கங்களாகவும், சோம்பேறித்தனமாகவும் மாறிக்கிடக்கின்றன. அதாவது விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிப்படி மனிதன் என்பவன் முட்டையி (Cell) லிருந்து பரிணமித்து (இயற்கை யமைப்புப்படி உள்ளது சிறந்து) எப்படி மனிதனாக மாறினானோ அதேமாதிரி தற்காலத்திய மதங்களும் பகுத்தறிவு வாதிகளின் உதவியற்று, பாமரர்களின்-சுயநலமிகளின் உதவியைக்கொண்டு வளர்ந்ததினால் மதங்கள் சன்மார்க்கத்திலிருந்து கீழ்நோக்கிப் பரிணமித்து (அதாவது இயற்கைக்கு முரணாக இல்லாததைச் சிறப்பித்து) இப்போது துன்மார்க்கமாக மாறிக்கிடக்கின்றன என்பதை இன்றைக்கு மதங்களின் பெயரால் நடக்கும் அக்கிரமங்களிலிருந்து யூகித்துக் கொள்ளலாம். (மதத்தின் பெயரால் அக்கிரமங்கள் இன்றைக்குமாத்திரமல்ல இன்றைக்கு 1000 கணக்கான வருடங்களுக்கு முன்னிருந்தே நடந்துகொண்டு வந்திருப்பதை சரித்திரங்களில் பார்த்துக்கொள்ளலாம) அதாவது இந்தியாவில் இந்துக்களும், முஸ்லீம்களும் ஒருவரையொருவர் மனிதரென்று கூடப்பாராமல் மதபக்தியால் மதத்திற்காகச்சண்டைபோட்டு மண்டைகளை யுடைத்துக்கொள்கிறார்கள். இதேமாதிரி இலங்கையில் பௌத்த மதஸ்தர்களும்-முஸ்லீம்களும் மதத்திற்காக சண்டை போட்டுக் கொள்கிறார்கள். 2 மாதங்களுக்குமுன் இலங்கையில் பௌத்தர்களுக்கும்-முஸ்லீம்களுக்கு மிடையில் நடந்த கலகத்தில் 48 பேருக்குக்கடுமையான காயங்கள் ஏற்பட்டதையும், இன்னுமநேக நிரபராதிகளான பெண்களும், குழந்தைகளும் அல்லோ கல்லோலப்பட்டதையும் எல்லோரும் பத்திரிகைகளில் வாசித்திருக்கக்கூடும். இக்கலகம் நடந்துகொண்டிருக்கும்போது போலீஸார் வந்துவிட்டார்கள். போலீஸார்வந்து கலகத்தை யடக்காமலிருந்தால் இலங்கை ஜனதொகையில் சரிபாதியாவது நாசமாகி இருக்கும். இக்கலகம் நடந்துகொண்டிருக்கும்போது பௌத்தர்களும், முஸ்லீம்களுமஆவேசங்கொண்டு திரிகிறதைப்பார்க்கும் மனிதன் மதம்மக்களுக்கு பைத்தியத்தை கொடுக்கிறதென்பதை இலேசாக உணர்ந்து கொள்வான்.

ஹிந்து-முஸ்லீம் கலகத்தைப் பற்றி எழுதுவது வீண் என்றே கருதுகிறேன் ஏனென்றால் இந்து முஸ்லீம் கலகத்தைபற்றி தெரியாதவர்கள் ஒருவருமில்லை. ஹிந்துக்களும் முஸ்லீம்களும்தான் மதவெறியால் ஒருவரையொருவர் துன்புறுத்துகிறார்கள் என்றால், பத்திரிகைகளாவது ஒழுங்காக நடந்துகொள்கின்றனவா என்று பார்த்தால் ஹூ ந் து அதுவுமில்லை.

இதுமட்டுமல்ல, ஒரேமதத்தை பின்பற்றுகிறவர்களிடமாவது ஒற்றுமையிருக்கிறதா? என்று பார்க்கப்போனால் அவர்களுக்குள்ளும் (ஒரே மதத்தை பின்பற்றுகிறவர்களுக்குள்ளும்) ஒரேமதத்தின் பேரால் பல பிரிவுகளை யுண்டுபண்ணிக்கொண்டு ஒரு பிரிவார் திட்டிக்கொண்டும் துன்புறுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். அதாவது ஒரே கிறிஸ்துமதத்தின் பேரால், புரோட்டெஸ்டாண்ட், கத்தோலிக், வெஸ்லியன், சர்ச் ஆவ் இங்லண்ட், சேல்வேஷன், இண்டிபெண்டெண்ட் பெண்டிகோஸ்ட் முதலிய கட்சிகளை உண்டுபண்ணிக் கொண்டு இக்கட்சிகள், ஒரு கட்சியை யொருகட்சி மதத்திற்காகத் திட்டிக்கொண்டும், துன்புறுத்திக்கொண்டும், சித்திரவதை செய்துகொண்டும், இரத்தக்களரியை யுண்டுபண்ணிக்கொண்டும் மனித சமூகத்தை சீரழிக்கிறார்கள்.

உலகத்தில் இயேசுவின் காலத்திலிருந்து கிறிஸ்துமதத்தின் பேரால் நடந்திருக்கும் அக்கிரமங்களைச் சரித்திரங்கள் தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டுகின்றன. கிறிஸ்துமதத்தினால் நடந்திருக்கும் அக்கிரமங்களைச் சரித்திரங்களில் வாசிக்கிறவன் உண்மையான மனிதாபிமானியாய் இருப்பானேயாகில இன்றைக்கே கிறிஸ்து மதத்தை ஒழிக்க கிறிஸ்து மதத்தின் மேல் யுத்தம் தொடுத்திடுவான் என்பது திண்ணம். இத்தகைய யுத்தம் ருஷியர்களால் தொடுத்து ருஷியாவிலேயே கிறிஸ்துமதத்தை ஒழித்துவிட்டார்கள். அதேமாதிரி யுத்தம் தான் இப்போது ஸ்பெய்னில்நடந்துகொண்டிருக்கின்றன என்பதை ராய்டர்தந்திபஹிரங்கப்படுத்துகிறது.

சு. ம தோழர்கள் கிறிஸ்து மதத்தின் பேரால் நடந்திருக்கும், நடக்கும் அட்டுழியங்களை மக்களுக்கு எடுத்துக்காட்டி மக்களை விடுவிப்பதற்காக வேண்டி பத்திரிகைகளில் வரைந்தது மாத்திரமல்ல. மேனாட்டு அறிஞர்களால் வெளியிடப்பட்ட சில புஸ்தகங்களையும் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள் (அதாவது நான் ஏன் கிறிஸ்தவனல்ல?, முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை, மதம் என்றால் என்ன?) பர்வமன்னிப்பு என்னும் அக்கிரமத்தைப்பற்றி தோழர் செனிக்யூவால் எழுதப்பட்ட புஸ்தகததைத் தமிழில் மொழிபெயர்த்து சிறிது சிறிதாக "குடி அரசி"ல் வெளியிட்டுக் கொண்டு வந்ததை சீக்கிரம் புத்தக ரூபமாய் வெளியிடுதல் பெரிதும் அவசியம்.

கிறிஸ்தவர்கள் மதத்திற்காகச்செய்திருக்கும் சித்திரவதைகளையும், கொலைகளையும், காமலீலைகளையும் புத்தகங்களில் வாசிக்கும் போது இரத்தக்கண்ணீர் வடிக்கவேண்டியதாயிருக்கின்றன. அவைகளைப்பற்றி இக் கட்டுரையில் எடுத்துக்காட்டிவிட முடியாது. ஏனென்றால் அவைகளைப்பற்றி(கிறிஸ்துமத அக்கிரமங்களைப்பற்றி) அநேக புத்தகங்கள் வரையப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துமத அநியாயங்களைப்பற்றி புத்தகங்கள் எழுதியிருப்பவர்களில் அநேகர், கிறிஸ்து மதத்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ப் போற்றி வளர்த்த கிறிஸ்தவப் பாதிரிகளும், பக்தர்களுமே. எனவே அப் புத்தகங்களை நேரில் வாசிப்பதே பக்தர்களுக்குத் திருப்தியளிக்கும். எனினும் பகுத்தறிவுச் சூரியன் உதயமாகியிருக்கும் இந்த 20ம் நூற்றாண்டிலும்கூட மத வெறியால் கலகங்கள் நடந்து கொண்டிருக்கின்றனவென்பதை கன்னியாகுமரி முனையில் நவம்பர் 26ல் மாதா கோவிலில் நடந்த சண்டையினால் நிகழ்ந்த அக்கிரமங்களையும், இன்னுமதுபோன்ற கலகங்களையும் பத்திரிகை பார்க்கும் எல்லோருக்கும் தெரிந்ததே. ஆகையால் அவைகளைப்பற்றி இத்துடன் நிருத்திக்கொண்டு இஸ்லாம் மதத்தின் பேரால் நடக்கும் அக்கிரமங்களைச்சிறிது விளக்குவாம்.

இஸ்லா மதத்தைப்பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் முஸ்லீம்களுக்குள்ளும், இஸ்லாம் மதத்தின் பேரால்:- அஹ்மதியா, ஸுன்னி, ஷியா, வஹ்ஹாபி, ஹனபி, ஷேச்சரி, ஹம்பலி, மாலிக், காதிரியா, சாதிரியா, சிஷ்டியா, ரிபஜயா, நக்ஷபந்தி..........முதலிய எண்ணத்தொலையாத கட்சிகளையுண்டு பண்ணிக்கொண்டு இக்கட்சிகள் ஒன்று "ஈஸா இறக்கவில்லை அவரை அல்லா(ஹ்) கீழ் உலகத்திலிருந்து மேல் உலகத்திற்கு "அபேஸ்" பண்ணிவிட்டான் (உயர்த்திக்கொண்டான்)" என்றும், இன்னொன்று ஈஸாவை ஸ்தூல சரீரத்துடன் உயர்த்திக்கொள்ளவில்லை, அவர் மரணமடைந்து விட்டார் அவருடைய "ஆத்மா"வை மாத்திரம்தான் அல்லா(ஹ்) மேல் உலகத்திற்கு உயர்த்திக்கொண்டான்" என்றும் மற்றுமொன்றாகிய தற்கால தீர்க்க தரிசியை பின்பற்றும் கட்சி "மிர்சாஹிபை நபியென்று ஒப்புகொள்ளாதவன் காபர் அவர்களுக்கு சுவர்க்கமில்லை—மறு உலகில் அவர்களுக்குச் சித்திரவதை கிடைக்கும்" என்றும் ("மிர்ஸா சாஹிப் தற்கால நபி அவரை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேணும்" என்று அல்லா(ஹ்) அசரீரிவாக்கு மூலமாகவாவது, அல்லது தற்கால விஞ்ஞானிகளால் கண்டுபிடிககப்பட்டிருக்கும் கம்பியில்லாத் தந்தி மூலமாகவாயது உலகமக்கள் எல்லோருக்கும் சொல்லி விட்டால்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க

# National Congress and Labour Movement.

## இந்திய தேசீய காங்கிரசும்— தொழிலாளர் இயக்கமும்

(தோழர் T. N. இராமச்சந்திரன்)

[ இந்திய தொழிலாளர் இயக்கத்தின் அவசியம், காங்கிரஸ் இயக்கத்தின் பிற்போக்கான லக்ஷியம், அதன்கொள்கைகள் ஆகிய வைகளைப்பற்றி லாகூர் "People" பத்திரிகையில் இந்தியன் டிரேட் யூனியன் காங்கிரஸ் (Indian Trades Union Congress) தலைவர் தோழர் ஹரிஹரநாத் சாஸ்திரி சமீபத்தில் எழுதியுள்ள ஓர் கட்டுரையின் மொழிபெயர்ப்பு வருமாறு:— ]

சென்ற 1933-ஞு டிசம்பர்-மீ கடைசிவாரத்தில் கான்பூரில் கூடிய அகில இந்திய டிரேட் யூனியன் காங்கிரசின் நடவடிக்கைகளானது இந்தியத் தொழிலாளர்கள் இயக்கம்—இந்திய தேசீயக் காங்கிரஸ் மேற்போட்டுக்கொண்டுள்ள சுயேச்சைப் போராட்டத்தைக் குறித்து, அதுகொண்டுள்ள போக்கைப்பற்றி பத்திரிகைகளில் பெருத்த விவாதத்தை ஏற்படுத்திவிட்டது. காங்கிரஸ்காரர்களை தொழிலாள பாட்டாளி மக்கள் அடித்ததையும் தொழிலாளர்கள் காங்கிரஸ்காரர்களால் கஷ்டப்பட்டதையும் பத்திரிகைகளில் கொட்டை கொட்டை எழுத்துகளில் முக்கியமான இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்ததைக் கண்ட மக்கள் டிரேட் யூனியன் காங்கிரசின் போக்கானது தேசீயக் காங்கிரசுக்கு விரோதமானதா? என்று கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த வினவுக்கு அவசியம் விடையளித்து நிலைமையை தீர்க்கப்படுத்தவேண்டியது பெரிதும் முக்கியமாகிறது. ஆகவே தொழிலாளர் சம்பந்தப்பட்ட கருத்தை நான் எழுதத் துணிவுகொள்கிறேன்.

### "சுயேச்சை" பொருது.

தேசியவிடுதலைப் பெறுவதை பொருத்தவரை இந்த இரண்டு ஸ்தாபனங்களும் முழுதும் ஒத்திருக்கின்றன. மக்களுடைய கொடிய துன்பங்களை இரண்டும் உணர்ந்திருக்கின்றன. அது துன்பங்களைப் போக்கவும் பெரிதும் முயற்சித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் பொதுவான லட்சியத்தை அடைவதில் இரண்டும் அதனுடைய கொள்கை அனுசரனை முறைகளில் மாறுபட்டு நிற்கிறது. இந்திய தேசீயக் காங்கிரசின் முடிவான லட்சியம் தேசீய விடுதலையேயென்று வெளிப்படுத்தியதின் கருத்து இந்திய சமுதாயத்தில்உள்ள சகல வகுப்பார்களிடையேயும் ஒரு சமாதானத்தை உண்டுபண்ணுவதேயாம். காங்கிரஸின் சுயேச்சை பார்வையில் கணத்த முதலாளிகளும் மக்கள் சமூகத் தீங்கை விளைக்கும் மிராசுதார்களும் நிலச்சுவான்தார்களும் கொள்ளையடிக்கப்பட்ட கொடுமைப்படுத்த ஜனசமூகமும் ஒரே திட்டத்தைப் பெறும். காங்கிரசானது ஒருபுறம் கொள்ளைகொள்ளும் ஜனசமூகத்தைப் பார்த்து கொள்ளையடிக்கப்படும் தன்மையான அவர்களுடைய உரிமைகள் காப்பாற்றப்படுவதின்மூலம் பாதுகாக்கப்படும் என்று உறுதி கூறுகிறது. ஆனால் அதேமூச்சில் உழைக்கும் பாட்டாளி மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைக்குறிய சம்பளமும் நாகுக்கான வாழ்க்கையும் அளிக்கப்படுமென அது அறிவிக்கிறது. கொள்ளையடிக்கும் முதலாளிக் கூட்டமும் [Bourgoiesie] கொள்ளையடிககப்படும் விவசாயத் தொழிலாளர் மக்களும் ஒன்றித்துவாழ ஒரு மத்திய முறைக்கு வழியே சாத்தியமில்லை என்றுடிரேட் யூனியன் காங்கிரசானது (தேசீயக் காங்கிரசுக்கு மாருக) அபிப்பிராயப்படுகிறது. கணத்த முதலாளி வர்க்கத்தார்களுக்கும் நிலச்சுவான்தாரர்களுக்கும் சுயேச்சை என்பது தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் சுயேச்சையில்லை என்றே ஏற்படுமென்பது டிரேட் யூனியன் காங்கிரசின் கருத்தாகும். ஜனசமூக மக்களுடைய விடுதலையைக் கொண்டுவரும் சுயேச்சையானது சகல அரசியல் அதிகாரங்களையும் அவர்கள் (கஷ்டப்பட்டு பாடுபடும் சகலமக்களுடைய) கைக்குள் கொண்டுவரவும் தேசத்தின் பொருளாதார வாழ்க்கையைக் காப்பாற்றிக்கொள்ளும் உறுதியை அவர்களுக்கு அளிப்பதுமாகும்.

இந்திய தேசீயக் காங்கிரசின் போக்குப் பிரகாரம் இந்தியாவானது பரிபூர்ண தேசீயசுயேச்சையை அடைவதானல் தொழிலாளர்களும், விவசாயிகளும் மிகக்கீழான பிற்போக்கான ஸ்திதிக்குத் தள்ளப்பட்டு முதலாளிகளும் நிலக்காரர்களும் ஆதிக்கம் செலுத்தவும் சதா கொள்ளையடிக்கவுமே ஏற்பட்டுவிடும் என்ற பயம் இருந்துவருகிறது. இந்த நிலைமையானது இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா போன்ற தேசங்களில் அதுவும் பூர்ண தேசீய சுயேச்சைபெற்றதாக அங்கு சொல்லிக்கொண்ட போதிலுங்கூட அந்த நாடுகளில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டும் பசியால் ரொட்டித் துண்டுக்கு வருந்திக்கொண்டும் இருக்கும் தன்மையை ஒத்ததாகிவிடும். இங்கிலாந்தில் வேலையில்லாத்திண்டாட்ட பிரச்சினையானது மிக்க கொடிய தோற்றத்தைப்பெற்றுவிட்டது. ஒவ்வொரு தொழிற்சாலையிலுமுள்ள வேலைக்காரர்களுடைய கூலிகளானது குறைக்கப்படுகின்றது. ஆள்குரைப்புகளும் கணக்கின்றி நடைபெறுகின்றது. ஜப்பானியத் தொழிலாளர்கள் முதலாளித்துவமென்னும் நுகத் தடியின்கீழ் உயிர் மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தேசங்களில் உள்ள இந்த நிலைமையானது நம்முடைய தேசீயக் காங்கிரஸ் காட்டும் சுதந்திர சித்திரப் படத்தை, பாடுபடும் தொழிலாள மக்களுடைய கருத்துப்படி கவனிக்கும்பொழுது சரியான சுதந்திரமற்றதென்பதையே நிரூபிக்கப் போதிய அத்தாட்சியாகின்றது. இந்தச் இடத்தில்தான் இந்த இரு இயக்கங்களும் அடியோடு வேறுபட்டிருக்கிறது.

### வறுமைக்குக்காரணம் என்ன?

இந்தியாவின் வறுமைக்கு முக்கிய காரணம் அன்னிய ஆதிக்கமே என்று இந்திய தேசீயக் காங்கிரஸ் தலைவர்கள் கருதுகிறார்கள். தொழிலாளர் இயக்கத்தில் உள்ளவர்களும் இந்திய தேசீயக் காங்கிரசைப் போலவே அன்னிய ஆதிக்கத்தை விரோதமாக கருதுகின்றார்கள். அதோடு இந்தியாவின் வறுமைக்கு அடிப்படையான காரணம் [Root Cause] இன்றைய நிலைபெற்றுள்ள சமுதாய நிலையின் அமைப்பும் அதனை ஆட்டுவிக்கும் முதலாளித்துவ சக்தியும் இவைகளை யெல்லாம் பெரிதும் பாதுகாக்கும் ஏகாதிபத்தியமுமேயாகுமென்று நன்கு முடிவுகட்டியுள்ளார்கள்.

### காங்கிரசின் பிற்போக்கு முறை.

காங்கிரஸ் ஸ்தாபனமானது சட்ட மறுப்பு முறையைக் கையாளுகிறது. இதனுல் ஏகாதிபத்தியத்தை வீழ்த்தி விடலாமென்று மறைபொருளாகக் குறிகொண்டிருக்கிறது. இந்தக் கொள்கைகளின் போக்குகளினுல் ஏற்படும் சரியான முடிவுகளைப்பற்றி டிரேட் யூனியனில் சம்பந்தப்பட்டவர்கள் பெரிதும் ஐயமுறுகின்றார்கள். இன்றைய தேசீயக் காங்கிரஸ் போராட்டமானது ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதில் முடிவுபெற முடியாது என்று அவர்கள் நம்புகின்றார்கள். அதனுல் பலமாக சாதிக்கக்கூடியது ஒன்று இருக்குமானுல் அது ஏகாதிபத்தியத்தோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதேயாகும். இதைத்தான் காங்கிரசானது சென்ற நான்கு வருஷங்களாகச் செய்துகொண்டிருக்கிறது. 1929-ம் வருஷத்தில் அதனுடைய முடிவான லக்ஷியம் பரிபூர்ண சுயேச்சையே என்று நிறைவேற்றியிருக்கிறது. ஆனுல் அனேகமாக ஒரு வருஷ முடிவுக்குள்ளாகவே குடியேற்ற நாட்டந்தஸ்துக்கு அடிப்படையாகக் கொண்ட ஒரு சமாதானத்தை ஒத்துக்கொண்டு சர்க்காரோடு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டது. இதுமாத்திரமல்ல! இந்திய தேசீய காங்கிரசின் ஏகப்பிரதிநிதியாக காந்தியும் வட்டமேஜை மகாநாட்டிற்கு சில நிபந்தனைகளையும் பாதுகாப்புகளையும் ஒத்துக்கொண்டு சென்றுவந்தார். மீண்டும் போராட்டம் ஆரம்பமாயின காந்தியார் இருமுறை வைஸ்ராயுக்குக் கடிதம் எழுதி, சமாதானத்தைத் தான் தேடி ஏற்படுத்திக்கொள்ளவே பேட்டியளிக்கவேண்டுமென்று அனுமதி கோறினர். இதுபோன்ற காங்கிரசின் வேறுபாடுகளைத் தொழிலாளர் இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கண்டு மனம் பொருதவர்களானர்கள்.

### தொழிலாளர் இயக்கத்தின் நோக்கம்.

சுயேச்சைக்காகப் போராடும் தேசீயப் போராட்டமானது அடிப்படையாகத் தொழிலாளர்களையும். விவசாயிகளையும் ஒன்றுபடுத்தி யலக்ஷியத்தோடு மிக்கத் தெளிவாகவும் வேறுபாடில்லாமலும் கொண்டு செலுத்துவதே மிக்க வன்மையானதாகவும் பலம் பொருந்தியதாகவும் இருக்குமென்று அவர்கள் கருதுகிறார்கள். தொழிலாளர்களுடைய இயக்கத்தின் முடிவான நோக்கமானது பாடுபடுகிற மக்களுடைய கைக்கு அரசியல் அதிகாரங்கள் மாறி வரவேண்டுமென்பதும் மன்னர்களும் மனிதசமூகப் புல்லுருவியான முதலாளித்துவமும், பணக்காரத்துவமும் ஒழியவேண்டுமென்பதும் தொழிலாளிகளுடையவும், விவசாயிகளுடையவும் கவுன்சிலானது தேசத்தின் செல்வ (பொருளாதார) வாழ்க்கையைப் பரிபூர்ணமாகக் கைக்கொள்ளவேண்டுமென்பதாகும். ஆனுல் பாடுபடுகின்ற தொழிலாளர்களுடைய இன்றைய முக்கிய வேலையானது 1932-ம் வருஷ அகில இந்திய டிரேட் யூனியன் காங்கிரசிலும் மீண்டும் 1933-ம் வருஷ கான்பூர் மகாநாட்டுக் காங்கிரசிலும் நிறைவேற்றியதை அடிப்படையாகக்கொண்டு பரிபூர்ண தேச விடுதலைக்குப் போராடவேண்டி ஒன்றுசேர வேண்டுமென்பதாகும். தொழிலாளர்களுடையவும் விவசாயிகளுடையவும் முக்கிய

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# டிரேட் யூனியன் என்றால் என்ன?

(தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.)

ட்ரேட் யூனியன் என்றால் என்ன? நெசவு ஆலயங்கள், ட்ராம் ஓட்டுபவர்கள், சுரங்க வேலையாட்கள், ஹார்பர் கூலிகள், முனிசிபாலிட்டி சுக்கூள்வாரிகள் இன்னும் மற்ற தொழிலாளிகள் தங்கள் தொழில்வாரியாக ஒன்றாய்ச் சேர்ந்து தங்கள் தங்கள் நன்மைக்காகவும் பொதுநலத்திற்காகவும் சிலரை நியமித்து அவர்கள் சொல்படி நடந்து கொண்டால் அந்த ஒக்குமெத்தை நெசவு ட்ரேட் யூனியன், ட்ராம்வே ட்ரேட் யூனியன் என்று கூறப்படுகிறது. நெசவு ஆலயங்களில் வேலை செய்பவர்களுக்கு சில சமயங்களில் தங்கள் எஜமானோடு கூலி தகரார் ஏற்படுவது சகஜம். அச்சமயங்களிம் அவர்கள் அனைவரும் எஜமானோடு பேசுவது அசாத்தியமல்லவா? ஆகையால் அவர்களில் நன்றாய் சமாச்சாரங்களைத் தெரிந்த சில முக்கியஸ்தரை அவர்களுக்காக எஜமானிடத்தில் போய் பேசி ஒழுங்குபடுத்த அனுப்புவது அங்கு அவர்களுக்காக ஒரு சமாதானத்தை ஒப்புக்கொள்வது அல்லது நிராகரிப்பது அப்படி சமாதானம் ஏற்படாவிட்டால் எஜமானுக்கு நோட்டீஸ் கொடுத்தோ கொடுக்காமலோ வேலைக்குப் போகாமல் நிற்பது. இதுதான் ட்ரேட் யூனியன்களின் வேலை.

ட்ரேட் யூனியன்கள் இன்னும் மற்ற வேலைகளைச் செய்யலாம். ஆமதாபாத் நெசவு வேலை செய்யும் தொழிலாளிகளின் ட்ரேட் யூனியன் 1458 தொழிலாளிகளின் குழந்தைகளுக்காக 23 பள்ளிக்கூடங்கள் நடத்துகிறது. இரண்டு சாப்பாடு போடப்படும் பள்ளிக்கூடங்களை நடத்துகிறது. புஸ்தகங்களடங்கிய லைப்ரரிகள், கவாத் பழக்குவதற்கும் வாலண்டியர்கள் கூடுவதற்கும் வசதிகள், தானியங்களைக் குறைந்த விலைக்குக் கூலியாட்களுக்கு விற்க கடைகள், காப்பி க்ளப்புகள், ஒரு சிறிய சேவிங்ஸ் பாங்கி, ஒரு சிறு கடன் டிபார்ட்மெண்ட்— இவை நடக்கிறது. பம்பாயில் சில ட்ரேட் யூனியன்கள் பாக்டரி ஆக்டை மீறி நடக்கும் மில்காரர்களைத் தண்டிக்கவும், தொழிலாளிகளுக்கு மிஷின்களால் அபாயம் ஏற்பட்டால் அதற்கு கர்பபன் சேஷன் வாங்கித் வருவது இவைகளை செவ்வையாய் செய்கின்றன. சில ட்ரேட் யூனியன்கள் சமீபத்தில் முனிசிபாலிட்டிகளில்கூட புகுந்து தங்கள் பிரதிநிதிகளை அனுப்பித்து மில்களால் வேலை செய்யும் ஜனங்களுக்காக முனிசிபாலிட்டிகளில் போராடுகின்றன. கவர்ன்மெண்டார் தொழிலாளிகளின் நிலைமையைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக ஏற்படுத்தும் கமிஷன்களுக்கு முன்பு தொழிலாளிகளின் குறைகளைக் கூறவும் அவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களை எடுத்துக் காட்டியும் வரும் ஸ்வராஜ்ய கவர்ன்மெண்டில் தங்கள் கக்ஷியை எடுத்துக் கூறவேண்டிய வசதிகளுக்காகப் போராடவும் இந்த டிரேட் யூனியன்கள் மூலமாகக்கூடும்.

சமீபத்தில் இந்தத் தொழிலாளிகளுக்காக ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பெயர் டிரேட் யூனியன் ஆக்ட் (கி326] இந்த ஆக்டின் பிரகாரம் எந்த டிரேட் யூனியன் கவர்ன்மெண்டாருக்கு தங்கள் வரவுசெலவு திட்டத்தை கணக்குக், காண்பித்து இன்னும் சில சாதாரண திட்டங்களை கைபாளுகின்றனவோ அவைகளை ரிஜிஸ்டர்செய்து கொள்ளலாம், ரிஜிஸ்டர் செய்தாய்விட்டதென்றால் அந்த யூனியன் அதிகாரிகள் அந்த யூனியன் மெம்பர்களை வேலை நிறுத்தவோ அல்லது எதாவது காண்ராக்ட் முரட்டமாக அந்த மெம்பர்களை சில காரியங்களைச் செய்ய சொன்னால் கஷ்ட நஷ்டப் பாத்தியப்படமாட்டார்கள்.

மற்ற தொழிலாளிகள்போல் விவசாயிகளும் ட்ரேட் யூனியன்கள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஏனெனில் தற்காலங்களில் தனிப்பட்டு ஒருமனிதனும் ஒரு காரியத்தையும் சாதிக்க முடியாது. சாதிக்கட்டு முன்காலத்தில் சற்று உபயோகமாயிருந்தது. தற்காலத்திலோ சாதிக்கட்டு கொஞ்சமேனும் பிரயோஜனப்படாது. மற்றும் ஏதோ ஒரு கிராமத்தில் விவசாயிகள் சேர்ந்து ஒரு கூலி கட்டுப்பாடு செய்வதாக நினைத்துக்கொள்வோம். அடுத்த கிராமத்திலிருந்து எஜமான்கள் கூலிகளைக் கூட்டிவர முயலுவார்கள். அக் கூலிகளைத் தடுத்தால் கிரிமினல் கேஸ்தான். தொழிற்சாலைகளில் வேலை செய்யும் கூலியாட்கள் ஒருங்கே ஓரிடத்தில் சேர்ந்து வேலை செய்வதால் தங்கள் கஷ்டங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வதற்கும் சேர்ந்தாற்போல் வேலையை நிறுத்துவதற்கும் சாத்தியமாயிருக்கிறது. விவசாயிகள் கிராமங்கிராமங்களாக வசிப்பதால் அவர்கள் ஒருங்காய்ப் பேசுவதற்கு வசதிகள் கிடையாது. மேற்சொன்னாற்போல் ட்ரேட் யூனியன்கள் ஏற்படுத்திக்கொண்டால் தான் விவபாயக கூலியாட்கள் தங்கள் நன்மையை நாடிக்கொள்வார்கள்.

கிராமங்களில் போக்கு வரத்து சாதனங்களில்லாத பண்டைகாலங்களில் தச்சன், கொல்லன், சக்கிலி, தட்டான், சேணியன் இன்னும் மற்றவர்கள் தங்கள் ஜாதித் தொழிலையே வாங்கி பிழைத்து வந்தனர். தற்காலத்தில் தச்சனுக்கும், கொல்லனுக்கும், குயவனுக்கும் தானியகூலி அனேகமாய் கிடையாது. அவர்களும் தங்கள் சாமான்களை பணத்திற்கு விற்று வருகின்றனர். மேலும் தச்சன் தச்சுவேலையே செய்வதில்லை. குயவன் குயவனாகவும் இருப்பதில்லை. சக்கிலிகளில் அனேகர் பட்டினங்களுக்கு போய் பிழைக்க போய்விட்டனர். வேலையும் ஜாதியும் அனேகமாய் ஒத்து இருப்பதில்லை. இதற்கு காரணம் போக்கு வரத்து சாதனங்களும் பணப்புழக்கமுமே. ஜாதிக்கட்டு தளரதளர தொழிலாளிகளின் கஷ்டம் அதிகரிக்கும். ஏனென்றால் தொழிலாளிகள் ஒருங்கே சேர்ந்து தங்களுக்கு நியாயமாய் கிடைக்க வேண்டியகூலியை வாங்கமுடியாமல் போய்விட்டது. ட்ரேட்யூனியன் அதாவது தொழிற்கட்டுகள்தான் அவனை ரக்ஷிக்க வேண்டும்.

உலகமெங்கும் தொழிலாளர் ஆதிக்கம் பெருகி வருகிறது. வெறும் குடியரசு ராஜ்யத்தில் நம்பிக்கையில்லாமல் ஜனங்கள் மேல் நாடுகளில் பொதுவுடைமை கக்ஷிகளை ஏற்படுத்திக் கொண்டு போராடுகின்றனர். குடியரசு ராஜ்யம் நன்குபலிக்கவேண்டும் மென்றால் நல்ல விஸ்தாரப்படிப்பும் [A large and many aided educatiou] பிழைப்புக்கு அலபமான வழிகளும் இருக்கவேண்டும். (reasonabla org anision of life) வெறும் குடியரசு ராஜ்யத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கையில்லை. பொதுவுடைமை கக்ஷிகளும் அடிப்படிகளை (epuality and liberty) பணச்சமத்வம் என்றும் நிசிசுயேச்சை (economcic liberty) என்றும் புதுஅர்த்தத்தை கொடுத்து கொண்டு போருட ஆரம்பித்து இருக்கின்றன. அக்கக்ஷிகள் சொல்வது பெரும்பாலும் உண்மையே. ஏனெனில் எவ்வளவு நிபுணனாயிருந்தாலும் அவன் பணமில்லாமற்போனால் பிணம் என்று சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோமல்லவா?

தொழிற்கக்ஷிகள் ராஜீய விஷயங்களில் தலையிடுவதற்கு சாதாரமான இருவிகள் இந்த ட்ரேட் யூனியன் எனப்படும் தொழிற்கட்டுகள்தான். இந்த தொழிற் கட்டுகள் சில தேசங்களில் தொழிற் சமாச்சாரத்தை தவிர மற்றஎந்த ராஜீய விஷயங்களும் தலையிடுவதில்லை என்றுபிரதிக்ஞை செய்து ஆரம்பித்தன ஆனால் அந்த பிரதிக்ஞை வீணாய் போயிற்று. ஏனெனில் எங்கு திரும்பினாலும் முதலாளிகளோடும் போராடினால் அவர்கள் ராஜீய வழியாம் தொழிற்கட்சிகளை அடக்கி விடுகிறார்கள். மேலும் அநேக வழிகளில்சட்ட சபைகளும் தொழில்களை ஒழுங்கு படுதவும் தொழில் சமாச்சாரங்களில் தலையிடவும் வேண்டியிருக்கிறது. ஜினவாவிஇருக்கும் (Central Office) இரண்டர் நேஷனல் லேபர் களிசேஷன் உலகமுழுவதும் வேலை செய்து ஜீவிக்கும் தொழுலாளிகளின் நன்மைக்காகவும் தொழிலாளிகளுக்கு குவைந்த கூசயையோ குறைந்த சௌக்கியங்களையோ அளித்து மாய்காமலிருப்பதற்காகவும் சில (Convontion) எக்கிமெண்டுகளை உலக ஜனங்களுக்கு முன்பு பிரசாரம் செய்து அதை எல்லா தேசங்களிலும் கொண்டு செலுத்தும்படி செய்கின்றனர். சிசுக்களை அதிக குறைந்த வயதில் சுரங்கங்களிலும் கஷ்டமான வேலைகளிலும் வேலைசெய்யாமல் உலகமுழுதும் ஏற்பாடு செய்தது இம்மாதிரிதான் கர்ப்ப ஸ்திரீகளுக்கு நான்குவாரம் குழந்தை பிறப்பதற்குமுன்பும் பின்பும் சம்பளத்துடன் லீவ் கிடைக்கச் செய்தது இம்மாதிரிதான். கிழவர்களுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் [Pension] பென்ஷன் கொடுக்கவேண்டுமென்று போராடுகின்றதும் உலக முழுவதும் ஒருவரும்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

# கடவுளும் மதவாதிகளும்

[ தோழர் அலி அக்பர் 'Reason' என்ற ஆங்கில மாத சஞ்சிகையில் எழுதியுள்ள கட்டுரையினின்று சில பகுதிகள் கீழே மொழி பெயர்த்து எழுதப்படுகின்றன. T. N. R.]

ரோமன் கத்தோலிக் மதம், முஸ்லீம் மதம் ஆகிய மதங்களை பின்பற்றுகின்றவர்கள் அடிக்கடி கடவுளை மக்கள் முன் கொண்டு வந்து நிறுத்துகின்றார்கள். ஷை மதஸ்தர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே மதத்தை ஊட்டுகின்றார்கள் ஹக்ஸ்லி எழுதிய "வலிமை பொருந்திய புதிய உலகம்" என்ற புஸ்தகத்தை கேள்விப்பட்டாலே போதும், ஷை மத பக்தர்கள் உடனே தங்களுடைய மதத்தை கருப்பத்திலிருக்கும் சிசுக்களுக்கும் அவசியம் புகுட்டிவிட ஆரம்பித்து விடுவார்கள். இந்த போக்கை பின்பற்றுகின்ற கிருஸ்தவர்களின அட்டூழியங்களை சரித்திரம் படித்தவர்கள் நன்கு உணர்வார்கள்.

மகமதிய மதமும் குற்றமற்றதென்று நான் சொல்ல வரவில்லை. முஸ்லீம் மதத்தை உண்மையாக பின்பற்றுகிறவர்கள் அல்லாவுடைய விருப்பத்தையே எல்லா விஷயங்களையும் விட முதன்மையாக கருதுகின்றார்கள். இன்றைய காலச்சக்கர வேகத்தில்; 2000 வருஷங்களுக்கு முன்னிருந்த கர்னாடக கொள்கைகளைப்புகுத்த மிக்க அழுத்தம் செய்வதே நமக்கு பெருங்கஷ்டத்தை உண்டாக்குகிறது. மதங்களை பின்பற்றுகிற வெறியர்கள் புதியவற்றைத்தள்ளி பழையவற்றை புகுத்தவே முன் நிற்கின்றார்கள். எவ்வளவு தாராளப்போக்கோடு மகமதிய மதத்தில் ஒருவர் இருந்தாலும் அவர் வெறுக்கத்தகுந்த பல கொள்கைகளை அனுஷ்டித்துத்தான் தீரவேண்டியிருக்கிறது. உதாரணமாக முகமூடிபழக்கமும், விவாகரத்து விஷயத்தில் போதியசௌகரியங்கள் ஆண்களுக்கு மாத்திரம் அளித்திருப்பதும், ஆகார பானவகைகளில் ஒரு எல்லை குறிப்பிடப்பட்டிருப்பதும், சுன்னத்து செய்வதை ஆரம்ப சடங்காக வற்புறுத்துவதும்; கவனிக்கத்தக்கது. ஒரு சிறந்த முஸ்லீம் மேற்கண்ட கொடுமைகள் எல்லாம் பரிகசிக்கத்தக்கதென்றும் அவை வேண்டாததென்றும், கல்வியாலோ, அல்லது பகுத்தறிவாலோ, உணர்ந்தாலுங்கூட; எந்த விதமான கேள்வியும் ஷை விஷயத்தில் கேட்க முடியாததாக இருக்கிறது. மேற்கண்ட நிலையில் தற்கால முன்னேற்றத்தை சீர்படுத்துவதென்பது குதிரைக்கு முன்பு வண்டியைக்கட்டுவது (ஜோடி எருதுகளைக்கொண்டு தக்ஷிணராணியை ஓட்டுவது) போலாகும்.

சமுதாய அல்லது தேச சம்பந்தப்பட்ட எந்தப் புதிய விஷயத்தையும் பழைய தன்மையில் புகுத்த இவர்கள் முயற்சிப்பதும் அதினின்று சிறிது மாறுபட்டாலும்கூட மிக்கப் பலமாகக் கண்டனம் செய்வதும் கவனிக்கத்தகுந்தது.

மதத்தில் முரட்டுத் தன்மையும், நாட்டினிடத்தில் குறுகிய தேசபக்தி என்னும் பற்றுக் கொள்வதும் மனித வர்க்கத்தினுடைய பலவித முன்னேற்றத்தை தடைப்படுத்தும் இரண்டு அழிவு சக்திகளாகவே இருக்கின்றன.

நமது தேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நம்முடைய நாட்டில் ஏற்படும் வகுப்புப் போராட்டங்களுக்கெல்லாம் முக்கிய காரணமாக இருப்பது மத வேதாந்தமும், மூடப் பழக்க வழக்க அனுசரணைகளுமேயாகும். விஞ்ஞான விஷயத்தில் உண்மைகண்டவர்கள் வாழ்க்கையில் அடிப்படையான ஒற்றுமையோடு வாழ்வதற்காக தினசரி விஷயங்களைக் குவித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். இந்த அடிப்படையான ஒற்றுமையை உணர்ந்துகொண்டால் நாட்டில் சமாதானம் என்ற பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுவிடும்.

கடவுளிடத்தில் ஒன்றுபட விரும்புகிறவர்கள் நம்முடைய கோரிக்கைக்கு வெகுதூரத்தில் உள்ளவர்களாகவே ஆகின்றார்கள். ஏனென்றால் ஒரே ஒரு கடவுள் எப்பொழுதாவது இருந்திருக்கின்றாராவென்பது வெகு சந்தேகத்திலிருக்கிறது. பல்வேறு கடவுளுடைய எண்ணிக்கைகள் மனித வினோதப் போக்கின் வேகத்திற்குத் தகுந்தாற்போல் இருக்கின்றது.

இந்த பலதிறப்பட்ட வினோதப்போக்கு கடவுள்கள், மனித சமூகத்தின் ஒவ்வொரு முன்னேற்றப் பகுதியையும் சின்னாபின்னப்படுத்துவதோடு வாழ்க்கையின் சீர்கேடான நிலையைத் திருத்துவதில்கூட மிக மிகக் கொடிய கஷ்டத்தை உண்டாக்கிவிடுகிறது. கடவுளை தேசத்தின் முன்பாக நிறுத்துகின்றவர்கள் இவ்வுலகத்தில் காலத்தை வீணாக்குகின்றார்கள். அவர்கள் வேண்டுமானால் மோக்ஷலோகத்தில் சதா சர்வகாலமும் இன்புற்றிருக்கும் கடவுளுடைய சொந்த தேசத்திற்கு பயணப்படுவதில் சிறிதும் தாமதம் காட்டாது செல்லட்டும் அதற்கு வழியும் மிகச் சுலபமே.

## பாதிரியார் மீது வழக்கு.

### மாஜிஸ்திரேட் விசாரணை.

மாயவரம் தாலூக்கா ஈச்சங்குடி வட்டம் கிராம முன்சீப் தோழர் மரியப்பிரகாச உடையார், ஷை கிராமத்தில் கிராம வாசிகளுக்குள் வகுப்புத்துவேஷத்தை உற்பத்தி செய்து கலகம்செய்துவருவதாய் அவர்பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மேமாத்தூர் பில்லாவடந்தை ரோமன் கத்தோலிக்கர் பாதிரிரெவரெண்டு ராயன், தரங்கம்பாடி சப்மாஜிஸ்திரேட்டுக்கும், பெரம்பூர் போலீசாருக்கும் சென்ற 4-9-33ல் ஷை யார் ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி வகுப்புத்துவேஷமும் விரோதத்தையும் உண்டு பண்ணினதாக ஒரு புகார் எழுதி அனுப்பினர்.

ஷை புகாரில் கண்ட விஷயம் தன்னைவேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் அவதூறு செய்யக்கூடியதாய் இருப்பதால் , ஷை பாதிரியார் ராயன் பேரில் மாயவரம் சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தோழர் மரியப்பிரகாச உடையார் இந்தியன் பினல் கோடு 500வது செக்ஷன் படி ஒரு மான நஷ்டபிராதை 24-11-33ல் தாக்கல்செய்தார். சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் கனம் வ. கே. குன்னிராமன் நம்பியார், வாதி தரப்புக்காக 6 சாக்ஷிகளை விசாரித்து பாதிரியாரின் பேரில் இ. பி. கோ. 500வது செக்ஷன் பிரகாரம் குற்றப்பத்திரிகை படித்து எதிரி தரப்பு (டிபன்ஸ்) சாக்ஷி விசாரணைக்காக 12-1-34ல் தேதி குறிப்பிட்டிருக்கின்றார்.

வாதி தரப்புக்கு வக்கீல் தோழர் எம். வெங்கிடாசலம் பிள்ளையும் எதிரிக்கு தோழர் கே. சீனிவாச ஐயங்காரும் ஆஜரானார்கள். (தமிழ் நாடு)

## மாதாகோவிலில் பரபரப்பு.

லாகூரில், லாரன்ஸ்ரோட்டு கத்தோலிக்மாதாகேவிலில் இன்றுகாலை ஓர் பரபரப்பான சமாச்சாரம் நடந்தது பிறந்து காலைந்து நாட்கள் கூட இல்லாத ஓர் குழந்தை துணிகளால் நன்றாக மூடப்பட்டு மாதாகோவில் காம்பௌண்டிற்குள் கிடந்தது. குழந்தை ஆரோக்கியமாகவும், சந்துஷ்டியாகவும் இருந்தன. சமாச்சாரம் அறிந்த போலீசார் இதைப்பற்றித் தீவிரமாக விசாரித்துக்கொண்டிருக்கின்றனர்.

## ஜெர்மன் மாதாகோவில் தகராறு.

### மதப்பிரசாரகர் காவலில் வைக்கப்பட்டார்.

மேல் பவேரியா நாட்டிலுள்ள டிரௌஸ் டீன் என்னுமிடத்தில் வைகார் என்னும் மத போதகர் வேலை பார்த்து வரும் ஜோஸப் ஸ்டெல்லி என்பவர் பொது ஜனங்கள் விரும்பா எபிபானி மதபோதனையைச் செய்ததற்காகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். (ராய்ட்டர்)

## மாதாகோவில் கொலை வழக்கு.

ஆர்ச் பிஷப் டுரையின் மாதாகோவிலில் கொலை செய்யப்பட்ட செய்தி ஞாபகமிருக்கலாம்- இது சம்பந்தப்பட்ட எழு கைதிகளைப் போலீசார் கோர்டிற்குக் கொண்டு வருகையில் ஆடவர் பெண்களடங்கிய தொரு கூட்டத்தினர் கைதிகள்மீது பாய்ந்து தாக்கத் தொடங்கினர். ஸ்திரீகள் கைதிகளைக்கிள்ளினர்; கடித்தனர்; கைதிகள் உடையைக் கிழிக்க முயன்றனர். போலீசார் கூட்டத்தினரை விலக்கி கைதிகளை கோர்ட்டிற்குக் கொண்டு போனார்களென ஒரு நியூயார்க் செய்தி கூறுகிறது.

## கோவிற்பட்டி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

கோவிற்பட்டி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு, 27-28-1-34 சனி ஞாயிற்று கிழமைகளில் ஈராவில் நடைபெறவிருப்பதால் மகாநாட்டுக்கு வரவிருப்பமுள்ள தொண்டர்கள் தொண்டர் தலைவருக்கு எழுதிக் தகவல் கொடுக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

T. M. மணி B. A.
தொண்டர் படைத்தலைவர்
கீழஈரால், எட்டயபுரம் போஸ்டு
கோவிற்பட்டி S. I. R.

## இராசிபுரம் "புரட்சி சங்கம்."

இச்சங்கத்தின் கூட்டம் 10-1-34 புதன்கிழமை மாலை 5-மணிக்கு கூடியது. அவ்வமயம் தோழர். எ. பி. துரைசாமி அவர்கள் தலைமை வகித்தார். தோழர் எப். மல்லிகார்ச்சுனக் கவிராயர் அவர்கள் "தென்னாட்டில் தோழர் காந்தியின் கொள்கை" என்று பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் முடிந்தது.

ரோஜா முத்தையா

# புரட்சி

ஈரோடு 1934-ஜனவரி மீ 14-உ


## தாலூகா போர்டுகளின் அழிவு.

நமக்கு சர்க்காரால் அளிக்கப்பட்ட ஸ்தலஸ்தாபன அதிகாரங்களில் தாலூகா போர்டு நிர்வாகம் என்பதும் ஒன்றாகும். இதானது துவக்கப்பட்டு நம்மவர்களால் நடத்தப்பட்டு வரும் கொஞ்சகாலத்திற்குள்ளாகவே இதை நிர்வகித்துவரும் அங்கத்தவர்களாலேயே "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது" என்றதற்கொத்த நடை முறையில் அதன் ஒழுக்கக் குறைவாலும், சுயநல முதிர்ச்சியினாலும், ஒழுக்கயீனமான நடை முறைகளாலும்: சிவில், கிரிமினல் விபாஜ்ய விவகாரங்களாலும் நடத்தப்பட்டு வந்ததாக ஏற்பட்டதோடு பொருளாதார முறையிலும் மிக நெருக்கடியான தன்மையிலும் அமைக்கப்பெற்று விட்டதால் இந்த சொல்ப நன்மையும் கூட நம்மவர்களின் அந்தஸ்திற்கு கெட்டதாக மாறிவிட்டதானது மிகவும் விசனிக்கத் தக்கதாகும். இதுகளைக் குறித்து பல தடவைகளிலும் நமது "குடி அரசு"வாயிலாகவும், நமதியக்கத் தோழர்களால் சொற்பொழிவுகளின் வாயிலாகவும், நமதியக்க மகாநாடுகளின் தீர்மான மூலமாகவும் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள்.

மேலும் இதை நடத்தி வருபவர்கள் இதை ஒரு பொதுநல சேவைக்கான ஸ்தாபனம் என்றும், இது மக்களின்நன்மைக்கேஅமைக்கப்பட்டிருக்கிற தென்கிற நினைவேயில்லாமல் இது ஒரு தனிப்பட்ட மனிதரின் சுய நலத்திற்கும், சௌகரியத்திற்கும், கௌரவத்திற்கும், அதிகார தோரணைக்கும், தங்கள் தங்கள் செல்வாக்குக்கும் ஏற்பட்டதாகக்கருதி அதற்காக எத்தனை பணம் செலவானாலும், எத்தனை எதிர்ப்புகள் தோன்றினாலும், யார்யார் விரோதம் வந்தாலும், வேறு என்னவந்தாலும் ஒரு கை பார்த்துவிடலாம் என்கிற நினைவோடு இத்தகைய ஸ்தாபனங்களில், அதிகார ஆதிக்யம், கௌரவம், செல்வாக்கு முதலியவைகளை இச்சித்தே பெரும்பான்மையோர் இவற்றில் நுழைந்து நிர்வாகம் செய்து வந்ததின் காரணமே இன்று இத்தகையவைகள் நம்மவர்களுக்குப் பொறுத்தமற்றதென நிரூபித்து விட்டதுடன் இவைகளுக்கு ஆதாரமாயுள்ள ஸ்தாபனங்களைநடத்துவதில்பணக்கஷ்டமதிகரிப்பதால் அவற்றை எடுத்துவிடவேண்டுமென்று சர்க்காரும் நினைத்துவிட வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டதென்றால் இதைவிட அயமானம் வேறு வேண்டுமா?

தவிரவும், இந்தஸ்தாபனங்களை நிர்வகிக்க வருபவர்களால் மக்களுக்கு ஏற்பட வேண்டிய 'நன்மைகள் தான் இவ்வாறுகப் பிரயோகிக்கப்பட்டதெனில் ஷை நிர்வாகத்தில் காரியம் நடத்திவரும் சிப்பந்திகள், உபாத்திமார்கள், உபாத்தினிமார்கள் முதலியவர்களாவது இவர்களால் நன்மையை பெறுவிட்டாலும் துன்பமாவது இல்லாதிருக்குமாவெனில் அது சம்பந்தமான ஊழல்கள், அவைகளைக்குறித்து நாம் சொல்லாமலே விளங்கக்கூடியவைகளாகும். இத்தகைய பரிதாபகரமான நிலைமையை பொதுப் பணங்களையும், பொது அதிகாரங்களையும் பொது மக்களுக்கே உபயோகமாகும்படி இனிமேலாவது அவைகளை பொதுமக்களுக்காக எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதை உத்தேசித்து நமது காருண்ய கவர்ன்மெண்டார் தற்போது வந்திருக்கும் ஒரு ஒப்பற்ற முடிவைப்பற்றிநாம் அவர்களைப் பாராட்டாமலிருக்க முடியாது.

அதாவது தாலூகா போர்டுகளை ஒழித்து விட வேண்டும் என்று சென்னை சர்க்கார் தீர்மானித்திருப்பதேயாகும். இதுசில சுயநலக்காரர்களுக்கு மட்டும் நஷ்டத்தையும், ஏமாற்றத்தையும், உண்டுபண்ணினாலும் பெரும்பான்மையாக பொது ஜனங்களுக்கு நன்மையை அளிக்கக்கூடியதாக இருக்கிறபடியால் இத் தீர்மானம் பொதுவாக எல்லோராலும் போற்றத்தக்க காரியமென்பதில் நமக்கு சிறிதளவும் ஐயமில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம். மேலும் தாலூகா போர்டுகள்; கிராமபஞ்சாயத்துக்களின் நிலைமையைப்பொருத்த விஷயங்களில் குறைபாடு உள்ளவைகளையும் கூட இனிபஞ்சாயத்துக்களை சீர்திருத்த முறைகளில் அதிகப்படுத்தி வைக்கப்படும் என்கிற ஏற்பாட்டின் மூலம் நிவர்த்திக்கப் படுமெனவும் நம்புகிறோம். எப்படியெனில நிலவரியின் பகுதியிலிருந்து ஜில்லா போர்டுக்கும், தாலூகா போர்டுகளுக்கும் பஞ்சாயத்து களுக்கும் ஆகிய ஸ்தாபனங்களுக்கும் பிரித்துக்கொடுத்து வந்ததானது இனி தாலூக்கா போர்டுகள் ஒழியப்போவதாலும் ஷை தொகைகளிலிருந்து ஜில்லா போர்டுக்கும், பஞ்சாயத்துக்கும் செலவழிக்கநேருவதாலும்பஞ்சாயத்துக்களை இன்னமும் அதிகப்படுத்தி சீர்திருத்தமுறையில் விமர்சனமாக நடை பெறவைக்க இடமேற்படுவதாலும் சிலஎதிர்பாராத நன்மை கிராமத்தவர்களுக்கு அதிகமாக ஏற்படக்கூடும். பட்டினவாசிகளைவிட கிராமவாசிகள் தான் அதிகமான சீர்திருத்தத்திற்கும் முற்போக்குக்கும் லாயக்குள்ளவர் களாகையால் மேற்படி நன்மைகள் அவர்கள் விஷயத்தில் இன்னம் கொஞ்சம் அதிகமாக உபயோகப்படும்என்கிறோம். எப்படியெனில் கிராமாந்திரங்களில் தான் உயர்ந்தவன். தாழ்ந்தவன், ஏழை பணக்காரன் என்கிற பாகுபாடுகளி ம ஆதிக்யமும் அவைகளால் ஏழைமக்களுக்குள்ள கஷ்டநஷ்டங்களும் அதிகரித்து, துன்புறுத்தி வருகின்றன வாதலால் இத்தகைய பஞ்சாயத்துக்களின் அதிகரிப்பினாலும் அதன் விமர்சனமான நடைமுறையினாலும் கஷ்டநஷ்டங்களுக்கு அடிப்படையான அறியாமையும் விலகி ஒருவாறு முற்போக்கடைவார்களென்று நம்பவும் இடந்தருகிறது.

இன்னமும், சொல்லப்புகுங்கால் தாலூகா போர்டுகளின்தேர்தல் காலங்களின் போது மக்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களும், நாணயக்குறைவுகளும், பணச்செலவுகளும், விரோதங்களும் வேலை மினக்கேடுகளும், அலைச்சல், கெஞ்சுதல், பயமுறுத்தல் ஓட்டுக்கு விலைபேசுதல் முதலிய விஷயங்களால் ஏற்படுகிற கஷ்டங்களும் தேர்தல் முடிந்தபிறகு தேர்தல் ஞாயமானதா? தப்பானதா? என்றுதெரிந்துகொள்ள அவைகளால்ஏற் படுகிற கோர்ட்டுச்செலவு:- ரெயில், கார் முதலிய போக்குவருத்துச்செலவுகள், சாக்ஷிப்படி, வக்கீல்பீசு முதலிய விரயங்களும் தாலூக்காபோர்டுகளை அழிப்பதால் ஒழிந்து விடக்கூடும் என்றும் சொல்லலாம்.

தவிர ஒவ்வொரு தாலூக்கா போர்டுகளிலும் 100-க்கு மேற்பட்டு 250 கிராமங்களவரை ஒன்றுசேர்த்து நிர்வகித்து வந்ததான நிர்வாகத்துக்கு 10-முதல் 25-மெம்பர்கள் அமைக்கப்பட்டிருந்ததைப் பஞ்சாயத்து போர்டுகள் அதிகரிக்கும்போது அந்தந்த போர்டுகளுக்கும் மெம்பர்களின் விகிதாசாரம் வரும் போது மெம்பர்களாகிய நிர்வாகிகள் அதிகரிப்பார்கள். அப்போது சொல்ப தொகையினர்களால் நிர்வகிக்கப்பட்ட ஸ்தலமானது பஞ்சாயத்து போர்டு அதிகரிப்பினால் ஆயிரக்கணக்கான ஜனங்களால் நிர்வகிக்கப்படலாம். அப்பொழுது நிர்வாகமானது ஒன்றுக்கொன்று மேன்மையுற நடந்த எத்தனமும் ஊக்கமும் உண்டாகி நல்ல முறையில் நடத்தப்படலாமெனவும் நம்ப இடமேற்படுகிறது. இதனால் ஜனநாயகத்வ முறையை அமுலுக்குக் கொண்டுவர இதுவும் ஒரு நல்ல சந்தர்ப்ப மென்பதில் ஆக்ஷேபணை இல்லை.

ஆகையால் இது போலவே சர்க்காரால் நமக்கு வழங்கப்பட்டிருக்கிற பல பொது ஸ்தாபனங்களில் நம்மவர்களால் ஏற்பட்டிருக்கிற பல ஊழல்களையும், இன்னல்களையும் கவனித்து அததுகளுக்கேற்றவாறு அப்போதைக்கப்போது காலதாமத மாக்காமல் தக்க பரிகாரங்களைத்தேடி மறுபடி இன்னல் களும், ஊழல்களும் பிரயத்தனப்பட்டாலும்கூட யாராலும் ஏற்பட முடியாத முறையில் கவர்ன்மெண்டார் அமைத்து வைப்பார்களென நம்புகிறோம்.

---

## தோழர் ஈ. வெ. ராமசாமி ராஜ நிந்தனை வழக்கு.

### ஜனவரி-மீ 15-உக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கோவை ஜில்லாக் கலெக்டர் கனம் வெஸ்துரை அவர்கள் முன்னிலையில் சென்ற 12—1—34 வெள்ளிக்கிழமையன்று தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேலும், தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் அவர்கள் மேலும் கொண்டுவரப்பட்ட 124 A, ராஜநிந்தனைவழக்குவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கோர்ட்டுக்கு ஏராளமான தோழர்கள் விஜயஞ்செய்திருந்தார்கள். வெளியூர்களிலிருந்து தோழர்கள்

சி. நடராஜன், ஏ. அய்யாமுத்து, ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், கைவல்யம், எஸ். வி. லிங்கம், எஸ். இராமநாதன் முதலிய தோழர்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஈரோட்டிலிருந்தும் தோழர்கள் ஈ. வெ. கிருஷ்ணசாமி, வக்கீல் ஈ. வி. வேணுகோபால், எஸ். இராமசாமி, ஏ. ஜி. இராமசாமி முதலியோர் சென்றிருந்தார்கள்.

கோர்ட்டுக்கு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் விஜயமானதும் அவரைப் பார்க்கப் பலர் பெரிதும் பரபரப்புக்கொண்டார்கள். தோழர் எஸ். ஆர். கண்ணம்மாளும் கேசுக்கு ஆஜராகியிருந்தார்கள். கனம் கலெக்டர் அவர்கள் வந்திருந்தவர்களுக்கு ஆசனங்கொடுத்தது பாராட்டத்தக்கது.

வழக்கு விசாரணைக்கு ஆரம்பமானதும் எதிர்தரப்பு பிராசிகியூட்டிங் கட்சியில் சிலர் விசாரிக்கப்பட்டார்கள், எதிர்தரப்புக்காகச் சென்னை சர்க்காரால் விசேஷ நியமனம் பெற்ற அட்வகேட் தோழர் ராகவேந்திராவ் அவர்கள் வழக்கை ஏற்றுக்கொண்டார். தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தனக்காக ஓர் வாக்குமூலம் (Statement) கொடுத்தார். S. R. கண்ணம்மாளுக்காக வக்கீல்கள் தோழர்கள் நஞ்சுண்டைய்யா, T. T. R. பிள்ளை, ஈ. வி. வேணுகோபால் ஆகியவர்கள் ஆஜராகியிருந்தார்கள் [முழுவிபரம் அடுத்தவாரம் வரும்] வழக்கு மீண்டும் 15-1-34 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

## காலெண்டர்கள் வரப்பெற்றோம்.

கீழ் கண்டவர்களிடமிருந்து 1934 வருஷத்திற்கான காலெண்டர்கள் வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

(1) A. ரூமனுதர் ஜஸ்டிஸ் விடுதி
திருநெல்வேலி ஜங்ஷன்

(2) கேசவலால் காளிதாஸ் சேட்.
வியாபாரிகள் ஈரோடு.

(3) B. S. சிதம்பர நாடார்
வெங்கல பாத்திர வியாபாரம்
மதுரை

(4) நார்ட்டன் & Co
ஸ்பார்ட்டன் டைப்பவுண்டரி
சென்னை.

(5) A. W. ஹாட்டன்
வாசகசாலை சென்னை.

(6) M. பகுருதீன்
லக்ஷிமி மார்க் பீடிகம்பெனி
ஈரோடு.

## பெண் 'சிப்பாய்கள்'

### சேவையில் சிரத்தை

பின்லண்டு குடியரசு நாட்டில், உலகின் மற்றப்பகுதிகளில்லாத விசேஷமொன்றுண்டு. ராணுவ உடைதரித்த பெண்கள் ஈராயிரவர் நாட்டின் சேவைக்காக முன்வந்திருக்கின்றனர். நாட்டின் தலைநகரிலுள்ள ராணுவ மைதானத்தில் வாரத்திற்கொருமுறை இவ்வீராயிரம் பெண்களும் அணிவகுத்து நின்று குடியரசுத் தலைவரை வணங்கிப் பவனி செல்வார்கள். இந்த ராணுவப்படைக்கு "லாட்டிஸ்வார்டு" என்று பெயர் வழங்கப்படுகிறது. நாட்டின் பல பாகங்களிலுள்ள பெண்கள் இப்படையில் சேர்ந்துள்ளார்கள். பெண்கள் படையைப்பழக்கி, ஒழுங்குபெறச் செய்து வீரர்களாக்கி அந்நியர் படையெடுத்து வந்தால், அவர்களை எதிர்ப்பதற்காக "லாட்டி ஸ்வார்டு" ஏற்பட்டிருக்கிறது.

போர்க்களத்தில் இப்படை யுத்தம் செய்யுமென்பதல்ல. பட்டாளம் ஒழுங்கு பெற நடத்தப்படுகிறதா? பட்டாளத்திற்குப் போதிய உணவு கொடுக்கப்படுகிறதா? என்பதை கவனிப்பதே இவர்களுடைய காரியம். "லாட்டிஸ்வார்"டைச் சேர்ந்த பெண்கள் தங்களுடைய சாதாரண வாழ்க்கையில் தங்களுடைய உசிதம் போல் வேலைகள் பார்த்து வரலாம். ஆபீஸ்களில் வேலை பார்த்து வரலாம். அல்லது வீட்டு வேலைகள் மட்டும் கவனித்து வரலாம். பணக்காரியாயிருப்பினும் சரி, ஏழையாயிருப்பினும் சரி, தேசசேவையிலீடுபட இவர்கள் எப்பொழுதும் தயார். அமைதியான காலங்களில் பள்ளிக்கூடங்களில் படிப்பதும், தேசாபிமானம் முதலியன செய்வதும் இவர்களுடைய தொழில். யுத்தகாலத்தில் ஆடவரோடு போர்க்களத்திற்குப் புறப்பட இவர்கள் தயார். 1918-ம் வருஷத்தில் ரஷியாவுக்கும், பின்லண்டுக்கும் போர் நிகழ்ந்தபோது பின்லண்டுப் பெண்களும் அமர்க்களத்திற்குச் சென்றனர்.

பின்லண்டு தேசத்தவர் உதவும் நன்கொடைகள், பொருள் முதலியவற்றின் உதவியால் பெண்கள் படைக்கு வேண்டிய உடைகள் தயாரிக்கப்படுகின்றன. இவர்கள் பட்டாளத்தில் சேர்ந்திருக்கும்போது இவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களைக் குடியானவர்கள் கொண்டுவந்து கொடுப்பார்கள்.

1809-ம் வருஷம் பின்லண்டில் நிகழ்ந்த யுத்தத்திற்கு கணவனோடு தானும் செல்வதாக லாட்டிஸ்வார்டு என்ற பெண்மணி இறைஞ்சினள். அந்த யுத்தத்தில் போர் வீரர்களுக்கு வேண்டிய வசதிகள் யாவற்றையும் லாட்டிஸ்வார்டு செய்துகொடுத்ததோடு, காயமடைந்த வீரர்களுக்குக்கும் சிகிச்சை செய்து வருவாளாயினள். இத்தகைய சிறப்புவாய்ந்த இம்மாதின் பெயரே தற்பொழுது பின்லண்டிலுள்ள பெண்கள் படைக்கு இடப்பட்டது.

"லாட்டிஸ்வார்"டில் சேர்ந்துள்ள ஒவ்வொரு பெண்ணும சமையல் வேலை, பிரதம சிகிச்சை முதலியவைகளில் தேர்ச்சி பெற்றவளாகவே யிருக்க வேண்டும். இதற்கென ஒரு பள்ளிக்கூடமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. போர்க்களத்தில் அனுசரிக்கவேண்டிய சுகாதார விதிகளைப் புகழ்பெற்ற பெண் டாக்டரொருவர் கற்றுக்கொடுக்கின்றார். கோடைக்காலத்தில் ஆடவர் படை ராணுவ நிலையத்திற்குச் சென்றபோது, "லாட்டிஸ்வார்"டின் பகுதிகள் ஆடவர் படைக்கு வேண்டிய உணவைத் தயாரித்துக் கொடுப்பதும், ஆடவர் படையின் இருப்பிடத்தைச் சுத்தி செய்வதுமான காரியங்களைச் செய்து வரும்.

பெண்கள் படையின் தலைவி டாக்டர் பானிலூக்கொனென் என்பவர்.


## சலவைத்தொழிலாளர் முதல் மகாநாடு.

திருச்சியில் 1934-ஹு ஜனவரி மாதம் 22, 23-ந் தேதிகளில் நடைபெறும்.

சென்னை மாகாண இரண்டாவது மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைக்க அன்புடன் ஒப்புக்கொண்டுள்ளார்.

தோழர். என். சிவராஜ் எம். எல். சி. அவர்கள் மகாநாட்டின் தலைவராக இசைந்துள்ளார்.

பொன்மலைத் தோழர் எ. கருப்பணன் அவர்கள் வரவேற்புக் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மகாநாட்டிற்கு விஜயம் செய்யும் வெளியூர் பிரதிநிதிகளுக்குசாப்பாடும இடவசதியும் இலவசமாய் செய்து கொடுக்கப்படும். மகாநாட்டிற்கு தீர்மானங்கள் அனுப்புகின்றவர்கள் 15-1-34 க்குள் மகாநாட்டின் காரியதரிசிக்குக் கிடைக்கு மாறு அனுப்பவேண்டும்.

வரவேற்புக்கட்டணம் ரூ. 2—0—0.
பிரதிநிதி ………… ரூ 1—0—0.

M. துரைசாமி,
T. M. சிவசுப்பிரமணியம்,
காரியதரிசிகள்.


## கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

### நிர்வாகிகள் தேர்தல்.

10-1-34ந் தேதி டை சங்கத்தின் கூட்டம் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடியது அதில் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்களை தலைவராகவும், தோழர்கள் ஆர். நஞ்சையா, பி. எஸ். எம். சங்கரலிங்கம் ஆகியவர்கள் உபதலைவர்களாகவும், ஆர். ஷென்காரியதரிசியாகவும், தோழர்கள் சுப்பிரமணியம், செல்வராஜ் உபகாரியதரிசிகளாகவும், தோழர் சி. என். நாராயணன் பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு 14 பேர்கள் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## கும்பகோணம் சுயமரியாதைப் பொதுக்கூட்டம்.

31-12-33 ஞாருற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு காந்தி பார்க்கில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் கே. எல். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தோழர் எ. இரத்தினசாபாபதி இனிபட முடியாது துயரம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள்.


## சீர்காழியில் "புரட்சி" கிடைக்குமிடம்.

S. K. ரூமாமிர்தம் & Co.,
பழம், இங்கிலீஷ் காய்கறிகள்
& ஜெனல் மர்ச்சன்ட்,
கடைவீதி, சீர்காழி.

## ஏஜண்டு தேவை.

நமது "புரட்சி" பத்திரிகைக்குத் தக்க பொறுப்புள்ள டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு ஒருவர் சேலத்திற்கு தேவை. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
"புரட்சி" ஈரோடு.

## திருச்சி உண்மைநாடுவோர் வாசகசாலை திறப்புவிழா.

திருச்சி ஆலமரத் தெருவில் உண்மைநாடுவோர் வாசகசாலை யென்று ஒன்று சென்ற 25.12-33-ல் மாலை 5-30 மணிக்கு தோழர் கி, ஆ. பெ. விஸ்வனுதம் அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி வாசகசாலையை தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் திறந்துவைத்தார்கள். அதுசமயம் தோழர் டி. சாமுவேல் அவர்களால் பிரேரேபிக்கப்பட்ட கீழ்கண்ட காந்தி பகிஷ்கார த் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானம் வருமாறு.

"தோழர் காந்தி அவர்கள் தீண்டாமைவிலக்கு என்றபெயரால் வருணுஸ்ரம மதப் பிரசாரம் செய்ய வருவதால் இக் கூட்டம் அவரைப் பகிஷ்கரிக்கிறது.,'

பின்னர் தோழர் ராஜமாணிக்கம் "வாலிபர் ஒற்றுமை" என்ற பொருள்பற்றி பேசினுர். வாசகசாலைத் தலைவராகத் தோழர் பி. பிச்சையப்பன் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டபின் தலைவர் முடிவிரைகூற கூட்டம் 5-20 மணிக்கு இனிது முடிந்தது.

## இராசிபுரம் விவேகாநந்த தேகப்பயிற்சி சங்கம்.

7-1-34 மாலை 7-மணிக்கு மேற்படி கட்டிடத்தில் வாராந்திரக் கூட்டம் கூடப்பட்டது. அக் கூட்டத்திற்கு தோழர் ம. ரா. கந்தசாமி அவர்கள் தலைமைவகித்தார். தோழர் எல். அர்த்தனுரி அவர்கள் "விதவைகள் பரிதாபம்" என்பதுபற்றி ஓர் உபந்நியாசம் நடைபெற்றது, பிறகு முறையே தோழர் ம. ஆ. அண்ணுமலை அவர்களும், தோழர் பா. அர்த்தனுரி அவர்களும் சுயமரியாதை என்பது என்ன. அறிவைச் சுதந்திரப்படுத்துவதே. என்பதுபற்றியும் தோழர் எஸ். அங்கமுத்து தோழர் எல். ஏகாம்பரம், தோழர் எஸ். காமாக்ஷி ஆகியவர்கள் விதவை மணமே நமது நாட்டு முன்னேற்றம் என்பதுபற்றியும் பேசியவுடன் தலைவர் முடிவுரை கூற கூட்டம் 9-மணிக்கு முடிந்தது. என காரியதரிசி எழுதுகிருர்.

## மரணம்.

அழகிய நல்லூர் சுயமரியாதைப்பாவலர் தோழர் அ. வெங்கிடசாமி அவர்களின் தாயார சிங்காரம்மாள் அவர்கள் திருப்பத்தூர் கிறித்துகுல ஆசிரமத் தொண்டர் தோழர் ஞானனந்தர் அவர்கள் பராமரிப்பிலிருந்து சென்ற 7-1-34 தேதி ஆசிரமத்திலேயே காலமானுர்.

## சென்னை மயிலாப்பூர் சுயமரியாதைச் சங்கம்.

மயிலாப்பூர் சு. ம. சங்கத்தைச் சேர்ந்த வாசகசாலை ஒன்று 17-1-34 மயிலாப்பூர பிரசன்னவிஞயகர் கோவில்வீதி12வதுசெம்பர் கட்டிடத்தில் சங்கத் தலைவர் தோழர் எம். சிங்காரவேலு அவர்கள் தலைமையில் தோழர் எஸ். ராமனுதன் அவர்களைக்கொண்டு வாசகசாலை திறப்புவிழா நடைபெறும். [ஒரு நிருபர்]

## மன்னுர்குடி.

இவ்வூருக்கு சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ள மூவாநல்லூர் என்ற கிராமத்தில் தோழர் மருத முத்து அவர்களின் தமயனுர் இலந்து 16ம் நாளாகிய 5-1-34ல் மூடச்சடங்குகள் யாவும் அறவே ஒழிக்கப்பட்டது மன்றி மன்னுர்குடியிலிருந்து தோழர்கள் கே. ஆர். ஜிபால், ஆர். கோவிந்த ராஜலு, ராமச்சந்திரன், ஆண்டியப்பன், கலய பெருமாள் ராஜகோபாலன், ஸ்ரீனிவாசன், யு. எஸ். சோமசுந்தரம் முதலியவர்கள் காலை 8-30மணிக்கு மூவாநல்லூரில் கருமாதி நடக்க வேண்டி பிடாரி கோவில் ஆலமரத்தடியில் வந்து சேர்ந்தார்கள். ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். தோழர் ஆர் கோவிந்த ராஜலு அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் கே. ஆர். ஜி. பால், யு. எஸ். சோமசுந்தரம் முதலியவர்கள் மூடப்பழக்க வழக்கம் சமதர்மம் முதலியவைகளைப்பற்றி வெகு தெளிவாக நீண்ட சொற்பொழி வாற்றினுர்கள் விருந்துண்டு 4மணிக்கு மன்னுர் குடிக்கு வந்துசேர்ந்தாகள்.

(ஒரு நிருபர்)

## புதுப்பாளையம் சமதர்ம வாசகசாலை.

7-1-34 ஞாயிற்றுக்கிழமை மாலை $2\frac{1}{2}$-மணிக்கு வாசகசாலையின் கூட்டம் தோழர் ஆர். சபாபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் "கடவுளும் மனிதனும்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினுர். பின்னர் ஷை விஷயத்தை பின்பற்றியேதோழர்கள் ப. கிருஷ்ணன், வி. தங்கவேலு, ஏ. முத்துகிருஷ்ணன் ஆகியவர்கள் பேசினுர்கள். தோழர் கு. ஆறுமுக ஆச்சாரி அவர்கள் "கடவுளும் மனிதனும்" என்பதுபற்றியும், "பொங்கல் பண்டிகையின்" ஆபாசங்களைப்பற்றியும் தஞ்சை தோழர் ஆறுமுகம் அவர்கள் "ஜாதி, மதம்" என்பது பற்றியும், சொற்பொழிவாற்றினுர்கள். தர்க்கத்திற்கு பின் தலைவர் முடிவுரை கூற கூட்டம் இரவு $8\frac{1}{2}$-மணிக்கு இனிது கலைந்தது.

## ஈரோடு வா. மூ. தங்கபெருமாள் ஞாபகார்த்த கால்பந்து விளையாட்டு.

அகிலபாரத சர்க்கா சங்கக் காரியதரிசியாயும், தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசியாகவும் "குடி நூல்," "குடி அரசு" பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்து 6—3—26 தேதியில் காலஞ்சென்ற தோழர் வா. மூ. தங்க பெருமாள் பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக கல்பந்துவிளையாட்டு [Food- Ball Tournament] 4—1—34 முதல் நடைபெறுகின்றன. அதற்காக சென்னை, பெங்களூர், சேலம், திண்டுக்கல், மதுரை, திருச்சி, வாணியம்பாடி, கோயமுத்தூர் முதலிய ஊர்களிலிருந்து வந்த விளையாட்டுக்காரர்கள் விளையாடிக்கொண்டிருக்கிறுர்கள்.

(நமது நிருபர்)

## வீர சைவ சேணியர்குல வாலிபர்களுக்கோர் வேண்டுகோள்,

கூடியசீக்கிரத்தில் சேணியாமாகாண மகாநாடு சேலம்ஜில்லாவில் கூட்டுவதற்காக இராசிபுரம்வாசிகள் தீவிர பிரயத்தனம் செய்தும் பல பத்திரிகைகளிலும் வெளியிட்டும் இருப்பதால் ஒவ்வொரு சேணிய வாலிப வீரர்களும் இம் மகாநாட்டுக்கு முன்வந்து நமது முன்னேற்றத்திற்கான பல தீர்மானங்களும் கொண்டுவந்து நமது சமூகத்தைச் சீர்படுத்துவீரெனக் கேட்டுக்கொள்கிறோம். இப்படிக்கு,

இராசீபுரம் சேணிய வாலிபர் முன்னேற்ற சங்கத்தார்.

12-மாதங்களிலும் சுமார் 100-பகுத்தறிவு வாககியங்கள் கொண்ட 1934-ம் ஞு கியாலண்டர்கள்.

சுயமரியாதைக்காரர் ஒவ்வொருவரிடமும் தவறுமல் இருக்கவேண்டியது. 12-இதழ்கொண்ட கியாலண்டர் 1-க்கு 0—0—3. தபாலில் அனுப்ப கீழே குறிப்பிட்ட ஸ்டாம்புகள் அனுப்பவும்.

| | | |
|---|---|---|
| 1-கியாலண்டருக்கு | | 0—1—0 |
| 5 | ” | 0—3—6 |
| 11 | ” | 0—7—0 |
| 20 | ” | 0—12—0 |

A. இராமநாதர்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

## பிறப்பு.

வில்லிவாக்கம் மேலையம்பதி தோழர் வி. ஏ. பாலாம்பிகை ஆறுமுக மூர்த்திக்கு 26-12-33 செவ்வாய்க்கிழமை பகல் 2-30மணிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை ஸ்டாலின்என்றபெயரால் அழைக்கப் படுமென தெரிவிக்கிறுர்.

## சுதேச மித்திரன். ஆசிரியர் மீது வழக்கு 35,000 ரூ மான நஷ்ட ஈடு கொடுக்க மனு 'ஆனந்த விகடன்' புகார்,

'சுதேச மித்திரன்' ஆசிரியர் மீது 'ஆனந்த விகடன்' பத்திரிகை ஆசிரியரும், சொந்தக்காரருமான தோழர் எஸ். எஸ். வாஸன் மான நஷ்ட ஈடு வழக்குத் தொடர்ந்துள்ளார். ஆனந்த விகடனில் வெளியாகும் போட்டிப்பந்தயங்கள் சம்மந்தமாக ஆட்சேபகரமான கட்டுரைகளைப் பிரசுரித்திருந்த தாகவும் எனவே தமக்கு மான நஷ்ட நடாக 35,000 ரூ. கொடுக்க வேண்டுமென்றும் தோழர் வாஸன் வழக்குத் தொடர்ந்திருக்கிறுராம்.

## இந்திய சுயமரியாதை சங்கம் செந்துல், கோலாலம்பூர்.

இச் சங்க மாதாந்தரப் பொதுக் கூட்டம் 30-12-33 பிற்பகல் $7\frac{1}{2}$ மணிக்கு தோழர் தா. சு குருசாமி அவர்கள் தலைமையில் நடந்தது.

இச் சங்கத்தில் புது உத்தியோகஸ்தவர்கள் நியமனம் செய்யவேண்டியிருப்பதால் கீழ்கண்ட உத்தியோகஸ்தர்களை இப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பெற்றது.

தலைவர்:தோழர் சி. வி. குப்புசாமி.

காரியதரிசி: தோழர் மு. வேலாயதம்

உபகாரியதரிசி: தோழர் அ. சுப்ரமணியம்.

பிறகு தோழர் மா. செ. பரிமணம் அவர்கள் இயக்கத்திற்குப் புதுப்பலம் எனும் விஷயம் பற்றி பேசினுர். அடுத்த படியாக பினுங்கு ஜன வர்த்தமானி ஆசிரியர் தோழர் எம். எஸ். மாலிம் அவர்கள் பகுத்தறிவு இயக்கம் என்பதுபற்றி பேசினுர், அடுத்தபடியாவ தோழர் பி. பிச்சை முத்து அவர்கள் சமூக சீர்திருத்தம் என்பதுபற்றி பேசினுர். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் 9.30 மணிக்கு கலைந்தது. (காரியதரிசி)

## நன்றியறிதல்.

என் தகப்பனுர் வி. வரதராஜலு முதலியார் 5-1-34-ந் தேதி மரணமான செய்தியைப் பத்திரிகை மூலமாகவும், கடிதமூலமாகவும் அறிந்துகொண்ட பல தோழர்களிடமிருந்து அநுதாபக் கடிதங்கள் வந்திருப்பதற்கு இச் சமயம் தனித்தனிக்கடிதம் எழுதமுடியாததுபற்றி வருந்துவதோடு என் தகப்பனுரின்மேல் தோழர்கள் வைத்திருந்த நம்பிக்கைக்கு என் நன்றியறிதலான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்புள்ள,
வி. பார்த்தசாரதி
ஜோலார்பேட்டை.

# ரஷ்யச் செய்திகள்.

## 21,000 ஆராய்ச்சி நிபுணர்கள் சிரத்தை.

விஞ்ஞான ஆராய்ச்சியும், விஞ்ஞான முறையிலாக்கப்படும் கைத்தொழில் திறனும் சோவியத் ருஷ்ய வளர்ச்சியில் மிகவும் முக்கியமான அம்சங்களாகும். சோவியத் ருஷ்ய நாட்டில் கிடைக்கப்படும் எல்லாவித இயற்கைப்பொருள்களும் ஆராய்ச்சி செய்யப்பட்டு விஞ்ஞான விற்பன்னர்களின் முடிவுகளின்படி நாட்டுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. இரவும் பகலும் பொருளாராய்ச்சியில் கைதேர்ந்த நிபுணர்கள் இத்துறையில் வேலை செய்து கொண்டேயிருக்கிறார்கள். அரசாங்கம் இவர்களுக்கென தனி வசதிகளும் தனி உரிமைகளும் கொடுத்து இவர்களை உற்சாகப்படுத்தி வருவதோடு இவர்களது முடிவிற்கேற்ப அவ்வப்போது விஞ்ஞான முறைகளில் அந்நாட்டுப் பொருள்களை உபயோகித்து வர அரசாங்கம் பெரும் முயற்சியும் எடுத்து வருகின்றது.

சோவியத் அரசாங்கத்தின் கீழ் விஞ்ஞான ஆராய்ச்சி கழகங்கள் வளர்ந்து வந்திருக்கும் விதத்தையும் இனி இடப்பட்டிருக்கும் திட்டங்களை குறித்தும் காஸ்பிளான் உதவி தலைவரான "லாயவ்" என்பவர் கூறியதாவது:— "ஜார் அரசர் காலத்தில் ருஷியாவில் 1800ம் வருடத்திலிருந்து 1817ம் வருடம் வரைவிஞ்ஞான ஆராய்ச்சிக்கழகங்கள் 4லிருந்து 239 வரை யிருந்து வந்தன. ஆனால் புதிய ருஷியவில் 1930ம்வருடத்திற்குள் 1500 ஆராய்ச்சி கூடங்கள் வரை அமைகப்பட்டுள்ளன. புரட்சிக்கு முன்னால் 117 வருடங்களுக்கு முன் 283 கழகங்களே திறக்கப்பட்டிருந்தன. இப்பொழுது 13 வருட வேலையில் 1200கழகங்கள் அதிகப்பட்டிருப்பதானது ஜார்காலத்திதை விட 7பங்கு அதிகமாக வளர்ந்திருப்பது சொல்லாமலே விளங்குவதாகும். ஜார் அரசர்கள் காலத்தில் அதாவது 1800ம் வருடம் 200 ஆராய்ச்சியாளர்களே யிருந்தனர். 1917ம் ஆண்டிலோ 4240 பேர்கள் ஆராய்ச்சி வேலையி லீடுபட்டிருந்தார்கள். ஆனால் 1930ம் வருடத்தில் 2400 விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் ஓய்வு ஒழிவு யின்றி வேலையிலீடு பட்டு உழைக்கின்றார்கள்"

### 5வருஷத் திட்ட வெற்றி.

திரும்பவும் அவர் கூறுவதாவது:- "நாம் இட்டுள்ள ஐந்து வருடத்திட்டம் சீக்கிரம் நமக்கு வெற்றியை அளிக்கும் என்பதற்கும் சந்தேகமில்லை. விஞ்ஞான சாஸ்திரம் நமது ஜீவநாடிகளை நன்கு கைப்பற்றி நமது நாட்டையே திருத்தியமைக்கப்போவதை நாம் இப்பொழுதே நிதரிசனமாகக் கண்டு வருகிறோம். அடுத்த திட்டத்தில் நாம் உலக தேசங்கள் ஆச்சரியப்படும்படியும் அதிசயித்து மலைக்கும் விதமும் நமது வளர்ச்சிகள் ஓங்கிப்பெருகவேண்டும். நாம் இன்னும் சமுதியில் 6கோடி கில்லோ வாட்ஸ் சக்தியையளிக்கும் மின்சாரத்தையும் 6கோடி டன் இரும்ப உற்பத்தியையும் 15கோடி டன் எண்ணெய் உற்பத்தியையும் வருடாவருடம் உற்பத்திசெய்து முடிப்பதற்கு ஒவ்வொரு வரும் முனைந்து வேலையிலீடுபட வேண்டும். இதற்கு நமக்கு விஞ்ஞான ஆராய்ச்சியிலடங்கும் எல்லா விதப் பொருள்களும் நமக்கு அத்தியாவசியம். இதோடு ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்காவிலுருந்தும் நாம் அநேக விஷயங்களை வெகு துரிதமாகக் கள்று வர வேண்டும்"

### விஞ்ஞான உதவி

புரொபஸர் 'ஜாபி' என்பவர் சோவியத் ருஷியாவின் சினிமாப்படங்கள் ரேடியோ கருவிகள் முதலியவைகளின் ஆராய்சித் தலைவரானவர். அவர் இவைகளின் வளர்ச்சியில் புதியதோர் திட்டமிட்டு வருகின்றார் அவர் விஞ்ஞான ஆராய்ச்சியைக் குறித்து கூறுவதாவது:—"விஞ்ஞான சாஸ்திரம் ஒவ்வொரு உற்பத்திப் பொருள்களிலும் மிளிரவேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் அது பிரதி பலிக்க வேண்டும். தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் தனது புத்தியையும், திறனையும் ஒவ்வொரு கருவிகளிலும் நன்கு உபயோகித்து புதிய விஷயங்களைக் கண்டு பிடிப்பதில் அதிக ஊக்கம் காட்டிவர வேண்டும் இது கூட்டுறவால் ஆக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள் ஒன்றோடொன்று போட்டியிட்டு முற்போக்கு விஷயத்தில் அதிக கவனம் செலுத்தினால் ஆராய்ச்சி நுட்பங்கள் அதிகமான அதிசயங்களை திடீரென நமக்கு எடுத்து விளக்குமென்பதை யாவரும் அறிய வேண்டும.

நமது நாட்டில் மண்ணில் மறைந்து கிடக்கும் ஆராய்ச்சிப் பொருள் வளங்கள் உலக மக்களின் கண்களுக்கு பிரேமையை ஊட்டி வருகின்றன. நாம் எதைச் செய்வதற்கு முற்பட்ட போதிலும் மோட்டார் வண்டிகளோ அல்லது ரயில் தொடர்களோ தொழிற்சாலைகளோ அல்லது எவையாயினும் நமக்கு முதலில் வேண்டுவது அபார சக்தியென்பதை மறந்து விடலாகாது. நாம் எவ்வளவு சக்திகளை அதிகப்படுத்தி விடுகிறோமோ அவ்வளவுக்கதிகம் நமது தொழிற் திறங்கள் பெரிதாக அமைந்து விளங்குவதாகும். நமது தற்கால சக்திகளோ மிகவும் பிற்போக்கானதும், சாரமற்றதுமாகும். பூமியில் படிந்திருக்கும் நிலக்கரியில் லட்சக்கணக்கான ஆண்டுகளால் கதிரவனின் மாயா சக்தியால் திரட்டி வைக்கப்பட்டிருக்கும் விஞ்ஞான சக்தியை நாம் இன்னும் கண்டு தெளியக்கூடவில்லை. நமது நாட்டிலிருக்கும் நிலக்கரியின் சக்தியில் 100க்கு 20 பங்கைத்தான் நாம் இப்பொழுது உபயோகப்படுத்தி வருகிறோம் மீதியுள்ள 80 பங்கும் அப்படியே பாழாய் கிடக்கின்றன. இப்பொழுது நாம் முற்பட்டிருக்கும் அளவில் இன்னும் சிறிது காலம் விடா முயற்சி எடுத்து உழைப்போமாயின் நமக்குக் கிடைத்திருக்கும் இவைகள் அத்தனையும் உபயோகித்து வரலாம் இது ஒன்றே நமக்குப் பெரும் செல்வமாகும். உலகம் என்ன செய்ய முற்பட்டாலும் நம்மை அசைக்கவோ ஆட்டவோ முடியாதென்பதை நாம் யாவரும் ஞாபகத்தில் வைத்து வர வேண்டும்.

---

### ஏராளமான ரத்தம் தயார்.

சோவியத் ரஷியர் சைனியங்களுக்காக ஒருவகை "சஞ்சீவி" கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. யுத்தம் நேர்ந்தால் முன் வரிசையில் சண்டைபோட்டுக் காயமடையும் சிப்பாய்களுக்கு தேவையான ரத்தத்தை உடலில் ஊட்டுவதற்கான புதிய வழி யொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றி விடலாமென்று விஞ்ஞான சபையின் அங்கத்தினரான புரொபசர் போகோமோலட்ஜ் என்பவர் தெரிவித்திருக்கிறார்.

மாஸ்கோவிலுள்ள "இரத்தம் ஊட்டும் ஸ்தாபனத்தின் மத்திய ஸ்தாபனம்" "டெம்பி ஜான்ஸ்" என்று சொல்லப்படும் பாட்டில்களைக்கண்டு பிடிதிருக்கிறது. இதில் ரத்தத்தை சேமித்து வைப்பது சாத்தியமாகிறது அவ்வாறு சேமிக்கப்பட்ட ரத்தம் 14 தினங்கள் வரை கெடாமலிருக்கிறது அங்கிருந்து அதை ரயிலில் அனுப்பி வ்ளாடி வோஸ்டாக் என்னுமிடத்தில் (6000 மைல் தூரம்) உயிர்களை காப்பாற்றச் செய்த பரீட்சை வெற்றிகரமாக முடிந்திருக்கிறது.

---

### சங்கீத அபி விருத்தி.

ருஷியாவில் சங்கீத அபிவிருத்தி அதிகமாகச் செய்து வருகின்றனர். பெரிய கிராமபோன் தொழிற்சாலையொன்றை மாஸ்கோவுக்கு வடக்கே உள்ள நோஜின்ஸிக்கில் சமீபத்தில் கட்டு முடித்திருக்கின்றனர். இந்த தொழிற்சாலையில் மாத்திரம், வருடமொன்றுக்கு 4 கோடி கிராமபோன் பிலேட்டுகள் தயாரிக்கக்கூடும். நான்கு பேர்களுக்கு ஒரு பிளேட் வீதம் ருஷியா முழுவதும் சப்ளை செய்யக்கூடிய அளவு பிளேட்டுகள் ருஷியாவில் தயாராகின்றன,

லெனின்கிராடில் மற்றொரு பியானோ தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கின்றனர். அந்த தொழிற்சாலையில் சென்ற நவம்பர் மீ முடிய பதினொரு மாதங்களில் 3,378 பியானோக்கள் தயார்செய்தனர். ஆனால் அது ருஷியருக்குப்போதவில்லையாம். எனவே தொழிற்சாலையை இன்னும் பெரிதாகச் செய்யப்பேகிறார்கள்.

---

### விவசாயிகள் பத்திரிகை.

ரஷ்யாவில் 1923-ஞு நவம்பர் மாதம் 23 தேதி ஆரம்பிக்கப்பட்ட விவசாயிகளுடைய முதல் பத்திரிகையானது சமீபத்தில் அதனுடைய 10.வது வருஷக்கொண்டாட்டத்தை நடத்தியது. ஒவ்வொரு நாளும் 3300000 பிரதிகள் அச்சியற்றப்படுவதோடு அது 15000 கிராம நிருபர்களிடை அதிலும் பொரும்பாலோர் கூட்டுப்பண்ணை விவசாயிகளானவர்களிடை சம்பந்தத்தைக்கொண்டிருக்கிறது. இப்பத்திரிகை ஆரம்பித்த காலத்திலிருந்து இது பலத்தபிரசார வேலையையும் நிர்வானவேலையையும் செய்து வந்திருக்கிறது. நிலங்களில் வேலை செய்யும் ஒவ்வொரு டிராக்டர்களிலும் இப்பத்திரிகையின் நிருபர் ஒருவர் இருக்கிறார். இவர்கள் வயல்களில் நடைபெறும் வேலைமுன்னேற்றத்தைக் குறித்து பத்திரிகையின் ஆசிரியர் கழகத்திற்கு உடனுக்குடன் அறிவிக்கின்றார். மற்றும் பல ஜில்லாக்களிடையேயும் சுற்றுப் பிரயாணம் செய்யும் ஆசிரியர் நிர்வாக கழகத்தார்கள் அச்சு இயந்திர நிலையங்களுடனேயே கார்களில் பல ஜில்லாக்களிடைய செல்கின்றார்கள். இதன் மூலமாக உள்நாட்டு விஷயச் செய்திகளோடு அந்தந்த ஸ்தலத்திலேயே அச்சியற்றப்படும். விசேஷ பதிப்புகளோடும் பத்திரிகை வெளிவருகிறது. ஐக்கிய அபேதவாத சமதர்ம ரஷ்யாவின் யூனியனில் உள்ள சகலரிடமும் இப்பத்திரிகை நன்கு உலாவ ஆங்காங்கே வழங்கப்படும் பல பாஷைகளிலும் அது பிரசுரிக்கப்படுகிறது.

### ஆங்கிலோ ருஷியா சம்பந்தம்.

ருஷிய சர்க்கார் நிர்வாக கமிட்டி கூட்டமொன்றில் ருஷிய அன்னிய நாட்டு மந்திரியான தோழர். விட்வினுப் பேசியபோது கூறியதாவது:— ஆங்கிலோ-ருஷிய சம்மந்தத்தில் பலமோ, உறுதியோ இல்லாமலிருந்து வருகிறது, இரு நாடுகளும் சிநேகமாக இருக்க வேண்டுமென்பதே நமது அபிப்பிராயம். ஆங்கிலோ-ருஷியா சம்மந்தம் உறுதியாக இல்லாமலிருப்பதற்கு பிரிட்டனிலுள்ள சில ஜனங்களே காரணமாவார். பிரிட்டிஷ் ஜனங்கள் பொது அறிவு படைத்தவர்களாக இருந்தும், இன்னும் அவர்களிடை அத்தகைய பித்தர்களும், மடையர்களும் இருந்து வருவது ஆச்சரியமாக இருக்கிறது. மற்ற நாடுகளைப்போல் பிரிட்டனுடனும் சிநேகபாவத்துடனிருந்து வரவேண்டுமென்பதே ருஷியாவின் விருப்பமாகும்.

[8-ம் பக்கத்தொடர்ச்சி]

சராசரி 8-மணிகளுக்குமேல் வேலை செய்யக் கூடாதென்ற எக்ரிமெண்டை ஏற்படுத்தியதும் இதுதான். ஆனால் எந்த எக்ரிமெண்ட வந்தாலும் ஆங்காங்கு இருக்கு ட்ரேட் யூனியன்கள்தான் கண்விழித்திருந்து இந்தக் கன்வெண்ஷன்களையெல்லாம் முதலாளிகள் கடைபிடித்து ஒழுகும் மாதிரி செய்யவேண்டும்.

ஆகையால் ராஜீய விஷயங்களிலும் சரி, உலக விஷயங்களிலும் சரி, தொழில் விஷயங்களிலும் சரி, தொழில் யூனியன்கள் இல்லாமற்போனால் தொழிலாளி கஷ்டப்படுவான். ஜாதிக் கட்டோ தளர்ந்துபோய்விட்டது. தொழிற்கட்டுதான் இனிமேல் பிரயோஜனப்படவேண்டும். விவசாயம் செய்து வாழும் ஜனங்களுக்குப் படிப்புக் கிடையாது. தாங்கள் மேம்பட வெண்டுமென்ற புத்தியும் கிடையாது, தங்களுக்குத் தீங்கிழைக்கும் யாவரையும் கண்டால் பயமோ, யொழிப்பை தைரியமும் கெஞ்சரப்பும் கிடையாது. மேற்சொன்னபடி கிராமம் கிராமம் தோறும் தொழிற்கட்சிகள் ஏற்படுத்தினால் தான் பொது ஜனங்கள் படிப்பின்மையிலிருந்தும், ஏழ்மையிலிருந்தும் தப்பிக்க முடியும்,

விலை வாசிகள் குறைந்ததும் குத்தகை திண்ணையில் உட்கார்ந்து வசூல் செய்துகொண்டுபிழைத்து வந்த முதலாளிகளும், கனவான்களும் சட்டசபைகளில் கிஸ்து குறைபடவேண்டுமென்று ஆரவரித்தனர். ஒருவராவது வாரசாகுபடி செய்து தான் சிலவழித்த பணத்தைக்கூட காணாத வாரச் சாகுபடிக்காரனைப்பற்றி யோசிக்கவில்லை. முதலாளிகளை விலைகள் குறைந்ததால் கஷ்டப்பட்டார்கள் என்றால் 2 மரக்கால் வாரம் வாங்கி பிழைத்த ஏழைகள் படுகின்ற கஷ்டம் சொல்லிக்கொள்ள முடியாதது. தொழிற் யூனியன்கள் இருந்து இருந்தால அவர்கள் தங்கள் துக்கங்களை அவைகள் தங்கள் துக்கங்களை அவைகளின் மூலமாய் சொல்லிக்கொள்ளலாம்.

சிலர் கூலிக்காரர்களைப்பற்றிக் கூவுகின்றனர், கூலி மிகவும் ஏறிவிட்டது என்று நாம் சொல்வதைக் கேட்கிறோம். விலைகள் சண்டைக்குப் பின்பு அதிகமாய் ஏறின பொழுது விலைகள் ஏறின அளவுகூலிகள் ஏறினவா? இல்லை.

சென்ற 10 வருஷமாகக் கிராமங்களில் கொஞ்சம் நாகரீகம் பரவியிருக்கிறது. கூலி ஜனங்களில் பலர் வெறும் கஞ்சி குடித்துச் சந்தோஷித்த காலம் போய் உடை படிப்பு, நாகரீகப் பரவலினால் ஏற்பட்ட சில தளுக்குகள் (trappings of civilisation) எல்லாவற்றையும் கற்று களித்திருக்கின்றனர், கூலிகளை மறுபடியும் முன்னிருந்த நிலைமைக்குக் கொண்டு வந்தால் இவைகளெல் பறக்கவேண்டியதுதான். ஆனால் சிலர் கூலிகளை குறைக்க வேண்டுமென்று கூவி வருகின்றனர். அது சற்றும் முடியாத காரியம். ட்ரேட் யூனியன்கள் ஏற்படுத்திக்கொண்டு வாரசாகுபடி செய்வோரும் கூலி ஜீவனம் செய்வோரும் போராட வேண்டியதுதான். இல்லையேல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் உபற்ற கஞ்சியும் சந்தோஷமில்லா வாழ்வும் திரும்பி வந்துவிடும்.

உலகமெங்கும் பொதுவுடமை கக்ஷிகளின் ஆரவாரம் பொங்கி வழிந்தோடுகின்றது. "தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவேன்" என்று தொழிலாளி உலக முழுதும் கர்ஜிக்கின்றான். நமதிந்தியாவில் ஏதோ சில பட்டிணங்களைத் தவிர வேறெங்கும் தொழில் யூனியன்கள் ஏற்படுத்தப்படவில்லை. தனி மனிதனால் இந்நாளில் ஒன்றும் சாதிக்க முடியாது என்று தெரிந்த விஷயம். ஆகையால் கிராமங்களில் உழுது ஜீவனம் செய்யும் மக்கள் ஒன்று சேர்ந்தால்தான் சென்ற பத்து வருஷங்களில் விலைகள் உயர்ந்ததால் ஏற்பட்ட சில சௌகரியங்களைக் காக்க முடியும். இன்னும் மென்மேலும் விருத்தியும் அடையலாம்.

---

(7-பக்கத் தொடர்ச்சி)

அவசரக் கோரிக்கைகளை கட்டுப்பாடாக அமைத்து அ. இ. கா. ஏற்றுக்கொள்ளாதவரையில் தேசவிடுதலைப் போராட்டமானது வெற்றிபெறுமென்று சிறிதும் கூறமுடியாது.

டிரேட் யூனியன் காங்கிரசால் தீர்மானித்துள்ள மக்களுடைய முக்கிய பொது கோரிக்கைகள் கீழ்வருமாறு:—

## பொது கோறிக்கைகள்.

1. தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் கொடுமைப்படுத்தப் பட்ட வகுப்பார்களுக்கும் அவர்களுடைய வேலைமுறையை அடிப்படையாகக்கொண்ட ஓட்டுரிமை ஏற்படுத்தல்.
2. சகலருக்கும் பிரைமரி கட்டாயக் கல்வி இனமாக அளித்தல்.
3. அச்சு சுதந்திரம், பேச்சு சுதந்திரம், சட்டசுதந்திரம் பெறல்.
4. ஜாதிமத நிறமின்றி யாவருக்கும் சரிநிகர்சம சுதந்திர சந்தர்ப்பமளித்தல்.
5. வயது வந்தவர்களெல்லோருக்கும் எங்கும் கட்டாய ராணுவக் கல்வியளித்தல்.
6. அன்னிய சர்க்காரால் ஒப்பந்தப்படுத்தப்பட்ட அன்னிய கடன்களை தள்ளுபடிசெய்தல்.

## தொழிலாளர் கோரிக்கைகள்.

(1) எவ்வித சம்பளக்குறைப்புமின்றி வாரத்திற்கு 40 மணி நேர வேலை

(2) 30 ரூபாயுக்குக் குறையாத குறைந்த பக்ஷ வாழ்க்கைச் சம்பளத் திட்டமும்—குறைந்தது வருஷத்திற்கு 1 ரூபாய் அதிகரிப்பும்.

(3) வார சம்பளங்கள் எங்கெங்கு கோறப்படுகிறதோ அங்கு அளித்தல்.

(4) எவ்வித பேத-நிறவேற்றுமையின்றி சரிசமமான தொழிலுக்கு சரிநிகர் சமக்கூலி எல்லோருக்கும் வழங்குதல்.

(5) ஒரு வருஷத்திற்கு சம்பளத்தோடு ஒரு மாதம் முழு லீவ்.

(6) வேலையில்லாமை—வயோதிகம்—காயலா—தாய்மார் பராமரிப்பு இவைகளுக்கு வேலையிலுள்ளவர்கள் அரசாங்கம் ஆகியவற்றின் மீது இன்சூரன்ஸ் ஏற்படுத்துதல்.

(7) நல்ல வீட்டு வசதிகளும் வாழ்க்கை நிலைமைகளும் அமைத்து எல்லாத் தொழிலாளர்களும் இருக்க இடம் இனமாக அளித்தல்.

(8) சுரங்கங்களின் கீழ் பரப்புகளில் பெண்களும் குழந்தைகளும் வேலை செய்வதின்றும் தடுத்தல்.

(9) எவ்வித் பணச் செலவின்றி வைத்திய உதவி.

(10) அபராதங்களை ஒழித்தல்.

(11) வேலை நிறுத்தம் செய்வதற்கும்—வேலை நிறுத்த காலங்களில் மறியல் செய்வதற்கும் உரிமைகள்.

## விவசாயிகள் கோறிக்கைகள்.

(1) மனித சமூக புல்லுருவிகளான ஜமீன் (நிலம்) தாரத்துவத்தை அழித்தல்—கஷ்டப்பட்டு பாடுபடும் உழவர்களுடைய பொருளாதாரத் தன்மைக்கு ஏற்றார் போல் நிலங்களைப் பிரித்துக்கொடுத்தல்.

(2) நிலவரியை 100க்கு 30 வீதம் குறைவு படுத்தல்.

(3) விவசாயிகளின் மீது பிரபுக்களும் மிராசுதர்களும் வசூலிக்கும் சகல பாத்தியதைகளையும் அழித்தல்.

(4) நிலங்களின் விவசாயிகள் எவ்விதத்திலும் தள்ளுபடி செய்யப்பட முடியாதபடி உரிமைபெறல்.

(5) பொருளாதாரமற்ற வாழ்க்கையை நடத்தும் விவசாயிகள் சகலவித தீர்வைபந்தங்களினின்றும் பூர்ணமாக விடுபடுதல்.

(6) விவசாயிகளும்—தொழிலாளர்களும் கொடுக்கவேண்டியதைவருஷமொரு முறைக்கு ஏற்படுத்துதல்.

(7) வருஷத்திற்கு அரை வட்டிக்கு மேலாகாமல் உபயோகப்படுத்தும் சக்தி.

(8) சர்க்கார் சிலவில் பண்ணைத் தொழில் முறையில் விஞ்ஞான முறையைப் புகுத்துதல்.

(9) அவசியமான இடங்களில் பாய்ச்சல் கால்வாய்களையும்—காலத்திற்கேற்ற தண்ணீர் வசதி—போக்குவரத்து வசதிகளையும்அமைப்பது.

(10) பழைய வரி வஜாக்களைத் தள்ளுபடி செய்தல்.

(11) வாடகை பாக்கிகளை யெல்லாம் ஒழித்தல்.

(12) பலவந்தத் தொழில்-சட்ட நீதியற்ற தொந்திரவுகள் இரகசிய வரிகள் இவைகள் தண்டிக்கப்படுதல் ஆகியவைகளாகும்.

இந்திய தேசீய காங்கிரசிலுள்ள ஒரு சாரார் தொழிலாளர் இயக்கத்தைக் குறித்துப் பெரிதும் அனுதாபம் காட்டுகிறார்கள். வைதீக (காங்கிரஸ்) காரர்களிடையே பெரிதும் மாறுதல் வேண்டும். காங்கிரசில் உள்ள அமிதவாதிகள் தொழிலாளர் ஸ்தாபனத்தோடு ஒத்துழைப்பவர்களாக இருக்கிறார்கள். தோழர்களே! தொழிலாளர் இயக்கத்தின் வெற்றிக்கு ஆக்கம் அளிப்பது ஒவ்வொருவர்களுடையவும் நீங்காத முக்கியகடமையாகும்,

---

## மன்னர் வாழ்த்துக்கு ஆட்சேபனை.

பிரிடோரியா விலுள்ள டச்சு சீர்திருத்த மாதாகோவிலில் மன்னர் வாழ்த்துப்பாடியதனால் அந்தக் கோவிலைச்சேர்ந்த பக்தர்களிடையில் மனக்கசப்பேற்பட்டிருக்கிறதுஎன்று "பர்ஜெர்" என்ற பத்திரிகை சொல்லுகிறது. தென்னாப்பிரிக்கா யூனியனின் ஆக்டிங் கவர்னர் ஜனரலான தோழர் ஜஸ்டிஸ் கர்லூயிஸ் அந்த மாதாகோவிலுக்குள் வந்தபொழுது "காட்சேவ் திகிங்" என்ற பிரிட்டிஷ் ராஜ வாழ்த்து கீதம் பாடப்பட்டது. பிறகு நெதர் லண்டன் மந்திரியான டாக்டர் லாரோண்ட்ஜ் அந்தக் கோவிலுக்குள் நிழைந்த பொழுது டச்சு தேசீய கீதம் பாடப்பட்டதுஇப்பொழுதுபோயர்கள்சொல்லும் ஆட்சேபனை இது தான். ஆப்பிரிக்கர்களின்மாதாகோவிலில் தென்னாப்பிரிக்காவின் தேசீய கீதம் பாடப்படாதபொழுது இங்கிலீஷ் தேசீய கீதம் பாடப்படக் கூடாது. அந்தப் பத்திரிகைப் பிரதிநிதி யிடம் ஒரு பாதிரி சொன்னார். "எங்கள் மாதா கோவில் புனித ஸ்தலம். அங்கே இங்கிலீஷ் தேசீய கீதம் பாடி எங்கள் பக்த கோஷ்டிகளின் உணர்ச்சிகளைப் பாதிக்கப்படும்படி விடக்கூடாது. ஏற்கனவே இங்கிலீஷ் கீதம் சினிமாக்களிலும், அதுபோன்ற இதர ஸ்தலங்களிலும் அவர்கள் மீது திணிக்கப்படுகிறது" பிரிடோரியாவில் எழுந்த ஆக்ஷேபனையின் காரணமாக 'காட்சேவ் திகிங்' என்ற பாட்டை சினிமாக்களிலும் பாடாமலிருக்கச் செய்ய முயற்சிகள் நடந்தன. இந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. ஆனால் ஆப்பிரிக்கர்கள சினிமாக்களில் அந்த கீதம் பாடப்படும்பொழுது எழுந்து வெளியே போய் விடுகின்றர். (த. நா)

ரோஜா முத்தையா

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

என்ன? இவ்வளவு தொல்லையில்லையே!) மீண்டுமொன்று "முகம்மது நபி ஸ்தூல சரீரத்துடன் புராக் என்னும் பெண் குதிரையில் ஏறிக்கொண்டு விண்ணுலக யாத்திரை பண்ணினார்" என்றும் (புராக் என்பது ஆகாய விமானமா? அல்லது புகைக் கூண்டா?) மற்றொன்று "முஹம்மது நபி விண்ணுலகத்திற்கு சூட்சம யாத்திரை பண்ணினார்" என்றும், ("சூட்சமம்" என்பதென்ன? தற்கால விஞ்ஞானிகளுக்கோ டாக்டர்களுக்கோ, வானசாஸ்திரிகளுக்கோ, ரஸாயன நிபுணர்களுக்கோ, அல்லது பக்தகோடிகளாகிய தங்களுக்கோ அந்த "சூட்சமம்" என்பது தட்டுப்படவுமில்லை. பகுத்தறிவிற்கு ஏற்ற முறையில் நிரூபிக்கவும் முடியவில்லை)......இன்னும் அனேக இதைப்போன்ற—இல்லை—இதைவிட கேவலமான மனித சமூகத்திற்குக்கிஞ்சிற்றும் உபயோகமற்ற விஷயங்களுக்காக பக்தர்கள் சண்டை போடுவது எதற்கு?

நாம் இல்லாததைச் சொல்லுகிறோம் என்று பக்தகோடிகள் என்பேரில் சினங்கொள்ளாமல்; அமிர்தசரசில் நவம்பர் 26ம் தேதியும், இராமேஸ்வரத்தில் டிசம்பர் 3ம் தேதியும் நடந்த கலகத்தையும், சில மாதங்களுக்கு அல்லது ஒரு வருடத்திற்கு முன் சாத்தான்குளத்தில் கூடிய கூட்டத்தில் சுன்னத்வல் ஜமாதாருக்கும்—அஹ்மதியாக்களுக்குமிடையில் கலகம் ஏற்பட்டதையும் போலீசார் வந்து தலைகாட்டியதையும் எல்லோரும் அறிவார்கள். இதைப்போல் ஒரே இஸ்லாம் மதத்தின் பேரால் நடந்த பல விஷயங்களைப்பற்றி குறிப்பிட முடியும்.

உதாரணமாக 26-11-33ல் நடந்த ஒரு விஷயத்தை ஒரு தினசரியில் குறிப்பிட்டிருந்தபடி அப்படியே கீழே குறிப்பிடுகிறேன். அதாவது:

"நபிகள் நாயகத்தினக் கொண்டாட்டத்தில் குழப்பம்.

முஸ்லீம்கள் தாக்கினர்"

"நபிகள் நாயக தினக்கொண்டாட்டம் சம்பந்தமாக நடந்த அஹ்மதியா கூட்டத்தை சில முஸ்லீம்கள் தாக்கினர். அதனால் 16பேர் காயமடைந்தனர், அவர்களில் இருவருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதுவரையில் 15 பேரை போலீசார் கைது பண்ணி இருக்கின்றனர். மற்றவர்களைப் போலீசார்தேடிக்கொண்டிருக்கின்றனர்."

பக்தர்கள் கடவுளால் வெளியாக்கப்பட்ட ஒரே மதத்திற்கு பல பல அர்த்தங்களை யுண்டு பண்ணிக்கொண்டு இந்த அர்த்தவித்தியாசத்திற்காகவும், அபிப்பிராய பேதத்திற்காகவும் கலகம் செய்து சீரழிகிறார்கள் என்றால் கடவுளாவது (அல்லா(ஹ்)வாவது, நேரிலோ, அல்லது வஹிமூலமாகவோ, "இதுதான் உண்மையான மதம், இவர்தான் உண்மையான நபி இது தான் உண்மையான அர்த்தம் என்று சொல்லி பக்தர்களைச் சமாதானப்படுத்துகிறார் இல்லை. பக்தகோடிகள் அவருடைய மதத்திற்காகவும், அவரால் அனுப்பப்பட்ட நபிக்காகவும் கலகம் பண்ணிக்கொள்ளும்போது அதை சமாதானப்படுத்துவதை விட அவருக்கு (அல்லா(ஹ்)வுக்கு) வேறு என்ன வேலை?)

சரித்திர சம்பந்தமாய் பார்க்கப்போனாலும் முஸ்லீம் பக்தர்கள் மதவெறியால் அநேக பகுத்தறிவு வாதிகளைத் துன்பத்திற்காளாக்கி இருக்கிறார்கள். அதாவது கிறிஸ்துவ உலகில் ஹிப்பேஷியா என்னும் பெண்மணிக்கு நிகழ்ந்ததுபோல் முஸ்லீப் பகுத்தறிவு வாதிகளையும் அம்மணமாக இழுத் தேகப்படவில்லையானாலும், பகுத்தறிவு வாதத்தின் சார்பாக ஷெய்க்ஷஹாப்தீன் போன்றவர்கள் மதத்திற்காக பக்தர்களால் பலி கொடுக்கப்பட்டார்கள். இதைப்போன்ற சரித்திர சம்பந்தமான இஸ்லாம் மதத்தின் பேரால் நடந்த அநேக விஷயங்களைக்குறிப்பிட முடியும். அவைகளைப் பற்றி சமயம் வாய்த்தால் இன்னொரு சமயம் வரைவேன். (மதத்தின் பெயரால் அறிவாளிகளை மதவெறியர்கள் துன்புறுத்துவதை யெல்லாம் தடுக்காமல் நிம்மதியாக இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் கடவுளும் ஓர் கடவுளா? இத்தகைய ஈனம் இறக்க மற்றவனை "நிகரற்ற அருளாளன் அளவற்ற அன்புடையோன்" என்று புகழ்வதும், வணங்குவதும் நியாயமா?

ஆனால் ஹிந்து மதமோ! மற்றைய மதங்களைவிட மூடப்பழக்க வழக்கங்களினாலும், அநியாய அக்கிரமங்களினாலும், பெண்மணிகளைப் படுத்திய—படுத்தும் கொடுமையாலும் முதல் பரிசு பெறக்கூடியதாக இருப்பதை 9வருட காலமாக சுயமரியாதை இயக்கத்தோழர்களும், பகுத்தறிவுச் சமதர்ம பத்திரிகையாகிய "புரட்சி" யும் ("குடி அரசும்") உள்ளதை உள்ளவாறு தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டி இந்து மதம் என்னும் புராணப் பயங்கரப் படுகுழியிலிருந்து மக்களை மீட்பதற்காக வேண்டி அரும் பெரும் முயற்சி செய்திருக்கிறார்கள் செய்கிறார்கள். சுயமரியாதை இயக்கத் தோழர்கள் பகுத்தறிவென்னும் ஆயுதத்தைக் கொண்டு ஹிந்து மதத்தின் மேல் யுத்தம் தொடுத்திருக்கிறார்கள் இப்பொழுது இந்த யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. சுயமரியாதை இயக்கத் தோழர்களின் பகுத்தறிவு யுத்தத்தால் இப்போது ஹிந்து மதத்திற்கு சாவுமணியடித்தாகிவிட்டது.! எனவே ஹிந்துமதத்தின் ஊழல்களைப்பற்றியான் இக்கட்டுரையில் குறிப்பிடுவது வீண் கவலை யென்றே கருதுகிறேன்.

ஹிந்து மதம ஒருவிதத்திலும்மக்களுக்கு நன்மையளிக்காது என்பதை ஹிந்துமதத்தையே வடிகட்டி, வடிகட்டிஅலசி அலசிப்பார்த்த ஹிந்துக்களில் அனேகர் (தற்போது சுயமரியாதைத் தோழர்கள்) "அதை (ஹிந்துமதத்தை) அடியுடன்-இல்லை சர்வசமயங்களையும் ஒழித்துவிட வேண்டும்" என்று முயற்சித்துக்கொண்டிருக்கும்போது, காந்தியார்தனது உயிரை தியாகம் பண்ணியேனும் மரணத்தருவாயில் இருக்கும் ஹிந்து மதத்தை உயிர்ப்பித்து, இவ்வளவு காலம் மக்கள் ஹிந்து மதத்தால் சீரழிந்தது போதாமைக்கு இன்னும் மக்களைச் சீரழிக்க முயற்சிக்கிறார். ஹிந்து மதத்தின் யோக்கியதையை உலக மக்கள் உணரவில்லை யென்றா காந்தியார் நினைத்துக்கொண்டிருக்கின்றார்? காந்தியாரின்கொள்கையாகிய "தேசீயம், ராட்டினம், ஹரிஜன சேவை சத்தியாகிரகம், சாத்வீகம்" என்பவைகள் 1000 கணக்கான வருடங்களுக்கு முன் நமது மூதாதைகள் நாகரீகம், பகுத்தறிவு, விஞ்ஞானம், என்பவைகள் என்ன என்று கூட தெரியாமல் மூட பழக்க வழக்கங்களில் மூக்கி காட்டு மிராண்டிகளாய் இருந்தார்களே அந்தக் காலத்திற்குத்தான் ஏற்றதாயிருக்கின்றனவேயன்றி, பகுத்தறிவு பரவி, விஞ்ஞானம் ஓங்கி வளர்ந்து, நாகரீகம் பொங்கி வடிந்து, சமதர்மச் சூரியன் உதயமாகியிருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழும் மக்களுக்கு ஏற்றதல்ல வென்பதை பகுத்தறிவைக்கொண்டு காந்தியத்தை சோதினை போட்டால் உணர்ந்து கொள்ளலாம்.

மதப் பற்றால் பக்தகோடிகள் தேசங்கள் தோறும் கோடிக்கணக்கான ரூபாய்களைச் சிலவு செய்து கோவில்களையும், சர்ச்சுகளையும், மசூதிகளையும் கட்டி இன்னும் உற்சவங்கள் முதலியவைகளை...... உண்டுபண்ணி மக்களின் உழைப்பையும், பொருளையும்மக்களுக்கு உபயோகமற்ற வழியியில் வீண்விரையம் பண்ணுகிறார்கள். உலகத்தில் உண்ண உணவில்லாதவர்களும், உடுக்க உடையில்லாதவர்களும், வசிக்க வீடில்லாதவர்களும், பிழைக்க வழியில்லாதவர்களும், தொகை நாளுக்குநாள் அதிகரிக்கின்றனர். இத்தகைய வறுமைக்குள்ளான மக்கள் (ஏழைகளும், தொழிலாளிகளும்) சாவதா? பிழைப்பதா? என்று வாழ்க்கையில் நம்பிக்கை யற்று தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏழை மக்கள் இத்தகைய வருமையால் தத்தளித்துத்தடுமாறிக்கொண்டிருக்கும்போது இதைச் சிறிதும் கவனியாமல் பக்தர்கள் பக்தியை முன்னிட்டு எண்ணற்ற பொருளை வீண் விரையம் பண்ணுகிறார்கள்! பக்தியை முன்னிட்டு கட்டும் கோவில்களையும், சர்ச்சுகளையும், மசூதிகளையும் நிறுத்திவிட்டு அதற்கு சிலவிடும் பணத்தையும், பொருளையும் கொண்டு வீடில்லாமல் சாக்கடையோரங்களில் ஒண்டிக்கொண்டிருக்கும் ஏழைகளுக்கு வீடுகட்டிக்கொடுத்தால் என்ன? இப்போதிருக்கும் கடவுள் வணக்கஸ்தலங்களை எல்லாம் கலாசாலையாகவும், தொழிற்சாலையாகவும், ஆஸ்பத்திரிகளாகவும் மாற்றி மக்களை உய்வித்தால் என்ன? இப்படிச் செய்துவிட்டால் உங்களுடைய கடவுள்கள் கோபித்துக்கொள்வார்களா?

இனிமேல் கோவில், சர்ச், மசூதி, உற்சவம் முதலியவைகளுக்குப் பொருளை வீண் விரயம் பண்ணாமல் அதற்கு சிலவிடும் பொருளைக்கொண்டு வீடில்லாதவர்களுக்கு வீடுகட்டிக்கொடுப்பதையும், இப்போதிருக்கும் கோவில், சர்ச், மசூதி முதலிய கட்டிடங்களைக் கலாசாலையாகவும், தொழிற்சாலையாகவும், ஆஸ்பத்திரிகளாகவும் மாற்றி கல்வியில்லாதவர்களுக்குக் கல்வியும், வேலையில்லாதவர்களுக்கு வேலையும்; நோயாளிகளுக்கு சிகிச்சையும் அளித்து உதவ நாம் போராடவேண்டும்.

இயற்கைக்கு மதங்களின் பேரால் நடைபெறும் தருமம் எப்படி யென்றால்:— "ஐயா! சாமி" மகாராஜா!!! எஜமான்!" இல்லாதவன் (ஏழைகளும், தொழிலாளிகளும்) உள்ளவன் (முதலாளிகள்) காலில் விழுந்து கும்பிட்டுக்கேட்டால் ஏதோ ஒருவன் இரண்டுபேர் அரைக்காசு, ஒருகாசு கொடுப்பார்கள்! மற்றவர்கள் துரத்தி விடுவார்கள்!! இந்த முறையில்தான் இல்லாதவன் (ஏழைகள்) உள்ளவனுக்கு (முதலாளிகளுக்கு) அடிமைப்பட்டு சுயமரியாதையை இழந்து ஏதாவது வாங்கி வயிறு வளர்க்கவேண்டுமேயன்றி கௌரவமான முறையில் (பொதுவுடமையாக) அனுபவிப்பதற்காக வேண்டி இல்லாதவர்கள் (ஏழைகளும், தொழிலாளிகளும்) கிளர்ச்சிபண்ணி உள்ளவர்களிடமிருந்து, (முதலாளிகளிடமிருந்து) சாத்வீகமான முறையில் இதுவரைக்கும் நடவாததினால் உரிமைப்பெறுவதில் (இழந்ததை மீட்பது) மதத்திற்கு விரோதமாம். எனவே "உள்ளதைக்கொண்டு சமாளித்துக்கொள், மறு உலகில் எல்லாவற்றையும் சேர்த்து அனுபவிக்கலாம். இல்லாவிட்டால் முதலாளி இடம் போய் முதலாளிக்கு வணங்கி சாஷ்டாங்கம் பண்ணிஉனது சுயமரியாதையை இழந்து கேவலப்பட்டு ஏதாவது முதலாளியிடம் கேட்டுக்கொள்" என்னும் தத்துவத்தை வெளிக்காட்டக்கூடிய முறையிலேயே சர்வ மதங்களும் ஏழைகளுக்கு பிச்சையெடுக்கும் படி போதிக்கின்றனர். முதலாளிகளுக்கும் ஏழைகளை அடிமைப் படுத்திய பிச்சை கொடுக்கும் படித்தான் மதங்கள் போதிக்கின்றன.

பக்தர்களே! உங்களுடைய வணக்கமோ, பக்தியோ ஒரு அணுவளவாவது மக்களுக்கு நன்மை செய்திருக்கிறது என்று உங்களால் நிரூபிக்க முடியுமா? அல்லது மக்களின் வறுமையோ, அல்லது கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலியவைகளையோ, 1000கணக்கான வருட

ங்களுக்கு முன் தோன்றிய உங்களுடைய மதச் சட்டத்தினுலும், உங்களுடைய "பரிசுத்த நிகரற்ற அருளாளன் அளவற்ற அன்புடையோன் என்பவனுலும்" உங்களுடைய கற்களையும் கரைக்கக்கூடிய அத்தனை பரிதாபமான வேண்டுகோள்களாலும், உங்களுடைய உருப்புக்களை யெல்லாம் ஆட்டி அசைத்துச்செய்யும் பக்தி ததும்பிய இடைவிடா வணக்கத்தாலும் முடிந்ததா? 1000கணக்கான வருடங்களாக உங்களாலும், உங்களுடைய மதங்களாலும், உங்களுடைய கடவுளாலும் சாதிக்க முடியாத அத்தனையையும் நேற்றைய தினம் (17வருஷங்களுக்கு முன்) தோன்றி மறைந்த தோழர் லெனினும், அவருடைய ஜீவநாடியாகிய சமதர்மிகளும் ஓரளவு சாதித்துவிட்டார்களல்லவா? இவை இத்தனைக்கும் கர்த்தாவாயிருந்த தோழர் லெனினும், 5000000-ஐம்பது லட்சம் நாஸ்திகர்களைக் கொண்ட "நாஸ்திகர் ஐக்கியசங்கமும், இச்சங்கத்தின் தலைவர் தோழர் புரொபஸர் ஹூக்காஸெப்ஸ்க்கீயும் உங்களுடை கடவுள் என்னும், சொல்லைபேசவிடாமலும், மான்புமிக்க கடவுளை வணங்கும் வணக்க ஸ்தலங்களை தொழிற்சாலை, கலாசாலை, ஆஸ்பத்திரி, தொழிலாளர் சங்கமாகவு மாற்றி உபயோகிக்க முடியாததை தரைமட்டமாகவும் செய்துவிட்டார்கள் அல்லவா? முல்லாக்களும், பக்தர்களும், புரோகிதர்களும் மதத்தின் பேரால் பெண்களை வெளி உலகத்தை பார்க்க விடாமலும் வெளிக்காற்றை சுவாசிக்க விடாமலும் "பர்தா" என்னும் அடிமைச் சங்கலியால் பிணைத்து கைதிகளைப்போன்று கற்கோட்டையில் போட்டு சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

மத பக்தியால் விளையும்அத்தனை கொடுமைகளையும் விளக்கியிருக்கும் பக்தர்கள் ,மாணவர்களையும், மாணவிகளையும் மெஞ்ஞானமாம் விஞ்ஞானக்கல்வியைய் கொள்ளவும் பொருளாதாரத்துவத்தை படிந்து பொருளாதாரத்தை விருத்தி பண்ணி அதையெல்லா மக்களும் சமமாக அனுபவிக்கவும் விடாமல் மதக் கல்வியைத்தான் படிக்க வேண்டும். மதத்தில் எல்லாக்காலத்திற்கும் தேவையான எல்லா ஞானமும் நிறைந்து கிடக்கின்றன என்று அறியாமையினுல் மாணவர்களையும், மாணவிகளையும் மதக் கல்வி என்னும் புராண படுகுழியில் அமிழ்த்தி வைத்திருக்கிறார்கள்! ஏன் தற்போது கூட இந்தியாவில் அரசாங்கப் பள்ளிக் கூடங்களில் முஸ்லீம் மாணுக்கர்களுக்கு மதக்கல்வியை தான் கற்றுக்கொடுக்க வேணும் என்று அரசாங்கம் வெளியிட்டிருந்தார்கள். இதைக் கண்டவுடன் முஸ்லீம் பக்தர்கள் துள்ளி நடனமாட அரம்பித்து விட்டார்கள் இதை (மதக் கல்வியை) எல்லா முஸ்லீம் பத்திரிகைகளும் ஆசிரியர் குறிப்புக்களிலும் மற்றைய பக்கங்களிலும் கொட்டையெழுத்தில் "மார்க்கக்கல்வியின் அவசியம்" என்று எழுத ஆரம்பித்து விட்டன. பிரிட்டிஷ் ஆட்சி எதற்காக மதக்கல்வியை (மத கிறுக்கை) இந்த சமயத்தியில் எடுத்துக் கொண்டார்கள் என்பதை முஸ்லீம்கள் உணராதது வருந்தத்தக்கதே! பிரிட்டிஷ் முதலாளிகள் எங்கெலாம் செல்வாக்குடன் அட்சி செலுத்துகிறார்களோ Divi deof Rali Poeicy அங்கெல்லாம் அவர்களுக்கு (பிரிட்டிஷ் முதலாளி ஆட்சிக்கு) பேருதவியாய் இருப்பதும் மதமே! மதந் தானே உலக மக்களை பல பிரிவுகளாகப் பிரித்து ஒற்றுமைப் படவிடாமல் முட்டுக்கட்டை போட்டிருக்கிறது! மதந் தானே இந்தியாவில் ஹிந்துக்களையும், முஸலீம்களையும் பிரித்து வைத்திருப்பது! மதந்தானே இலங்கையில் பௌத்தர்களையும், முலீம்களையும் பிரித்து வைத்திருப்பது மதந்தானே ஜர்மனியில் யூதர்களையும், ஜர்மனியர்களையும் பிரித்தது.

இவ்வுலகெங்கும் மத பைத்தியம் மக்களை நாசமாக்குவதை உள்ளங்கை நல்லிக்கனி போல் விளக்கியும், இப்பொழுது மக்களிடம் குடிகொண்டிருக்கும் மதப் பைத்தியம் போதாமைக்காக சிகாகோவில் "அகில உலக சர்வ மத (சர்வமூட நம்பிக்கை) மகாநாட்டையும் கூட்டிவிட்டார்கள். அதில் இந்தியாவிலுள்ள ஓர் முதலாளியும் தலைமை வகித்தார். மகாநாட்டில் எல்லா மத பக்தர்களும் ஒன்றாய் சேர்ந்து மக்கள் மதத்தை தழுவி இருப்பது (மதுவை அருந்தியிருப்பது] போதாமைக்காக இன்னும் மதவெறியை விரும்பாதவர்களுக்கும் "இன்ஜக்ஸன்" மூலமாகவாவது திணித்துவிட வேண்டுமென்று கதறி விட்டார்கள். மதவாதிகளே! கடவுள் பக்தர்களே!! 'மத வெறியால் மக்கள் பட்டதெல்லாம் போதும் போதும் இனிப் பட முடியாது இத் துயரம்" என்னும் பரிதாபமான வேண்டுதலைக் கேட்டேனும் மக்களின் நன்மையையும் முன்னேற்றத்தையும் உத்தேசித்து அகில உலக சர்வ மத ஒழிப்பு மகாநாட்டைக்கூட்டி அகில உலக சர்வ மதங்களையும் ஒழித்துவிட்டு அகில உலக பகுத்தறிவுச் சமதர்ம திட்டங்களை யேற்படுத்தி உலக மக்களை முன்னேற்றுவீர்களாக.

---

## சர். உஸ்மான் சென்னை ஆக்டிங் கவர்னர்

### சர்க்கார் அறிக்கை.

இந்தியா சர்க்கார் கீழ்க்கண்டஅறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

சர். ஜார்ஜ் ஸ்டான்லி (பி. ஸி. ஜி. ஸி. ஐ. ஈ. ஸி. எம். ஜி.) வைசிராயாகவும், கவர்னர் ஜெனரலாகவும் தற்காலிகமாகவேலை பாக்கும் காலத்தில் கான் பகதூர் சர். முகமது உஸ்மான் சாகிப் பகதூர் (கே. ஸ். ஐ. ஈ.) சென்னைமாகாண ஆக்டிங் கவர்னராக நியமிக்கப்பெற்றுள்ளதை சக்கிரவர்த்தி சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டுள்ளார்.

(சர். முகமது உஸ்மான் 1884ஞு பிறந்தவர். சென்னை கிறிஸ்டியன் கல்லூரியில் கல்வி பயின்று பி. ஏ. பட்டம் பெற்றுர். 1913ம் வருஷம் முதல் 25 வருஷஞுவரை சென்னை கார்ப்பொரேஷன் அங்கத்தினராக இருந்தார். 1916-20 வரை மாகாண கௌரவ மாஜிஸ்டிரேட்டாக இருந்திருக்கிறுர். 1921-25ஞு சென்னை நகர நிர்மாணடிரஸ்ட். மெம்பர், 1921-23 இந்திய வைத்திய முறைகள் கமிட்டி சேர்மன்; முத்தியாலுபேட்டை முஸ்லீம் அஞ்சுமன் தலைவர் 1922-25 சென்னை கலால் லைசென்ஸ் போர்டு மெம்பர் அரசியல் சீர்திருத்த கமிட்டியிலும், ஜெயில் கமிட்டி முன்பாகவும் சாட்சியம் கொடுத்தார். 1921 சென்னை சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப் பெற்றுர். 1924ஞு சென்னை கார்ப்பொரேஷன் தலைவர்; 1926-28 சென்னை சிசு சம்ரக்ஷண சங்க தலைவர்; 1925 28ஞு விடுதலைபெற்ற கைதிகள் உதவி சங்கத்தலைவர் 1925ஞு சென்னை பிரிட்டிஷ் சாம்ராஜ்ய குஷ்டரோகிதள் கஷ்ட நிவாரண சங்க தலைவர் தென்னிந்திய முஸ்லீம் கல்வி சங்க தலைவர்; 1920ஞு கான் சாகிப்; 1921ஞு கான் பகதூர்; 1923ஞு கெய்ஸரி ஹன்ட் பித்கம் 1923ஞு சர். பட்டம். 1926ஞு முதல் சென்னை சர்க்கார் நிர்வாக சபை மெம்பர்.)

---

## ஆலக்கிராமத்தில் சுயமரியாதைப் பிரசாரம்.

### புதுவை தோழர் நம்பிக்கைமரி அம்மாள் அவர்கள் தலைமைவகித்தார்.

புதுவையிலிருந்து 7-1-34 ஞாயிற்றுக்கிழமை பகல் 2-30 மணிக்கு திண்டிவனம் தாலூக்கா ஆலக்கிராமத்திற்கு தோழர்கள் ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், ராமசுப்பிரமணியம்- எஸ். நீலாவதி, மணிகுமாரி, அல்போன்ஷ்லகாஷ், நம்பிக்கைமரி அம்மாள், அம்சவேணி, அமிர்தவாசகம் சிவப்பிரகாசம், ச. ம சி. பரமசிவம், சணமுகசுந்தர அம்மாள் ஆகியவர்கள் வந்துசேர்ந்தார்கள். தோழர்கள் யாவரையும் ஆலக்கிராமம் சுயமரியாதைச் சங்கத்தார் நன்கு வரவேற்று சிற்றுண்டி வழங்கினுர்கள்.

தோழர் ஏ. வி. தாதாசாமி அவர்கள் பங்களாவில் அமைக்கப்பட்டு நீதிவாக்கியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த கொட்டகையில் மாலை 3-45 மணிக்கு புதுவை தோழர் அல்போன்லகாஷ் நம்பிக்கைமரி அம்மாள் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு திண்டிவனம் மைலம், பரண்டிச்சேரி, விழுப்புரம், முதலிய வெளியூர்களிலிருந்தும் உள்ளூர்வாசிகளுமாகிய பேருந்திரளான தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள். பல சமயவாதிகளும் வைதீகர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

இப் பொதுக் கூட்டத்திற்குப் புதுவைத் தோழர் நம்பிக்கைமரி அம்மாள் அவர்களை தலைமைவகிக்குமாறு தோழர் ஏ. வி. தாதாசாமி அவர்கள் பிரேரேபிக்க தோழர் ஏ. வி. தேசிகம் அவர்கள் ஆமோதித்தார்.

தோழர்கள் ப. ஜீவானந்தன் அவர்கள், ஏ. வி. தேசிகம் அவர்கள் ஆகியவர்கள் சமதர்மக் கீதங்கள் பாடினுர்கள். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலனுர் அவர்கள் "சுயமரியாதை இயக்கம்" என்பதுபற்றியும், ராமசுப்பிரமணியம் அவர்கள் "சடங்குகள்" என்பதுபற்றியும் எஸ். நீலாவதி அவர்கள் "பெண்கள் நிலை" என்பது பற்றியும் ப. ஜீவானந்தம் அவர்கள் "மதக் கொடுமை" என்பதுபற்றியும் விரிவுரை நிகழ்த்தினுர்கள். மற்றும் இரண்டு தோழர்கள் பார்ப்பனப் புரட்சியைப்பற்றி தங்கள்அபிப்பிராயத்தைத் தெரிவித்து தாங்கள்இதுவரை நடைபெற்ற பிரசங்கங்களை முழுமனதுடன் ஆதரிப்பதாகச் சொல்லிக் இக் கொள்கை நாடு முழுதும் பரவ வேண்டுமென்று சொல்லி முடித்தார்கள்.

பின்னர் தலைவர் அவர்கள் முடிவுவுரைகூற நன்றிகூறலும் பின் கூட்டம் இரவு 6-30 மணிக்கு இனிது முடிவடைந்தது. இரவு சாப்பாட்டிற்குப் பிறகு தோழர்கள் திருச்சிக்கும், புதுச்சேரிக்கும் புறப்பட்டார்கள்.

---

## சுயமரியாதைச்சங்கம் பொன்மலை.

10-1.34காலை 8மணிக்கு சங்ககட்டிடத்தில் தோழர் பொன்னுச்சாமி அவர்களால் நமது சங்கச்சார்பில் ஓர் ஆரம்ப பாடசாலை (அதாவது முதலாவது வகுப்பு முதல் நான்காவது வரையிலும்) ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அதுசமயம் தோழர்கள் டி. கன்னேஜி எம். ஓ. காத்தான் ஷணமுகம் ஆர். நடராஜன் கே. ஏ. விக்டோபா முதலியவர்கள கல்வியின் அவசியம் தற்கால போதனுமுறையே நீண்டதோர் சொற்பொழிவு ஆற்றியபின் தோழர் எஸ். ஜெயமும் அவர்களால் சமதர்மக்கீதங்கள் பாடி குழந்தைகளுக்கு பென்சல் மிட்டாய் முதலியன பரிசளிக்கப்பட்டன.

---

(4-பக்கத் தொடர்ச்சி)

போதாமையாலல்ல. கற்றறிந்தோர் வெறுஞ்சொற்களின் கோர்வை மீது, தங்கள் புத்தியையும், அறிவையும் செலுத்தியதுதான் வருந்தத்தக்கது. "சத்தமும், சோதிடமும் என்றுங்கி வை பிதற்றும் பித்தரில் பேதையாரில்" என்ற சான்றோர் வாக்கையும் மறந்தனரா?

உலகம் படும் துக்கமென்ன? நமது நாட்டில் கோடானு கோடி மக்கள் உணவின்றி, வீடின்றி, சுகாதாரமின்றி, சுதந்திரமின்றி, வாடி வதங்கிக் கிடப்பதென்ன? அகால நோய்களால் மடிகின்ற நமது தேசத் தொழிலாளர் எத்தனை? வேலை இல்லாத கொடுமையால், வதையும் மாந்தர் எத்தனை? இவைகளைக் குறித்துக் கவனியாது, "அ"கரத்திற்கு எத்தனை மாத்திரை "உ" கரத்திற்கு எத்தனைமாத்திரை என்று வாதமிடும் அறிஞரின் விவேகத்தை என்னென்ற மதிப்பது?

மாபெரும் ஆங்கில தத்துவ ஞானியாகிய எர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) 50 வருஷங்களுக்கு முந்தி மக்களுக்கு வேண்டியது விஷயஞானமே ஒழிய (Knowledge of things) சொல்ஞானம் (Knowledge of words) அல்ல எனறார். இந்த முதுமொழியால் உலக விவேகிகள் மெய்ஞ்ஞானத்தையே விசேஷமாகக் கொண்டுள்ளார். ஆனால் நமது நாட்டு விவேகிகளோ அற்ப சொற்ப விஷயங்களில் தங்கள் ஆற்றலை செலுத்துகின்றார்கள். நமது நாட்டு பெரும்பான்மை மக்களுக்கு Mental Inertia, மந்த புத்தி என்பார் சில மேல்நாட்டு அபிப்பிராயத்தைத் தடுத்துப் பேச நமது தமிழன்பர் மகாநாடு இடங்கொடுக்கவில்லை. இந்த நிலைமைக்கு நமது தமிழ் நாட்டு அறிஞரும், பண்டிதரும் கற்றோரும் வந்ததைக் குறித்து வருந்துகின்றோம்.

---

(4-ம் பக்கத்தொடர்ச்சி.)

அன்பு இல்லையென்று சொல்ல முடியுமா?

கே. எம். பாலன்:- அத்தகைய கணவர்கள் [கூட்டம்] எமக்குத் தேவையில்லை.

கா:- அப்படிச் சொல்லமுடியாது- அறிவுள்ளவர்கள் ஆதிக்கம் செலுத்துவதென்பது மனித இயற்கை.

குருசாமி:-இல்லை. அது மனித இயற்கை அல்ல. பிராமணர்கள்நல்லவர்கள்தான். ஆனால் அவர்களுடைய மதமானது (ஹிந்துமதம் அவர்களை அயோக்கியர்களாக ஆக்குகிறது.

கா:- ஆஷாடபூதித்தனமும், அயோக்கியத்தனமும் எங்கும் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் பிராமணர்களிலும் யோக்கியர்கள் இருக்கிறார்கள்.

கு:- ஹிந்துமதமானது பார்ப்பனர்களைத் தவிர வேறு யாருக்காவது எந்தவிதத்திலாவது எவ்விதப் பலனையாவது அளித்திருக்கிறதா?

கா:- இல்லை, அப்படிச் சொல்லிவிட முடியாது.

கா:- மதமில்லாமல் எந்த தேசமும் இருக்கமுடியாது.

கே. எம். பாலன்:- இல்லை. ஒரு தேசமிருக்கிறது, அதுதான் ரஷியா.

கா:- இல்லை ரஷ்யாவிலும் மதம் இருக்கிறது. நான் ரஷியா சம்மந்தமான புஸ்தகங்களைப் படிப்பதில்லையென்றாலும் சமீபத்தில் பண்டிட் ஜவர்லால் அவர்களால் கொடுக்கப்பட்ட ஒரு புத்தகத்தைப் படித்தேன். ரஷியாவிற்கு நேரில் சென்று வந்தவர்களையும் கேட்டேன். அங்கும் மதம் இருக்கிறது என்பது தெரிகிறது. பண்டிட் ஜவர்லால் மதங்களையெல்லாம் வெறுத்தாலும் அவரும் ஒருவிதத்தில் மத நம்பிக்கைக்காரர்தான் என்பது எனக்குத் தெரியும்.

குருசாமி:- தாங்கள் தான் கோவில்களை 'விபசார விடுதிகள்' என்று கூறியிருக்கிறீர்களே! அப்புறம் ஏன் ஒடுக்கப்பட்டவர்களையும், அந்த விபசார விடுதிகளுக்குள் அழைத்துச் சென்று விபசாரிகள் ஆக்க முயலுகிறீர்கள்?

கா:- விபசார விடுதிகளாயிருக்கும் கோவில்களைப் பரிசுத்தப்படுத்தும்பொருட்டே அவர்களை உள்ளே அழைத்துச் செல்ல விரும்புகிறேன்.

கு:- அதெப்படி பரிசுத்தப்படுத்த முடியும்?

கா,- (பதில் இல்லை)

குஞ்சிதம்:- ஜாதியை ஒழிக்காமல் தாங்கள் தீண்டாமையை எப்படி ஒழிக்கமுடியும்?

கா-, [சிரித்துக்கொண்டே] என்னோடு கூடவாருங்கள் காண்பிக்கிறேன்.

தீண்டாமையை ஒழிப்பது என்பதிலேயே ஜாதியை ஒழிப்பது என்பதும் அடங்கியிருக்கிறது. உதாரணமாக [Newton's Law of Gravitations] நியூட்டனினுடைய ஆகர்ஷண சக்தியின் விதியை [Einstein's Law of Relativity ]ஐன்ஸ்டீனுடைய 'ரிலேட்டிவிட்டி' விதியானது நேரிடையாகக் குறிக்கவில்லையானாலும் அதை ஒத்துக்கொண்டு அதைவிடப் பெரிய தோர் விதியையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. அதைப் போலவே தீண்டாமை ஒழிப்பு என்பது ஜாதியை நேரிடையாகத் தாக்கவில்லையென்றாலும், அது உண்மையிலேயே ஜாதியையும் ஒழித்து அதைவிட பெரிய தீண்டாமையையும் ஒழித்துவிடுகிறது.

ராமனுதன்:- நீங்கள் சொல்லும் உதாரணம் அவ்வளவு பொருத்தமாயில்லை.

இச் சமயம் அதிகக் காலதாமதம் ஆகிவிட்டபடியாலும், காந்தியாரை காண மற்றும் அனேகர் காத்துக்கொண்டிருந்தபடியாலும் சம்பாஷனை முடிவுற்றது.

முடிவில் எல்லோரும் எழுந்து விடை பெற்றுக்கொண்ட பின் தோழர் காந்தியார் அவர்கள் தோழர் ராமனுதன் அவர்களைத் தனியே அழைத்து தனிப்பட்ட முறையில் இரண்டொரு வார்த்தைகள் பேசினார்- கடைசியாக தோழர் எஸ். ராமனுதன் அவர்கள் அணிந்திருந்த [Twil] ட்வில் பைஜாமாவை உற்று நோக்கிவிட்டு "தாங்கள் ஐரோப்பாசென்றுவந்தவர் என்பதைத் தங்கள் உடைகுறிக்கிறது,' என்று சிரித்துக்கொண்டே கூறினர்.

[நமது நிருபர்]

---

## சென்னை சுயமரியாதைச் சங்கக் கிளச்சபை.

## தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள் வாசகசாலை திறப்புவிழா.

## தொழிலாளரின் திரளான கூட்டம்.

சென்னை பெரம்பூர் பாரக்ஸ் ரோட்கலியாண மேஸ்திரி தோட்டம் குருசடி பேட்டை எதிர் மைதானத்தில் 2-1-34 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிக்கு தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் நடைபெற்றன. அதுசமயம் தோழர் எஸ். நீலாவதி அம்மாள் தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள் வாசகசாலையின் அவசியத்தையும், ஷை அம்மையார் பெண் மக்களுக்குச் செய்து வந்த தொண்டையும், தொழிலாள மக்களுக்கு விளக்கமாக எடுத்துக் காட்டி தோழர் ஈ- வெ.ரா.நாகம்மாள் வாசகசாலையைத் திறந்துவைத்தார். தோழர் கே.எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் தொழிலாளமக்களுக்கு அவசியமான விஷயங்களை செவ்வனே எடுத்துக்காட்டி பொது மக்களுக்கும், அனேகமாக ஏழை உழைப்பாளியாகிய தொழிலாள மக்களுக்கு சுயமரியாதையே சுக வாழ்வென்றும், தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள் வாசகசாலையை பிற்போக்கில் விடாது முற்போக்கில் கொண்டு செல்ல வேண்டுமென அருமையாக சொற்பொழிவாற்றி அமர்ந்தார். தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் தொழிலாளர் மத்தியில் வீரகர்ஜனை செய்து ஒவ்வொருவருடைய உள்ளமும் கலங்கி கண்ணீர் வடியும்படியாகவும், அனேக மேற்கோள்களை காட்டி தொழிலாளரினிடையே நிமிரபரப்பை உண்டாக்கி விட்டார். தோழர் ப. ஜீவானந்தம் அவர்களை அடிக்கடி தொழிலாளர் பேட்டைகளுக்கு விஜயமாகும் படிக்கும், மீண்டு மோர்முறை தோழரின் சொற்பொழிவை கேட்டு சுயமரியாதையுடன் சுதந்திர உணர்ச்சியிலீடுபட செய்யுமாரு விரும்பினர். தோழர் நாராயணியம்மாள் பெண் சமூகத்தின் அடிமைத்தனத்தை விளக்கமாகப்பேசி இக் கூட்டத்தில் பெண் மக்கள் வராமையால் வருந்துவதாகத் தெருவித்துக் கொண்டு இனிமேல் நடக்கும் கூட்டங்களில் பெண்களை அதிகமாக அழைத்து வரும்படியாகப் பேசிமுடித்தார்.

தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர்கள் முடிவுரையில் சகலருடைய கருத்துக்களையும் சுருக்கமாக விளக்கி தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள் வாசகசாலையை தளரவிடாமல் அடுத்த வருடத்திற்குள் கூடுமான அளவாகிலும் கல்வி பயன்று எங்களுக்கு சந்தோஷத்தை தரவேண்டுமாய் கேட்டுக்கொண்டும் பொது மக்கள் ஷை வாசகசாலைக்குத் தங்களின் சிறு உதவிகளை தந்து சிறப்பிக்கவேண்டுமெனவும், இது காரும் சிறமத்துடன் இருந்த உங்களுக்கு எனது அன்பு உரித்தாகுக என்றும் முடித்தார். கடைசியாக வந்தன உபசார முறையில் தோழர் எஸ். குருசாமி அவர்கள் விஜயமான அனைவருக்கும் இக்கிளைச்சபை சார்பாகவும், வாசகசாலை சார்பாகவும் வணக்கம் கூறினர் கூட்டம் இரவு 9மணிக்கு முடிவடைந்தது.

---

## தூத்துக்குடி சுயமரியாதை பிரசாரம்.

## தோழர் மணிமாறன் பேச்சு.

தூத்துக்குடி சுயமரியாதை சங்கத்தின் ஆதரவில் 6-1-34-ம் தேதி மாலை 7 மணிக்கு இவ்வூர் "ஈ. வெ. ரா. நாகம்மாள் ஞாபகார்த்த வாசகசாலை" கட்டிடத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. கூட்டத்திற்கு தோழர் மிராண்டா அவர்கள் தலைமை வகித்தார். தோழர் திருமங்கலம் மணிமாறன் அவர்கள் "காந்தியார் வருகையும், நமது கடமையும்" என்னும் விஷயமாகவும், சமதர்ம லட்சியங்களைப் பற்றியும் சுமார் 1-30 மணி நேரம் பேசினார். அதை ஆதரித்து தோழர் வைகுண்டம் அவர்களும் பேசிய பின் இரவு 9மணிக்குக் கூட்டம் முடிந்தது.

ரோஜா முத்தையா

## தென் இந்திய மருத்துவர் சங்கம் பொதுக் கூட்டம்.

இச் சங்கத்தின் ஆதரவில் 30-12-33 சனிக்கிழமை காலை 8 மணிக்கு சங்க நிலயத்தில் தென்னிந்திய மருத்துவர் சங்க ஸ்தாபகரும், தலைவரும், முனிசிபல் எக்ஸ் கவுன்சிலருமாகிய பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச் சமயம் நிறைவேறிய முக்கிய தீர்மானங்கள்:—

1. சித்த வைத்தியர்கள் நோய்களுக்கு மருந்துசெய்வதிலும், நோயை தீர்ப்பதிலும் தங்கள் கவனத்தையும், காலத்தையும், செலவு செய்வதுடன் தற்கால சுகாதாரம் உடற்கூறு உடற்றொழில் தெரியாதெனக் கூறும் குற்றத்திற்கு அளாகாது அவைகளையும் கவனிக்க வேண்டுமென இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

2. சித்தவைத்திய மாணவர்கட்கும், வைத்தியர்கட்கும், தற்காலம் வேண்டிய சுகாதார தேக தத்துவ நூற்களை ஆங்கிலந் தமிழ் இரு மொழிகளிலும் புலமை வாய்ந்தவர்களால் விரைவில் உரை நடையில் எழுதப் பட வேண்டும்.

3. பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்கட்குச் சுகாதாரப் பாடப் புத்தகங்களில் சாருய வகைகளிலும், பீடி சிகரெட் முதலிய புகைக்குடி, புகையிலைப் பொடி வெற்றிலைப்பாக்கு முதலியவைகளிலும் உள்ள கெடுதிகளைப் பற்றி எழுதப் பட வேண்டும்.

4. அரசாங்க இந்திய வைத்திய பாடசாலையில் உடற்கூறு, உடற்றொழில், சுகாதாரம், நோய் விவரம், அறுவை முதலிய போதனைகளெல்லாம் தமிழிலேயே போதித்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது.

5. அரசாங்க இந்திய வைத்திய பாடசாலையில் சித்த வகுப்பில் படிக்கும் பரம்பரை மருத்துவ மாணவர்களுக்கும், திருவையாறு தமிழ்க் கல்லூரியிலும், சிதம்பரம் அண்ணாமலை தமிழ்க் கல்லூரியிலும் படிக்கும் மருத்துவகுல மாணவர்கட்கு உபகாரச் சம்பளம் (ஸ்டைபண்டர்) கொடுக்கும்படியாக அக் கலாசாலைத் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

6. அரிசியைத் தவிடுபோக நன்றாகக் குற்றித் தீட்டுவதனால் அதிலுள்ள ஜீவ சத்துப் பொருள் நீங்கி விடுகிறது. அதை உண்பவர்களுக்குப் பலவீனமும், பெரி பெரி என்கிற ஓர்வகை நோயும் உண்டாகிறது. ஆதலால் நெல் மிஷன்காரர்களுக்கும், அரிசி விற்பவர்களுக்கும் அரிசியைத் தவிடுபோகத் தீட்டக்கூடாதெனவும், தீட்டின அரிசியை விற்கக்கூடாதெனவும் கட்டளை பிறபிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. நம் தமிழ் நாட்டு சித்த மருத்துவத்தை வளர்க்க வேண்டி 1915ல் தென் இந்திய ஆயுர் வேத வைத்திய சங்கத்தை ஸ்தாபித்து அதற்கு அமைச்சராக இருந்து மிகத் தீவிரமாக வேலை செய்தும், தென் இநதிய மருத்துவர் சங்கத்தின் மூலமாகவும் வேலை செய்துவரும் தென் இந்திய மருத்துவர் சங்க ஸ்தாபகரும், சென்னைக் கார்ப்ரேஷன் எக்ஸ்கவுன்சிலரும், மருத்துவன் ஜீபத்திராதிபதிருமாகிய பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களுக்கு வைத்திய இரத்தினம் என்னும் பட்டத்தை யளிக்குமாறு அரசாங்கத்தாரை இச் சங்கம் பெரிதும் கேட்டுக் கொள்கிறது,

8. அரசாங்க இந்திய வைத்திய பாடசாலைச் சித்த வகுப்பில் படித்துத்தேறும் மருத்துவகுல மாணவர்களுக்கும், தமிழ் வித்வான் பரீட்சைக்குப் படித்துத் மருத்துவகுல மாணவர்களுக்கும் தென்னிந்திய மருத்துவர் சங்கத் தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் பொன் மெடல் தருவதற்கு இசைந்திருப்பதற்கு இச் சங்கம் நன்றி பாராட்டுகின்றது.

---

## பொன்மலை சுயமரியாதை சங்கம்.

7-1-34ந் தேதி மாலை 6 மணிக்கு நிரந்தர தலைவர் தோழர் எம். வி. துரைசாமி அவர்கள் அசௌகரியத்தை முன்னிட்டு வராததினால் அறந்தாங்கி தோழர் செல்லையா அவர்கள் தலைமையில்ஒரு நிர்வாகக் கூட்டம் நடைபெற்றது. எல்லா நிர்வாகசபைஅங்கத்தினர்களும் விஜயம் செய்திருந்தனர். பிறகு தோழர்களான டி. கண்ரோஜி, எஸ். எஸ். ராயப்பன், பி. பொன்னுசாமி, எம். ஒ. காத்தான், எம். கே. லாலா, ஆர். நடராஜன், எஸ். ஷண்முகம் முதலியவர்கள் "காந்தி பகிஷ்காரத் திட்டம்" என்பதைப் பற்றி நீண்டதோர் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

பிறகு சுயமரியாதைச் சங்க கட்டிடத்தில் தோழர் ஜி. ராதா அவர்களை ஆசிரியராகக்கொண்டு "சுயமரியாதை வாசகசாலை" ஏற்படுத்துவதாக எல்லா நிர்வாக அங்கத்தினர்களும் தீர்மானித்து இருந்தனர் இதுவரையிலும் சுமார் 70 குழந்தைகள் சேர்ந்து இருக்கின்றனர். இந்த வாரத்திற்குள் ஆரம்பிக்கும்படி முடிவு செய்தி இருக்கிறார்கள். கடைசியாக சில தீர்மானம் தீர்மானிக்கப் பட்டது.

### தீர்மானம்.

காந்தியார் 10-2-34ல் திருச்சிக்கு விஜயம் செய்வதால் அன்னவரின் வருகையில் அதிருப்தி அடைந்த நாம் இம் மாதம் கடைசி வாரத்தில் இப் பொன் மலையில் ஓர் பகிஷ்காரக் கூட்டம் நடத்துமாறு இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

திருச்சி சுயமரியாதைச் சங்கத்தாரால் நடத்தப்போகும் "காந்தியார் பகிஷ்காரத்துக்காக நமது சங்கத்தின் சார்பாக வாலண்டியர்கள் உதவியைக்கோருவதால் இச் சங்கத்திலிருந்து கூடியவரையில் வாலின்பர்கள் அனுப்புவதாக இக் கூட்டம் தீர்மானிக்கிறது. என்ற தீர்மானங்கள் முறையே பிரேபித்து ஆமோதித்து ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பிறகு தோழர் ராதா, எஸ். எஸ். ராயப்பன் ஆகியவர்களால் சுயமரியாதைக்கீதங்கள்பாடின பிறகு தலைவர் முடிவுரை கூறியபின் பேபல் இரவு 8-15 மணிக்குக் கூட்டம்கலைக்கப்பட்டது.

---

## திருச்சி தாழ்த்தப்பட்ட வாலிபர்கூட்டம்.

காந்தியை பகிஷ்கரிக்க தீர்மானம்

31-12-33தேதி ஞாயிற்றுக்கிழமைமாலை5மணிக்குத் தாழ்த்தப்பட்ட வாலிபர்களின் பொதுக் கூட்டம் தோழர் டி. எஸ். பாணி அவர்கள் தலைமையில் வரகனேரி பெரியபாளையம் டாக்டர் டி. எம். நாயர் வாசகசாலையில் கூடியது. அதுசமயம் கீழ் கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தோழர் காந்தி தீண்டாமைவிலக்குப் பிரசாரம் என்கிற சாக்கில் வர்ணாச்சிரமத்தையும், இந்து மத பிரசாரத்தையும் செய்ய வருவதால் அவர் திருச்சிக்கு விஜயம் செய்யும்பொழுது தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் பகிஷ்கரிக்க வேண்டுமென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது. மேற் கண்ட தீர்மானம் நிறைவேறியவுடன் கூட்டத்திலேயே 30வாலிபர்கள் காந்தி பகிஷ்காரத்திற்கு தொண்டராகக் கையெழுத்திட்டார்கள். இன்னும் தொண்டராக சேர விரும்புவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு கடித மூலமாவது 25-1-33ந்தேதிக்குள் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

எஸ். அபிமன்னன்.<br>
பெரியபாளையம் வரகனேரி<br>
திருச்சி.

---

## கொள்ளபட்டி ஆதிதிராவிட நாஸ்திக வாலிபர் சங்கம்.

7-1-34-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம், மல்ல சமுத்திரம் போர்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் அஸிஸ்டெண்ட் உபாத்தியாயர் எ. அருணாசலம் அவர்களின் முயற்சியால்கொள்ளப்பட்டி வாலிபர்களைக்கொண்டு ஒரு நாஸ்திக வாலிபர் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இச் சங்கமானது வாராவாரம் ஞாயிற்றுக் கிழமை தினம் சாயந்திரம் தவறாமல் நடைபெறும்.

7-1-34-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு தோழர் எ. கே. மாரிமுத்து உபாத்தியாயர் அவர்களை அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அன்னவரின் தலைமையின் கீழ் கூடிற்று. அதுசமயம் 400 ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தார்கள். தோழர் எ. அருணாசலம் ஆதிதிராவிடர்களின் முன்னேற்றம் என்பதைப்பற்றி உபந்நியாசம் செய்தார். தோழர் எம். வேலாயுதம், பி. மாரிமுத்து, பி. பெரியசாமி, கே. கந்தசாமி, எம். வருதப்பன், கே. சின்னையன் முதலியவர்கள் முறையே சுத்தம், ஒற்றுமை, சுகாதாரம், மூடநம்பிக்கை, பழக்க வழக்கங்கள், தாழ்மை என்பவைகளைப்பற்றி சொற்பொழி வாற்றினார்கள். கே. எஸ் ராமசாமி உபாத்தியாயர் ஜாதிவேற்றுமை என்பதைப்பற்றி அரிய உபந்நியாசம் செய்தார். கடைசியாக எ. அருணாசலம் அவர்களால் வந்தனோபசாரங்கூற இரவு 9 மணிக்குக்கூட்டம் குதூகலத்துடன் கலைந்தது.

### சங்க நிர்வாகிகள்.

பிரஸிடெண்ட்:- எ. கே. மாரிமுத்து.

காரியதரிசி, பொக்கிஷதாரர்:— எ. அருணாசலம்:—

தொண்டர் படைத்தலைவர்கள்:— எம். வேலாயுதம், பி. மாரிமுத்து, எம். வருதப்பன், கே. கந்தசாமி.

## பல்லடம் பொதுக்கூட்டம்.

பல்லடம் ஆதிதிராவிட சேரியில் 7-1-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஆண்களும், பெண்களும், மாணவர்களும் சுமார் 500 பேர்வரை குழுமி யிருந்தனர். அக் கூட்டத்திற்கு கோவை தோழர் எஸ். எ. மாணிக்கம் அவர்கள் தலைமை வகித்தார். மாணவர்கள் கீதம் பாடிய பின் லேபர் ஸ்கூல் ஆசிரியர் கே. மயில்சாமி அவர்கள் காந்தி பகிஷ்காரம் என்பது பற்றி நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினார். தலைவர்முடிவுரையில் நாஸ்தீகத்தைப்பற்றியும், காந்தியாரின் தீண்டாமை விலக்கு பிரசாரத்தைக் கண்டித்தும் அறியதோர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டு கூட்டம் 8-30 மணிக்கு இனிது கலைவுற்றது.

---

## நோட்டீஸ்.

ஈரோடு முனிசிபல் சங்கத்தார் லார்டு நேபியர் வீதி ட. ச. 1405/1 பெம்பரில் 818 ச. அடி நிலத்தை சு, நாராயண பிள்ளைக்கும், 772 ச. அடி நிலத்தை எம். அசன் முகமது சாயபுக்கும் 3 வருஷத்திற்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 6. வாடகை வீதம் குத்தகைக்குக்கொடுப்பதாக முறையே 29-9-33ந்தேதிய 220(9) நெம்பர் தீர்மானத்திலும் 31-10-33ந்தேதிய 254(2) நெம்பர் தீர்மானததிலும் முடிவுசெய்திருக்கிறார்கள். இது விஷயமாய் ஆக்ஷேபனை யுள்ளவர்கள் ஈரோடு முனிசிபல் கவுன்சில் சேர்மென் அவர்களுக்கு எழுத்து மூலமாய் இந்த நோட்டீஸ் கோயமுத்தூர் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்த 1மாதத்திற்குள் தெரியப்படுத்திக் கொள்ள வேண்டியது.